உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இளசைப்புராணம்

திருக்கைலாயபரம்பரைத்

திருவண்ணாமலையாதீனத்து

வித்வான்

ப்ரம்மஸ்ரீ

கணேசபண்டிதரவர்கள்

இயற்றியது.

இஃது,

இளையாற்றங்குடி நகரத்தாரால்

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

மன்மத௵ சித்திரை௴.

உ

சிவமயம்.

விஞ்ஞாபனம்.

மலர்தலை யுலகின் மாண்பெருங் கேள்விப் பலமிகுந் துயர்ந்த பாவலர் நயந்த தொகுத்தல் விரித்தறொகைவிரி மொழிபெயர்ப்பெனப் படுகின்ற நால்வகை நூல் யாப்பினுள் மொழிபெயர்த்தல் யாப்பானூல் செய்வான் றொடங்கிய கந்தபுராண நூலாசிரியர் முதலியோர் சிலபாகந் தொகுத்துஞ் சிலபாகம் விரித்தும் வேண்டும் விகற்பங்கூறியும் நூலியற்றினர் சேதுபுராண நூலாசிரியர் முதலியோர் வடமொழியி லிருந்தவண்ணமே தழுவி யியற்றினர். இங்ஙனமாக: இளையாற்றங்குடி நகரத்தாரும் அவர்களாசாரியவரும், பிரமாபனோதனபுர மான்மியமென்னும் வடமொழி யிளைசமான்மியத்தைச் சேதுபுராண முதலியனபோலத் தமிழின் மொழிபெயர்த்தியற்றித் தரல்வேண்டுமென்றமையால், யான் அதனை யங்கிருந்த முறையே மொழிபெயர்த்துச் சிற்சில விடங்களின் வேண்டும் வருணனைகளுஞ் சேர்த்துப்

பன்னிரண் டத்தியாயங்களையும் பன்னிரண்டு படலங்களாகப் பாயிரந் திருநாட்டுப்படலந் திருநகரப்படலமென்னு மிம்மூன்றையும் முன்னேவைத்து இளைசைப்புராணமெனப் பெயரிட்டு இந்நூலை யியற்றினேன். ஆதலின், இந்நூலின் வருஞ் சரித்திர நடைகளுஞ் சம்பிரதாயங்களும் பிறவும் வடமொழிப் பாலனவேயா மென்பதைத் தெரிவிக்கின்றேன்.

இங்ஙனம்

க. ப.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.
2869

உ
கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இளசைப் புராணம்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

காப்பு.

சிவமெனும் பொருட்டாய் மூன்று திகழெழுத்
துடைத்தாய் நின்ற, வுவமையில் பிரணவத்தை யுல
கெலாந் தெளிய வாங்கே, கவளமா யூதுந் தேவு கலந்
ததோ ருருவங் கொண்டு, நவமுற வுதித்த முன்னோ
னற்பதம் போற்றி வாழ்வாம். (க)

பரசிவம்.

வேறு.

அருவினையு முருவினையு மருவாரு முருவினையும்,
வருவினையுஞ் செல்வினையும் வரைவாரும் பெயரி
னையு, மிருவினையு நினைவினையு மெதிராரு மறப்பி
னையு, மொருவினையு மொன்றாத வொருவனைநன் குள்
ளிடுவோம். (உ)

பராசத்தி.

தெரிவரிய நிலைதலந் தெற்றுமணித் தென்ளோசை, பொருப்பரிய பூவாசம் புனைமணியின் பொலி பொளிபோற், கரவரிய கலைப்பொருளாங் கடவுளிடைக் கலந்தமரும், பரவரிய பரையினது பதமுளத்திற் பதித்திடுவாம். (௩)

கைலாயநாதர்.

உமையாளையொருவாமையுறவிருத்தியுலகுய்யக்
கமையாளுங்கயிலாயக்கடிவரையிற்காட்டிருவ
மிமையாளுமிருவிழிகளிட்மாரவிந்தருளி
நமையாளுங்கயிலாயநாதனடிநண்ணிடுவாம். (௪)

நித்தியகல்யாணி.

சித்தியலுஞ்சிவைக்கன்றிச்சிவனிடத்திற்சீவர்தமை
யுய்த்தியலமொல்லாமையுணர்வுறக்கண்ணுவமுனிக்
சத்தியலுஞ்சங்கரனுற்சால்சுபத்தைச்சார்வித்த [ருச்
நித்தியகல்யாணிபதநெஞ்சகத்துநிறுத்திடுவாம். (௫)

சபாநாயகர்

வேறு.

சிருட்டிதிதி சங்கார திரோபவா நுக்கிரகச் செய லெவ் வைந்து, முருட்டிகழ்வார் துடியபய மழலூன் றுங் தாளுயர்த்து மொண்டா னென்னும், பொருட் டிறஞ்சே ரானந்த பூரணமார் தனியுருவப் புனித மூர்த்தி, யருட்டிறத்த வோங்கார வாச்சியனு யருளு நட மகத்துள் வைப்பாம். (௬)

தக்ஷிணாமூர்த்தி.

வரமருவு சனகன்முதன் முனிவர் நால்வருக்கு மருட்கைதீரத், திரமருவு சிவசிவ வைத்தியமா மெய்ப்பொருளைத் தெரிக்கும் போதக், கரமருவு நிலைகாட்டிக் கல்லாலின் கீழிருந்து காட்சி தந்த, பரமகுரு மூர்த்திப்த பதுமயுகம் பணிந்துபுவம் பாற்று கிற்பாம். (எ)

விநாயகக்கடவுள்.

வேறு.

சயசய வென்று போற்றுஞ் சால்புடை யன்பர் செய்யுஞ், செயலுறு மூற்றுவெற்புச் சிதைக்கும்வச் சிரமா யன்னோர்க்; கினியதரு பொருளை யெல்லா மீந்தருள் கின்ற தொல்லைக், கயமுகம் படைத்த மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம். (அ)

வைரவக்கடவுள்.

உயிரவ மொழிக்கு மொணகை யுதிரமார் கபாலங் காட்டக், * கயிரவ முனிச்செம் மேனி கருமணிக் கவசங் காட்டச், செயிரவ னென்னுங் காட்சி தீவினை யகற்றல் காட்ட, வயிரவ மூர்த்தி கொண்ட வடிவினை வணக்கஞ் செய்வாம். (கூ)

சுப்பிரமணியக்கடவுள்.

பொருட்கடல் வேதமூலப் பொருளையு முயிர்க்கட் குள்ள, மருட்கட லகற்று மாக மப்பொரு டனையு மான்ற, கருட்கடல் பருகி னோனுக் கமைதரக் கரு

---

* கயிரவம்—செவ்வாம்பல்.

ணை செய்த, வருடகட லாய செவ்வே ளருஞ்சழ லகத்திற் சேர்ப்பாம். (௧௦)

சரசுவதி.

வெல்லும்வெவ் வினைகள் வீட்டி வீட்டினை விளைக்குஞ் செய்கை, வல்லவாய் கலைகளுக்கு வயங்கொரு வடிவ மாகிப், பல்லுயிர் நாவு தோறும் பயின்றுநின் றருளா நின்ற, சொல்லினுக் கிறைவி பாதந் தொழுதுசொற் பொருள்க டேர்வாம். (௧௧)

திருநந்திதேவர்.

எந்தைவீற் றிருக்குங் கைலை யிருங்கணத் தலைமை பூண்டுஞ், சந்தநான் மறையின் வாய்மை சாற்றுபல் புராண மிம்பர், வந்திட வருளா வீந்து மாணலம் புனைந்து நின்ற, நந்தியம் பெருமான் பாத நளினமா மலர்கள் போற்றி. (௧௨)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

மீனசம்பந்தம்போலவியனுயிரளித்துநோக்கா
ஞானசம்பந்தநீக்குமுறைமையருள்ஞானமாம்பாற்
றூனசம்பந்தத்தாலேதனிமுதல்பாடிப்போற்று
ஞானசம்பந்தமூர்த்திநல்லடிமுடிமேற்கொள்வாம். ()

திருநாவுக்கரசுநாயனார்.

தேவினுக் கரசா முன்னைச் சிவன்றிரு வடிகளுன்னிப் பாவினுக் கரசாம் பான்மைப் பதிகங்கள் பகர்ந்து சைனப், பூவினுக் கரசுசெய்த பொருவிறுன் பகன்ற சீர்த்தி, நாவினுக் கரசுநற்று ணாறுமலர் சிரமேல் வைப்பாம். (௧௪)

சுந்தரமூர்த்திநாயனார்.

அந்தர மூர்த்தி ருச்சே ரணங்கினைப் பொருளாக் கண்டு, மந்தர மூர்த்திக் கொங்கை மங்கைமேன் மயங்கா வண்ணம், வந்தர மூர்த்தி தானே வலிந்துவந் தடிமை கொண்ட, சுந்தர மூர்த்தி பொற்றாட் டுணையகந் தலைமேற் கொள்வாம். (௧௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

வேதவூரரசுசெய்யும்விண்ணவர்க்கிறைவசத்தி
நாதவூரரசன்பாய்மாநண்ணுவானுற்றுந்துன்பம்
போத*வூரருணல்கென்னைப்புரிந்தவனருளைப்பெற்ற
வாதவூரடிகள்செந்தாமரையடிசென்னிவைப்பாம். ()

திருத்தொண்டர்.

வேறு.

இலகுபரும புவனமெலா மீறுபெறுந் தன்னருளா லியங்கி நிற்ப, நிலவுமொரு பரமபதி நிறைபரம சிவனொன்று நிலேபே றுற்றுச், சலமகலுஞ் சாலோகத் தலையுதவுஞ் சரியாதி சதுர்த்தா பாதஞ், செலவொழுகிச் சிவனடிசேர் திருத்தொண்டர் திருவடிகள் சிரமேற் சேர்ப்பாம். (௧௭)

முதனூல்வந்தவழி.

வேறு.

இறைவனு ரருள்சேர் நந்தி யிசைத்திடச் சனற்கு மார, னறைதர வியாத னென்னு மருந்தவ னறிந்து

*ஊரதல் - பரத்தல்.

கூற, முறையினிற் றெளிந்த சூத முனிவரன் முனி
வர்க் கோதும், துறைகெழு புராண மூவா றென்பது
ணுணர்ந்த தொல்லோர். (௧௫)

அன்னமூவாறினுள்ளுமகிலநாயகனுமீசன்
றன்னுயர்புராணம்பத்துச்சாற்றியவவற்றுளொன்று
முன்னரும்பிரமாண்டப்பேருத்தமபுராணமாங்கண்
மன்னியவிளசைமேலாமான்மியம்வகுக்கப்பட்ட. ()

நூல்செய்தற்குக்காரணம்.

அப்பெருமான்மியத்தையரவணிசடையினார்தஞ்
செப்பருமுகத்தில்வந்தசீர்கெழுகுரவன்றானு
மெய்ப்பெரும்புகழும்வாய்ந்தவிளசைமாநகரத்தாருந்
தப்பருந்தமிழின்பாவாற்பாடியேதருகவென்றார். ()

அனையவரன்பினாலேயறைந்திடும்வார்த்தைதன்னை
நினைவுறக்கொண்டியாதுநிகழ்ச்சியுமாராயாது
பனுவலினியல்புதேர்ந்துபாடுதலுணராதேனுந்
துணிவிலாவாசைநின்றுதூண்டிடப்பாடலுற்றேன். ()

அவையடக்கம்.

இலக்கண வரம்பு நல்ல விலக்கிய வரம்புந் தேறாப், புலத்தினி லெங்ஙன் பாடப் புலவர்போற் புகுந்தா யென்னின், மலைப்பிலென் பொருட் டா லன்றே வழூ உமமை வொன்று முன்னோர், விலக்குறா தருளி னாலே வேண்டிய தென்று சொல்கேன். (௨௨)

சொல்லெலா மெம்பி ராட்டி கொல்லுருப் பொ ருள்க ளெல்லாம், வல்லவெம் பெருமான் றெல்லை

வடிவமேயாதலானும், புல்லுமன்னவர்பொற்காதை பொருந்துதலானும். தேர்ந்த, நல்லவர் இழியேன். பாவினைவசொளர் பரிந்துகாப்பார். (௨௩)

குற்றமுங்குணமும்யாண்டுங்குறுகிடுங்குற்றமின்மை
யுற்றிடலரிதேயோரினுயர்ந்தநற்புதுமந்தாங்கும்
பற்றுடைநாளமுள்ளாற்பல்கியதிலையவாற்றாற்
கற்றவரொன்பாக்குற்றங்கருதிடார்குணமாக்கொள்வார்.

வேறு.

விழுத்தகுங்கதிவின்னுளோர்வழிபடும்வன்னிக்
குழுத்தனுப்பிரான்புவியுளோர்பூசையுங்கொளலாற்
பழுத்தவன்புடைப்பாவலர்பாடலேயன்றிப்
புழுத்தநாயினுங்கடையனேன்புன்சொலுங்கொளுமே.

சிறப்புப்பாயிரம்.

வேறு.

"முறைதிகழ் பாண்டி நாட்டின் முதிர்தல மாகி நின்ற, மறைதிக ழிளைசை மேலா மான்மியந் தமிழாற் செய்தா;" னிறைதிகழ் வடநூ றென்னூ னிலைவலோன் சுருதியாளன், பொறைதிகழ் தருக ணேச பண்டிதன் புகழ்மிக் கோனே. (௨௪)

பாயிர முற்றிற்று.

திருநாட்டுப்படலம்.

சீர்மலிந்திடுங்கலைநன்றுயகச்செம்மல்
வார்மலிந்திடுவனமுலைமங்கலையுடனே
நேர்மலிந்திடுமிளைசையயகந்தழீஇநிலவும்
பார்மலிந்திடுபாண்டிநாட்டணிசிலபகர்வாம். (க)

குலந்தரும்பலவுயிர்க்குநல்லருள்செயுங்கொள்கை
புலந்தரும்படிபூழியன்பூவையைமணந்து
நலந்தரும்பிரான்முடிநவிந்தரசியனடாத்தப்
பலந்தருந்தவம்புரிந்ததுபாண்டிநன்னாடு. (உ)

மாலினுந்தியந்தாமரைமலர்மிசைவேதா
வாலுமாமறையிசையொடுமமர்தல்போற்பொதிய
மேலிசைத்திசைதமிழொடுமகத்தியமேலோன்
பாலினேங்கிடப்பயில்வதுபாண்டிநன்னாடு. (௩)

கொன்றையந்தொடைக்குழகனுங்குமரவேடானு
மன்றுமுத்தமிழ்ச்சங்கமேல்வீற்றிருந்தருளி
மன்றவாய்த்தமிழ்வாய்ந்தலிற்செந்தமிழ்நாடா
நன்றிசேர்பெயர்நணியதுபாண்டிநன்னாடு. (௪)

பொருநைவைகையேகுமரியேபொருவில்வெள்ளா
மருவுதேனதிமுதலியவருபுனனிறைக [றே
டரணிமங்கைமார்பணிந்தபன்மணிதிகழ்தாமம்
பரவுபான்மையிற்பொலிவதுபாண்டிநன்னாடு. (௫)

நன்மைவாய்ந்தது நனிவளம்வாய்ந்தது நசையுந்
தன்மைவாய்ந்தது தகவருள்வாய்ந்தது தணவா
வன்மைவாய்ந்தது வண்மைகள்வாய்ந்தது மக்கட்
பன்மைவாய்ந்தது பலர்புகழ்பாண்டிநன்னாடு. (௬)

பூதியாகிய சாலிகைபொலிவுறப்பூண்டே
யோதுமைந்தெழுத்தாகிய வொண்படைதாங்கிக்
கோதிறுற்றவத்தானைகள்கோலியேபிறவிப்
பாதகப்பகைசாய்ப்பது பாண்டிநன்னாடு. (௭)

எங்குமாமறையாகமமெங்குமெய்ப்புராண
மெங்குநால்வர்வாய்த்திருமொழியெங்குமாலயங்க
ளெங்குமோன்சிவபூசைகளெங்குநல்லறங்க
ளெங்குமேநிறைபாண்டிநாட்டிபல்சொலவெளிதோ.

மழை.

கண்ணுவன்றனைக்கெம்பிரானுறைத்தருள்கங்கை
நண்ணுமாறெனவாரிதிநண்ணிநீர்பருகித்
துண்ணெனுவருள்சுரர்க்குதல்பேறுறக்கரங்கொடாருசேது
வண்ணதீர்த்தமுன்வந்தெனவந்தனமேகம். (௯)

எங்கணாயகனிளவலுந்தெகற்றதோர்தேவி
யங்கமீதுவெப்புறுத்தவெங்கோடையாமரியைப்
பங்கமாக்கியேவேரொடுபறிக்குதுமென்றுப்
பொங்கியேயுருத்துரப்புதல்போலவேமுழங்கி. (௧௦)

கொற்றவாளினைவிதிர்த்தெனமின்னலேர்குலவப்
பெற்றுவில்லினோடுற்றிடும்புனல்பெருகப்
பற்றியாகவகிலத்தினிற்படருதல்கடுப்பப் [இ-
பொற்றையாம்பொதியத்தினிற்பொருக்கெனப்போ

வருணனேவியவன்மழைமாரியையிலக்கக்
கருணையங்கடலாகியசுந்தரக்கடவு
டரணியுய்ந்திடவிடுத்தநீர்ச்சலதரங்கண்மே
லரணமானபோன்மலைமிசையடையவுமொய்த்து. ()

கோடையுட்கிடவச்சிரக்கோனிரையன்ன
பீடுறும்புனற்றுரைகள்கயிலையம்பெம்மான்
வாடுமோருயிர்வன்றுயர்மாற்றிடமதித்து
நாடுமின்னருள்பொழிந்தெனப்பொழிந்தனநன்றே.

பொதியமீமிசையொலிகெழுபுயன்மழைபொழிதல்
கதியையீந்திடுங்கயிலையங்கரனன்முடிமேன்
முதியவானவர்முன்னவன்றுறையிசைமுன்னு
விதியமஞ்சனமாட்டுதல்போன்மெனமேவும். (௧௪)

மலையி டந்தொறும் பொழிந்தன மரமிகு பழுவத், தலையி டந்தொறும் பொழிந்தன தடம்பொலிகழனி, நிலையி டந்தொறும் பொழிந்தன நெடுங்கழி சூழு, மலையி டந்தொறும் பொழிந்தன வளமலிலார் கொடைபோல். (௧௫)

எங்குமாமழைபொழிதலுமிறைகொள்வெங்கோடை
மங்கியேயழிந்தொழிந்ததுசெய்யகோன்மன்னன்
பொங்கியேயெழுந்துற்றுழிப்புன்மைசெய்குறும்பர்
தங்கிவாழ்ந்திடவல்லரோசற்றுமவ்விடத்து. (௧௬)

துய்ய வான்மழை சொரிதலும் வெவ்வழறுலைதல், செய்ய வார்சடைச் சித்தர்தம் பிரானருள் செய்யு, மெய்ய ஞானமே லெழுதலும் விழைசுபத் திர

லைப், பொய்யின் மைந்தரை யவிச்சைவிட் டொழிந்
திடல் புரையும். (கஎ)

கழுமலத்துறையொத்ததுகணமுகில்கடணீர்
தொழுமறைப்பரைதொன்முலைப்பாலினையொத்து
தெழுமழைப்பெயலிசைத்திருப்பாடலையொத்த
விழுமடச்சமணொத்ததுவிரவுவெங்கோடை. (கஅ)

முகில்கள்பெய்திடுநீரெலாமெங்கணுமொய்த்து
மிகுதல்கொண்டிடுமுகங்களின்மேவியேபோதல் [ந்
பகைகொள்வெப்பமெங்காயினுமொளித்துறல்பயிலு
தகவினன்னதுபார்த்துமென்றடைதல்போற்சாலும்.

கரையிலானருளம்பற்றவர்கருதுமானந்தம்
விரையுமுள்ளமேயாமெனமேகநன்னீரால்
வரைநிறைந்தனவனங்களுநிறைந்தனவயலி
னிரைநிறைந்தனநெய்தலுநிறைந்தனமன்னே. (உ0)

பயன்படார்களும்பண்பினர்பாற்படிற்பெருகப்
பயன்படும்வகைபெறுகுவரென்பதுபார்த்தாம்
பயன்படாவுவர்நீர்முகிற்பாற்படூஉப்பெருகப்
பயன்படும்வகைபெற்றனபடியுளோர்யார்க்கும்.(உக)

மழையின் வெள்ளமே யெங்கணு மணாந்துசூழ்ந் தோன்றித், தழையும் வெண்ணிறஞ் சாலவும் படைத்திடுந் தன்மை, குழையும் பூமகள் குளிர்பொருண் மெய்யினிற் சேரலி, விழையும் வெண்படா மொன் றினைப் போர்த்தென மிளிரும். (உஉ)

பெய்யுமாமழைப்பெருக்கினுற்செழித்திடப்பெற்று
வையமேத்திடும்பாண்டிநாடதன்வயின்மருவல்
செய்யுநானிலத்தைந்தினையியதிறத்துட் • [வாம்.
நொய்யுமேனலார்குறிஞ்சியின்கொள்கையக்குயில்

குறிஞ்சி.

எந்தைமாமலையிடங்களினிருந்திடல்செய்யு
மைந்தன்யானுமப்படிசெய்வன்மாணெனமதித்து
வந்துமால்வரைதொறுந்தொறுங்குமரவேள்வைகு
தந்தைசெய்கையைமைந்தனுஞ்சார்வதுதகவே. ()

வதுவைவேண்டிமான்றேலொடுபூணுநூன்மார்பிற்
றதையுமாணிகள்பற்பலர்சேயையுட்டரித்து
முதிர்தவம்புரிந்துறைந்திடல்போலுமேழ்கிலோ
டுதவுகின்றநீரருவிசேர்ந்துற்றிடும்வரைகள். (உரு)

இரவின்மேலொருபுடைமதியிலங்கிடக்கீழே
கரியகல்லுறுசோதியந்தருவினோர்காட்சி
பிரமனுகியவெகினமுமரியெனப்பேசு
மரியுந்தேடநின்றருள்சுடரமலனைநேரும். (உசு)

சந்துகாரகிற்றருக்களைத்தழலெரிமடுத்து
வந்தபுன்பயிர்வளர்க்குவர்குறும்பொறைவாணர்
முந்திடுந்தரந்தெரிகிலார்முற்படினுயர்வு
வந்துதாழ்வெனத்தாழ்வுயர்வெனவேநண்ணும். ()

திணிகொண்மெய்யுடையிறவுளர்தினைகளையரியக்
குணிலுறுங்கரக்கொடிச்சியர்சிறுகுடிகுறுக
மணிகொளுங்குறிதோற்றியேயலர்வனவேங்கை
கணியெனும்பெயர்பெற்றதிக்காரணம்போலும். ()

சோகமாக்குறுமாரவேளம்பெனத்துயர்கூர்
தீகெழலெய்துவையசோகமாநிகழ்பெயரென்று
வேகமோடவண்மாதரார்மேவியேயுதைப்ப
வாகுமொய்யலர்கொள்ளுவவடைபொதுள்பிண்டி.

குறத்திமார்முலைக்கோட்டினுக்கஞ்சியேகொண்மூத்
திரத்தைமேலுறக்கொண்டனகரந்திடுஞ்செல்லா
வறத்தமாமலைக்கோடுகளெறியுஞ்செல்லு
மறத்தமாமலைக்கோடுகள்விளர்த்திடுமன்றே. (கூ0)

கலையாம்வழிநண்ணுவோராயினுங்கருதுங்
கலையாம்வழிநண்ணுவரல்லராய்க்கதிர்கொள்
கலைவாழ்வினேவுழுந்துவர்கன்முலையாரக்
கலைவாழ்வினினமுழுந்துவர்கானவரானோர். (கூக)

பள்ளமாக்கியேகிழங்கெழப்பறித்திடுமாழ
ளொள்ளவீர்மணிவருதலுமெடுத்தெடுத்தெறிவார்
வள்ளிநாயகியம்மையாமணியினைத்தம்பாற்
கொள்ளுமற்றவரிவற்றையுங்கொள்வரோகொள்ளார்.

நாடுறுந்தகைநாயகியுமையவணயந்து
வாடுறுந்தவவங்கியின்வடிவமுற்றருளிப்
பாடுறும்புகழ்ப்பரமனார்பரிந்தருள்செய்த
கோடுறுங்கொடுங்குன்றினையுடையதுகுறிஞ்சி. ()

அன்பினாலுமையூர்டவற்கிவ்வழியணங்கை
முன்புநல்கினோனார்த்தியெய்நெறிவினையமுன்னித்
தன்பெருங்கிளையானமயிலகவுதறவிராத்
தென்பரங்கிரிதன்னொடுந்திகழ்ந்துவாய்ந்திடுமால் ()

மாலயன்றனதூர்தியையுவமையாந்து
கோலமஞ்ஞைதன்னொருதனிவடிவினிற்குமர
மேலவன்றிருக்கருணையேமெய்யெனமேவச்
சாலுமாமயின்மலையையுந்தன்னிடத்துடைத்தால். ( )

காதுவேல் * வளைதமிட்டிரற்காய்ந்துமிக்குருள்கூர்
நாதனாகியவிநாயகனகருநல்லருளான்
மாதமிட்டிரன்வலிகவர்வைரவனகரு [பார்.
மீதுகொண்டதாற்குறிஞ்சியின்பெருமையார்விரிப்

முல்லை.

வேறு.

கொன்றையுந் தும்பை தானுங் குலவுகூ விளையுங்
கோலந், துன்றிய வறுகும் யாறுந் துவன்றியே துலங்
கும் வண்ண, மொன்றுறக் கொண்ட கொள்கை யுல
ப்புறா திருக்குங் காடு, தென்றலந் தேரார் செற்ற
சிவன்றிருச் சடைக்கா டொக்கும். (௩௭)

நெருங்குறுமண்டர்சூழ்நிறைநெடுமலருங்காயா
வொருங்குசாரூபமுற்றவுத்தமர்நிலைமைகாட்டத்
தரங்கெழுதுளவஞ்சூடுந்தலைவன்வீற்றிருத்தலாலே
வரங்குலாவுற்றகானம்வைகுந்தநிகர்க்குமாமே. ( )

குலந்தருமலர்ப்பூங்காயாக்குலவுறுபிருந்தையைத்த
லஞ்ந்தரக்கொள்ளுநீரான்மாயவன்றன்னைநேரு [ன்
நலந்தருபாடிமாதர்நாசிக்குத்தோற்றுக்கூம்பி [றே.
பலந்தருநீராற்கூம்பலாம்பெயர்குமிழ்கொண்ட

* வளைதமிட்டிரன் - வக்கிர தமிட்டிரன்.

கற்பென விலற்றி லேதிப் பெயரெவன் கலந்த வெ
ன்றாட், கற்பினர் நகைப்பப் பூக்குங் கற்பெனும் பெ
யர்கொண் முல்லை, கற்பினென் பொருளீ தாமே
கருதுநம் மூரற் சீர்தேர், கற்பினை மடைத றோதீ
ரொனநகை காட்டல் போல. (சo)

பசுதிரையெழுதலானும்பலதருத்தோன்றலானு
மிசையமுதுறுதலானுமிக்கதேமருவலானு
மிசைவுறுமண்டரானுமிறைபெறுதிருமாலானும்
வசையில்பாற்கடலையொத்தேமருவிடும்புறவமன்றே

ஒருபுறங் கொன்றை பூப்ப வொருபுறங் காயாப் பூ
ப்ப, மருவியே நடுவட் பூத்த மலர்கெழு பலாசின்
றோற்ற, மொருபுற மலரோன் றோன்ற வொருபுற
மாலோன் றோன்ற, மருவியே நின்ற வெங்கள் வள்ள
லாஞ் சிவ்னே போலும். (சஉ)

அட்டுறு சுவைப்பா லுண்டா மளையுண்டாம் வெ
ண்ணெ யுண்டா, மட்டிய ரிழுது முண்டாம் வனத்
தில்வா றுண்டாலே, முட்டிலா திந்த வண்டர் முடி
க்கல ரவற்றை யாங்குக், கிட்டுவ மெனவுந் துற்றுன்
கீரவே லையமா னீங்கி. (சங)

விழைதரு கோப மன்றி வேறொரு கோப மில்லை,
குழைவுறு களவே யன்றிக் கூறிடுங் களவொன் றில்லை
பொழிநிலா மதிக்கோ ளன்றிப் புன்கணோய் மதிக்கோ
ளில்லை, பழியின்மான் மருட்சி யன்றிப் பகரொரு
மருட்சி யில்லை. (சச)

எள்ளொடுபயறுசாமையிறுங்குநற்றுவரைசிம்மை
கொள்ளொடுவரகுகூறுங் கூலமேயாதியாக
வுள்ளபல்வளமும்பாலையுள்ளிட்டுள்ளனவும்யாவுந்
தன்ளறமிகுமேயென்றுற்றளர்வவண்யாதுகொல்லோ

தெய்வமொன் றிருக்கும்பாலே சிறப்புடைத் தென்பர் மேலோர், மெய்வரத் தேவ ரொல்லா மேவுறு பசுவொன் றேயோ, வெவ்வமி லெண்ணி லாத விருந்தன கானத் தூடே, நைவறு பெருமை தன்னை யாமெவ னவில வல்லோம். (சசு)

வானப்பேர்கொண்டவேணிவள்ளலார்மலையமீன்ற
ஞானப்பேர்முலையாளோடுநயந்துவீற்றிருந்தாங்க
ணானப்பேரயர்வுநீக்கியுய்தரவருளாநின்ற
கானப்பேருடையதென்னிற்கானியல்கூறற்பாற்றே

எல்லையில் கருணை யோடு மெம்மையா ளிறைவன் வைகும், தொல்லையா டானை தன்பாற் றுலங்கவே தவஞ்செய் துற்ற, முல்லையம் பெருமை தன்னை மொழிந்திட வல்லார் யாரே, யொல்லுநன் மருதச் சால்பை யுணர்ந்தவா வுரைக்கலுற்றும். (சஎ)

மருதம்.

அரம்பைகடருக்கடேனுவம்புயம்பணிலஞ்சோதி
பரம்புறுமணிகளோடும்பானமாங்கிளைஞரோடுங்
கரம்பயில்குலிசப்புத்தேள்கவினவீற்றிருத்தலாலே
வரம்புயர்மருதவைப்புவானுலகொத்ததாமே. (சஅ)

மலயமா மலையிற் றோன்றி மருங்கிரு லயங்க ளன்றி, யலைகெழு கரத்தாற் சந்து மாறுமு மைந்துந் தேறும், பொலியுமா மதநீர் வீசிப் பூந்துணர் பொழிந்து மிக்க, வொலியொடு மடியார் போல வொழுகுறும் பொருநை யாறு. (ருo)

அன்றொரு பூதத் திற்கா லடைந்துளோ ரெந்தன் வண்மை, யின்றுமற் பலபூ தங்க ளடைக்குமே யின்பஞ் சாரச், சென்றிடு கின்றே னென்னுத் திரைப்புனற் பெருக்கு மிக்கு, வென்றியின் வந்த தென்ன விளைந்தெழுந் ததுநல் வைகை. (ருக)

பொதியமா முனிவன் முன்னாட் புரிசடைப் பெருமான் றன்னை, மதுவினு லாட்ட லோடு மற்றது பெருக்க மிக்கே, துதிமது நதிப்பேர் பெற்ற தொன்னதி யிளைசை மேய, பதியருட் பெருக்குப் போலப் பரம்பியே பெருகிற் றம்மா. (ருஉ)

சிவனிடைப் பயன்கொள் டருஞ் சிவனருள் வழிப்பட் டோர்பா, லவமறப் பயன்கொள் வாரு மாமென மனுறயி னீராற், றவநிறை யேரி தாமுந் தருமமை நிறைந்த யாற்றாற், கவையுறு மேரி தாமுங் கணிப்பிலா திருக்கு மன்றே. (ருங)

காண்புறு பவர்க ளீது கடல்கொலென் றயிர்த்துத் திம்பான், மாண்புறு நீரை யள்ளி மாந்திய பின்னர்த் தேறி, யேன்படு மேரி தானு மீதெனத் துணிய நின்றே, யூண்பய னுதவு கின்ற வுளைத்திடும் பலவாங் கண்வாய். (ருச)

நதியிளே ரியினும் வந்த நறும்புனல் வெள்ளம்
போந்து, மதகினூ டிளைபோடம் பாந்தள் வகையெ
னப் புகுந்து பண்ணை, விதமுற நிறைந்தி யாண்டு
மேவியே யுயிர்க டோறும், பதியெனு மீசன் மல்கிப்
பரவுறு நிலைமை தேற்றும். (ருரு)

நீர்விடா யுடையார் தண்ணீர் நேர்ந்துழிப் பருகித்
தாகந், தீர்வுற வுளங் குளிர்ந்து திகழ்முக மலர்தல்
போலச், சார்வுறு வெள்ள நீராற் றடம்பணை குளிர்
ந்து பொங்கிப், பார்விட ரொன்றி யோங்கிப் பொ
லிந்தன பழனை மெல்லாம். (ருசா)

நல்குர வெய்தி நின்றோர் நன்னிதி கண்டாற் போ
ல, வெல்குறு விரக மிக்கோர் மெல்லியர்க் கண்டாற்
போலப், பல்கொரு நாள்வெஃகி குற்றோர் பாற்படக்
கண்டாற் போல, மல்குநீர் வருதல்கண்டு மகிழ்ந்த
னர் மள்ள ரெல்லாம். (ருஎ)

நன்னிதி முதலா முன்னர் நவில்பொருள் பெற்ற
காலை, யன்னவ ரறத்தை யாற்ற வனுபவஞ் செய்ய
வாய, முன்னினர் முயலு மாபோன் முனைகொழு
கலப்பை யேந்திக், கன்னெடுந் திரடோண் மள்ளர்
கலந்துழ வமைந்து சூழ்ந்தார். (ருஅ)

நுகங்கொள வேர்க்கால் சேர்த்தி நோன்பக டெரு
து பூட்டி, முகங்கொளு மேழி தன்னை முகிழ்தரு
மிடக்கை பற்றி, நகங்கொளும் வலக்கை யோர்கோ
லலமுறப் பற்றி வாயா, லகங்கொளு மருதம் பாடி
யார்வமோ டுழுத லுற்றார். (ருகூ)

நடம்பனை மாக்க ணின்று சால்செழ வுழுத போ
ழ்து, இடம்படு மணியும் பொன்னுந் திகழ்ந்தெழுந்
தொளிர்ந்து தோன்றி, யிடம்படு பூமிநாம மிரத்தின
கருப்பை யென்று, முடம்படு வசுதை யென்று முற்
றகா ரணத்தைக் காட்டும். (சுO)

நாமுறு நிலத்திற் கின்ன னன்னயா மிருத்த லெ
ன்னென், றேமுறு வீரர் போல வெழுந்துமேற் பா
யுஞ் சேல்க, ளுமையிங் கிருந்தி யாமென் செய்துமெ
ன் றழுங்கி யேங்கி, யாமைக ளொளிக்குஞ் சென்றே
யாற்றலில் லார்கள் போல. (சுக)

உழவர்கள் மாறி மாறி யுழுதலும் புற்க ளாகி, யழி
தரக் குழுவி னிங்கு மறிருரிற் றனித்துத் தொண்
டர், குழைதரு முளை மென்னக் குழைந்தொரு மா
யை யெங்கும், தழைதரல் போலச் சேறு தழைந்த
ன மருத மெல்லாம். (சுஉ)

சீடர்தமுளத்தைச்செப்பஞ்செய்திடுங்குரவர்மான
மேடவனீங்கச்செய்யுள்விரிபரம்பழுத்தியொப்பு
நாடிநன்றுளின்மேகநாயகற்போற்றிச்சாறு
நீடநன்முளையிட்டென்னநென்முளைவித்தினார்கள். ()

முளையெலாம் வெள்ளி போல முளைத்தலும் பசி
தேர் தாய, ரிளமகார்க் கூட்டும் பால்போ லேற்றநீர்
பருவத் தூட்டக், கொளுமவை மரக தம்பொற் கு
லாவியே பசந்த * வாயில், லுளபுயற் றன்மை யீண்டு
முற்றிடன் முறைமைய யன்றோ. (சுச)

* வாயில்—காரணம்.

உயிர்களைப் பருவ நோக்கி யுற்றபல் புவனந் தோ
றுஞ், செயிர்களைந் தமரும் வண்ணஞ் சிவபிரானே செ
லுத்தல் போலப், பயிர்களைப் பருவ நோக்கிப் பயில்
பல வயல்க டோறு, மயிர்களை யாற்றன் மள்ள ரமை
வுற நடுதல் செய்தார். (சுரு)

நடுதலு மறியு மூரி னண்ணினோ ரென்ன வாடி,
யுடையதோ ருயர்வு நோக்கி யூரெலாம் போற்ற வன்
றோ, ரடைதரு மகிழ்வி னோங்கு மமைவெனத் தோ
ழுவர் வேண்டும், படிசெயத் தோகை காட்டிப் பயி
ரெலாந் தழைந்த மாதோ. (சுசு)

வறுமைநோய் கல்வி தன்னை வந்துசூழ்ந் துற்ற
லென்ன, வறைதரும் காம மாதி தவத்தினை யடைந்
தா லென்னக், குறைசெயு முலோப நல்ல குணத்
தினைச் சார்ந்தா லென்ன, நிறைதரு பயிரை யெல்லா
நெருங்கின களைக ணீடி. (சுஎ)

களைகளைபருவச்செவ்விகளமர்களானோர்கண்டு
வளமலிவயலிற்சாரவாழ்க்கைசேருமுத்திமானா
விளைதருமகிழ்விற்கூடவமென்னையென்னமென்ன
விளமயிலென்னவந்தாரிசைமலிமருதவாயார். (சுஅ)

வாக்குறு நறவந் தன்னை வள்ளமீ மிசையே கொள்
ளத், தேக்கின ராடி யென்னச் சீர்முக மதனுட் டோ
ன்ற, நோக்கினர் நுனிந்து மள்ளர் நுண்ணிடைப்
பாவை யன்னார், மேக்குறு காத லோடு மிசைந்திட
லுற்று ரன்றே. (சுகூ)

வாடுகின் றார்கள் சில்லோர் மயங்குகின் றார்கள்
சில்லோர், ரூடுகின் றார்கள் சில்லோ ருயிர்த்திடு கின்
றார் சில்லோர், பாடுகின் றார்கள் சில்லோர் பணிவுறு
கின்றார் சில்லோ, ராடுகின் றார்கள் சில்லோ ரனுபி
னர் மதனைவ யார்ந்தார். (எ0)

மதுமலர்வாய்வெளுப்பவடுவகிர்விழிகள்சேப்ப [தத்
விதுமுகம்வேர்வுதோன்ற மென்மொழி விகற்பமெய்
தளைதமலர்க்கூந்தல்சோரத்தானையுஞ்சரியமாதர் [ர்.
பதிகண்மெய்யின்பந்தோய்ந்தபண்பினர்போலவானு

இவ்வகை வெறியை மாற்றி யியன்றிடுங் கடைசி
மார்கண், ணமைவனா யனைய வன்றேன் மள்ளர்க ளே
வலாமேல், தெவ்விய லடைந்த வாகிச் செம்மைசேர்
பயிரை வாட்டு, மவ்வகை பெற்று நிற்கு மடர்களை
களைத லுற்றார். (எஉ)

ஒருகுலத் துறுவேர் தாமே யொருவன்செய்
தீமை நோக்கிப், பருவர லியற்ற லொப்பப் பயி
ரடுங் கமலந் தன்னை, யருவிழிக் கமலங் காட்டு மவி
ரடிக் கமலங் கிட்டும், பொருகரக் கமலங் கொய்யும்
பொலிமுகக் கமல மோங்கும். (எ௩)

ஒருவனோர் குற்றஞ் செய்யி னுற்றிடு மரபின் யார்
க்கும், வருமஃ தென்னுந் தன்மை மற்றிவட் கண்டா
மெங்கள், சுரபதி செல்வ மெல்லாந் தொலைத்ததா
மரையின் சார்பென், றுருவறக் கமல மெல்லா முழ
த்தியர் பறித்தார் மாதோ. (எ௪)

தத்தமக்குரியதானந்தலைப்படலலதுகீழ்மை
யுய்த்திடுந்தானஞ்சாரினுறுகணையுறுதலுண்மை
பைத்திடுருவளைவாவிநீங்கியேப்பணையென்றேறு
மத்தலையடைந்தநீராலழிந்தனகடைசிமார்ரால் (எரு)

இருந்துமெல் வுயர்ச்சி மேவிச் சிறப்பினும் பகை யொன் றின்றிப், பொருந்துமேல வாழ்க்கை யாகும் பூச ளைக் குரிமை வாய்ந்து, முருந்துறழ் மூரலார்த முளை விழிப் பகையொன் றாமேல, கருந்தகை யுற்பலங்கள் களைவுறப் பட்டயாவும். (எசு)

ஆம்பனீர்பருகமுன்னரதற்பினர்வெளியசேய
வாம்பனும்பொருவநும்வாயெனநிமிர்ந்தமருந்தோற்
தாம்பலையாம்பலென்னவாம்பலர்கோலியட்டா [றத்
ராம்பலம்பிடியேயன்னவாற்றுக்காலாட்டிமார்கள். ()

களைகளைகடைசிமார்கள்கழனிவாய்நீரிற்றங்க
ளொளிமுகநவெண்வாய்ந்தவுன்கணும்வாயுந்தோன்
களினமாமலரினூடுநறுமலர்க்குவளையோடு [ற
வளமலியாம்பலீன்டுமலர்ந்ததற்புதமாமென்பார். ()

கமலமுற்பலமேயாம்பல்கலந்திடும்வள்ளையாதிக்
குமைதருகளைகளெல்லாங்குலந்தருபயிரைவாட்டத்
தமதுளத்திரங்கிலந்துதாமவைகட்டல்செய்தா
ரமைதருநல்லாரொன்னுமருப்பெயரவர்க்கேசாலும்()

இன்னணங் களைகட் டோம்பி யின்செயல் புரித லோடுந், தன்னிக ரிளைசை புக்கோர் தம்பவப் பகை கண் மாழ்க, மன்னுநல் வினையே மிக்கு வளர்ந்துறு

மாறு போலத், துன்னுபைங் கூழ்க ளெல்லாந் துவ
ன்றிமே தழைந்த மன்னோ. (௫௰)

தழைதரு பயிர்கள்யாவுந் தவந்தரு பயனை யொ
ப்ப, வுழைதரு கதிர்க ளீன்ற வுற்றிடுங் கதிர்களை
முன்போ, லெழுபதம் விளர்த்துப் பின்ன ரியைந்
தன. பசுமை யின்றோர், வழிவரு துணத்தின் பான்
மை மகவினுக் குருது கொல்லோ. (௫௧)

செல்வம்வந்துற்றகாலைச்செருக்கொடுமிர்ச்சிமிக்கு
நில்வகைமாந்தரென்னநெற்றலைதூக்கிநின்று
பல்குறுந்தோறுஞ்செல்வம்பணிதருமேலோரென்ன
நல்வருமுதிர்வுதோறுநறுங்கதிர்பணியுமன்றே. ()

தக்கபோரறிஞருள்ளஞ்சால்சிவவிளைவைமான [டு
மெய்க்கதிர்ச்சாலியெல்லாம்விளைந்தனவிளைதல்கண்
மைக்கருங்கடுங்கான்மள்ளர்வானவர்பதிக்குப்பூசை
யொக்கமிலன்பினோடெய்புரிந்திலைவயியற்றலுற்றார். ()

அங்கையி னரிவாள் வாங்கி யருங்கிளை முழங்க
வெள்ளைச், சங்கமங் கதிரச் சேலுஞ் சலமலி கயலும்
பாயப், பங்கமின் றரிய ரிந்து பாய்குறக் களத்திற்
சேர்த்து, மங்கையோர் பங்க னேந்தா மலைபல வ
மைத்தல் செய்தார். (௫௪)

மகபதியாயமேலோன்மலைகளைத்தள்ளிவீழ்த்தி [ட்த்
முகில்களைமிதிக்கவிட்டமொய்கெழுதோற்றமொப்ப
தகவுறுநெற்போரெல்லாஞ்சரியவேதள்ளிவீழ்த்திப்
பகடுகண்மிதிக்கவிட்டார்பன்னருமாற்றன்மள்ளர். ()

தம்மிறை யுயிரு மெய்யுந் தனித்திடப் புரிந்த வேலை
யப்பச், செம்மைசேர் நெல்லும் வையும் பிரித்தன
செழிய மேதி, வெம்மறு நீக்கி நன்மை கைக்கொளு
மேலோர் மானப், பொம்மெனத் தூற்றி நெல்லைக்
குவித்தனர் பகடு போக்கி. (௮௬)

குவித்தநென் மலைக டம்மைக் கூறுசெய் தளவை
கண்டு, கவித்தவெண் குடையான் மன்னன் கடன்
கொடுத் திவ்வோ ரின்மை, யவித்திட நல்கி யெஞ்சி
யமைந்திடு நெல்லை யாருஞ், செவித்துணை பொத்து
மார்ப்பிற் றிகழ்மனை கொடுசென் றுய்ப்பார். (௮௭)

பிறத்தலும்வளர்தலும்பின்னுறமூப்புவந்தே
யிறத்தலுமுலகினூடியைந்திடுமியலேபோல்
வுறுத்தியேநடுதலுமோம்பலுமோம்பிப்பின்ன[ம்.
ரறுத்திடுசெயலுநாட்டினகத்திடையொழிந்திடாவா

அரும்பயிர் நெல்லை நெல்லே யாமெனக் கரும்
பைக் கண்டுங், கரும்பினைக் கரும்பா மென்னக் கமு
கினைக் கண்டு மந்த, விரும்புறு கமுகு தன்னைக் கமு
கென விளங்கித் தோன்றுங், குரும்பைகொ டெங்
கைக் கண்டுங் குறித்துளந் துணிவர் வந்தோர் (௮௯)

மாப்பலாப் பழம்பெய் சாறும் வாழைமென் கனி
யின் றேனு, மீப்பல மலர்கள் சிந்தும் விழுமெனு
மதுவு மோடிக், கோப்புறு வயலிற் போகிக் குளிர்
பயிர் வளர்க்கு மங்கண், யாப்புறுத் தமரு நீரோ வி
சைத்திடின் மிகையே யாகும். (௯௦)

மனைமுகம் வளையே கணட மயிலைவாள் விழிக ளாம்
ம்பல், பெருகுவா யறன்மென் கூந்தல் பெட்புறுங்
குமிழி கொங்கை, நாளமே தந்த மாகச் சார்ந்திடுங்
தடங்க ளீங்கே, பருவமங் கையர்கள் பல்லோர்
பரந்தெனப் பரந்து வைகும். (௬௧)

துறையெலாஞ் செந்நெல் சூழுங் கடமெலா மன்ன
ம் வாழுங், கரையெலா மணியின் கூட்டங் காவெலா
ஞ் சுரும்பி னீட்டம், நிரையெலா மூடல் பெற்றோர்
நீரெலா மாடலுற்றோர், புரையெலாந் துஞ்சு மஞ்
சிப் புலமெலா மஞ்ச னிஞ்சி. (௬௨)

செநற்பதுங் கடந்த சோம சுந்தரக் கடவு டோல்
லைச், சிற்பர வடிவத் தாடு திருவடி மாறி நின்றே,
யற்புதத் திருக்கூத் தாடு மாலவாய் நகரைத் தன்பா
ற், பொற்புறக் கொண்ட மேன்மை மருதத்தைப் பு
கல்வார் யாரோ. (௬௩)

திருமகள் வழிபட் டேத்தச் சிறந்தநல் வரத்தை
யீந்த, மருமல ரிதழி வேணி வள்ளலார் கோயில்
கொண்ட, பொருவறு திருப்புத் தூராம் பொற்பதி
தனையு மேற்கொ, ளருமைய மருத மாட்சி யறைந்தி
ட நாமா வல்லேம். (௬௪)

நெய்தல்.

வேறு.

தவிசுமல்கியேதனந்திடாத்தனியிடத்தன்றிச்
சிவனுமற்றொருதலந்திடைச்சேர்ந்திடறகாதென்
றிவருமுள்ளமேசிசைந்தெனவிருஞ்சுறாவுலவு
ம்வரிநீர்க்கரைநெய்தலினுறைந்தனன்வருணன். ( )

கடலினுடியேவந்தவர்கடும்பசியகற்ற
வடிசுவைப்பொதிசோற்றினையவிழ்த்தெதிர்நல்கும்
படியினுறெனப்பரந்திடும்படுகடற்பாங்கர்
வடிவிருழைகள்பற்பலமலர்கொளீஇநிற்கும். (௯௬)

புன்னைமாலெனப்பொலிந்திடுந்துவர்க்கொடிபொன்
மன்னியேதழுவுற்றிடுமொனைகைத்தென்ன [மேயான்
நன்னர்சேர்முனைகயரும்புறநாகுநம்பெருமான்
மின்னுசெஞ்சடைப்பிறையெனத்துகிரிடைமேவும்.

நல்லசேர்க்கையாற்றீயதுநல்லதாநல்ல
தல்லசேர்க்கையானல்லதுமல்லதேயாகும்
வெல்லுநெய்தலைமீனடைந்துயர்மணமேவுஞ்
செல்லுமீனையுற்றான்மணஞ்சேர்வுறுநெய்தல். ()

பலவகைக்கலைப்பொருளெலாம்பாற்படக்கொண்டே
நலமுறும்படிநல்கிடுநாவலர்நயம்போற்
பலவகைத்தலைப்பொருளெலாம்பாற்படக்கொண்டே
நலமுறும்படிநல்கிடும்பற்பலநாவாய். (௯௯)

கலத்தினேகியேவலைகொடுமீன்களைக்கவர்ந்து
வலத்தின்வாழுவர்வலைஞர்களிகழுவாயுண்டோ
நலத்தின்மேம்படுமதுரைமாநாயகனுளையர்
குலத்தினுகிமீன்வலையினிற்கொண்டனனென்றால். ()

எங்கள்கண்களைநிகர்த்தலின்வாட்டுகமென்று
தங்குமீன்களைநுண்ணிடைநுளைச்சியருணக்கத்
தங்குகாக்கையுற்றடைந்தவரோப்பினுந்தவா
பொங்கியேதினைப்புரியினும்பிள்ளைதான்போமோ. ()

கடல்குளித்துமுத்தெடுத்திடுங்கடலராரவமும்
படிகொளருப்பமைப்பார்களினமலையும்பஃறி
விடுதலார்ப்புமீன்முதலியவிற்றவிறெலியு
மொடிவில்வாரிதியோசையையுண்டுமேலெழுமே. ()

பொருவிலாண்மைகொளிராமனார் புரையினைப்போக்
கருளியங்கணரிராமநாதப்பெயரனொடங்கே [கி
மருவியின்னருள்செயுமிராமேச்சுரமகிமை
பெருகியோங்கியதன்னிடைப்பெற்றதுநெய்தல். ()

தடையின்மாமன்றமும்முறைதன்பெயரொடுத்துக்
குடிலையோடிசைத்தேத்திடுங்குமரவேளமர்ந்து
படியினல்லருள்செய்திடுஞ்செந்தியம்பதியை
யுடையதென்றிடினெய்தலையெங்ஙனமுரைப்பேம். ()

பாலை.

வேறு.

கொற்றமாருருக்கொடுகுலவுங்கொற்றவை
யுற்றிடுபலிவகைமறவருட்டிடப்
பெற்றருள்வழங்கியேபிறங்கும்பேற்றினைப்
பற்றியேயிருந்திடும்பாலையாநிலம். (௧0௫)

பாலையைப்பயனிலதென்றபன்னுத
லேலுமோவழிச்செலுமியல்பினோர்க்கெலாங்
கோலுறுபசியினைக்குறைக்குமீந்துகள்
சாலுறுநீர்விடாய்தணிக்குநெல்லிகள். (௧0௬)

பாற்கடுநிலத்திடைப்பயிலுநிம்பமாத்
தருக்கிளர்பழத்தினைக்கழுகுசார்வது

திருக்கழுக்குன்றமேற்றிகழுஞ்சோதியை
யுருக்கிளர்கழுகடைந்துறுதல்காட்டுமே. (௧௦௭)

எயினர்தஞ்சிறுமியரொடுப்பவெண்பொரி
நம்முறச்சிதறிஞெல்லைநன்னிலம்
பயிலுறுகுரவம்பூம்பாவைக்கேற்றிடு
மயலுறமுருங்கைகளலர்கள்சிந்துமே. (௧௦௮)

சீரினர்சீரிலார்திறத்துவந்தெனக்
காரகிரோன்றிடுங்கள்ளியின்புடை
யேரினம்பெருறுமிந்திலமெனுப்
பாருறுபாலைகள்பழுத்துநின்றவே. (௧௦௯)

ஆடவர்பின்றொடர்ந்தடையுமாதரார்
பாடகமெல்லடிபரிவுறுமலே
கோடியர்கோங்குகள்குலவும்பஞ்சினை
நீடவேசொரிந்துபார்நிறைத்துநிற்பன. (௧௧௦)

வழிபறித்திடவுஞ்செழியமன்பதி
யுழிகவர்ந்திடவுமொளிகொளெல்லிடை
யெழுவலிச்சூறைசெய்திட்டவும்பொரு
ளழிவறவாழ்குவர்மறவராயினோர். (௧௧௧)

திணைமயக்கம்.

வேறு.

குலமயிலாடல்கண்டுகொன்றைபொன்சொரியாநிற்கு
மலிதருபுழைக்கைநீட்டிமதகரிவிறுங்குகொள்ளு
நலமிகுகுயில்போய்த்தேமாநறுந்தளிர்கோதிப்பாடு
மெலிவில்கூர்ங்கோட்டுமேதிவிரவுறுவாருமேயும். ()

கள்ளமுண் டகம்வா ழன்னங் கழிகொண்முண்
டகத்திற் சாரும், பிள்ளைநன் மூதூர் வந்து பிடியுறு
சோறு கொள்ளும், வெள்ளுமா மதுவு மைம்பா லதுவு
முண் வேழச் சாறுந், தள்ளறக் கூடன் மூவர் தமிழு
மொன் றுற்ற போலும். (௧௩௯)

கீறிவளர்கொடியுமுல்லைக்காலுயர்கொடியும்வள்ளை
யறைதருகொடியுந்துப்பினைவிர்தருகொடியுந்தன்பா
னெறிவரப்படரநிற்குநெடுங்குராமரபுநான்கும்
பெறுமடமாதர்புல்லப்பெற்றவாண்மகனே போலும்.

இன்னபல்வளங்களோங்கியியலுநாற்குலமும்வேறு
துன்னுபல்குலமுமல்கித்தொன்னெறிவழாமலீசன்
றன்னடியன்பின்வாழுந்தன்னிகர்பாண்டிநாட்டின்
மன்னியலறிந்தென்சொற்றும்வளநகர்வருக்கலுற்றாம்.

திருநாட்டுப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௪௪.

திருநகரப்படலம்.

வேறு.

பயன்மருவுற்றிடும்பாண்டிநாட்டினு
ணயன்மருவுற்றிடுநகரம்யாவினும்
வியன்மருவுற்றிடுமேன்மைசான்றதோ
ரியன்மருவுற்றதிளைசைமாநகர். (க)

வீசனைவரநதிவிளங்கித்தென்றிசே
ராசையையாள்யமனணுகவஞ்சலாற்
றேசிகநிலைக்கொருதேயமாதலா
லீசனேசருவிளைசைமாநகர். (உ)

எம்மையுமிடர்கெடுத்தின்பமீதலாற்
செம்மைசேர்சங்கடக்களத்தின்சீரினாற்
கொம்மைமென்கொங்கைமேன்மேவலானமை
தம்மையையன்னதாமிளைசையாநகர். (௩)

சித்தியும்புத்தியுஞ்சேருமாண்பினல்
வித்தைகளனைத்தினுமுதன்மைமேவலா
லெத்திறவினைவருமிடருநீக்கலா
லத்திமாமுகவனையனையதந்நகர். (ச)

சந்தமார்தெய்வதயானைசார்தலா
லந்தமில்சூர்படையடல்பெருவலிமையான்
மைந்துடைப்பிணிமுகமாற்றுமாண்பினாற்
கந்தவேளொப்பதுகன்னிமாநகர். (ரு)

மன்னியமாவினைமருவிவைகலாற்
றுன்னுநற்பொருளெலாந்துவரநல்கலாற்
பன்னரும்புவியினிற்பொலிந்தபண்பினாற்
பொன்னிலைப்புரைகுவதிளசைப்பொன்னகர். (௬)

காணியகாட்சியாற்கவினுங்*கச்சபிப்
பாணியைத்தாங்கல்கொள்பான்மையாலெவர்
பேணியநாவினும்பிறங்கிநிற்றலால்
வாணியைமானுவதிளசைமாநகர். (௭)

பயிலுறும்பன்னுவர்படிவர்போற்றலான்
மயிலனவுமையொடும்வள்ளன்மேவலாற்
றுயிலருந்தன்மைசேர்துயரந்தீர்த்தலாற்
கயிலையம்பொருப்பினைக்கடுப்பதப்பதி. (௮)

தண்டளவாகியவிபவஞ்சார்தலாற்
கண்டிடற்கரியதோர்மெய்யர்க்காட்டலா
லண்டருங்கருடனதடியைக்கொள்ளலால்
விண்டுவின்கோனைவிளங்குமந்நகர். (௯)

கலையகல்வேதநற்கானமோங்கலால்
விரியுலகேழினுமுன்மேலதாதலாற்
பொருவலில்விசித்திரம்பொருந்தும்பொற்பினாற்
பிரமன்மாநகரெனப்பிறங்குமப்புரம். (௧0)

---

* கச்சபிப்பாணியென்பதற்கு - இந்நகரைக் கிசையக் கொள்ளுங்கால் கச்சபத்தையுடைய நீரெனவும், சரசுவதிக்கிசையைக் கொள்ளுங்கால் கச்சபியென்னும் வீணைபொருந்திய கையெனவும் பொருளாம். கச்சபத்தையுடையது கச்சபி ஆன் முடிபு.

உலகினையுதவுவோனுமைகொணாயக
னம்புரிப்பயனடைதருமையதூதாமென
வலமொடுவழங்கியநகர்மற்றித
னிலவியபெருமையார்நிகழ்த்தவல்லுநர். (௧௧)

அருளினையுடையநல்லமலற்சூழ்வுற
நிறைகெழுமன்பினோர்நெருங்கிநின்றெனத்
திருநகர்ப்புறத்தினிற்றிகழ்ந்துநின்றதான்
மருவுதேன்வண்டிசைமல்குபூம்பொழில். (௧௨)

மாவுழுபொழின்மலர்வாசமிக்கெழீஇக்
காவுறுகற்பகங்களுலும்பொன்மலர்
மேவியேகமழ்ந்திடவிளக்குமன்றிப்பொற்
பூவினுக்கொருமணம்புவனத்துண்டுகொல். (௧௩)

வெயிலிடைவருந்தினோர்தலைமேவுழி
நயமுறுகுளிர்பொழிலவிலவ்வெய்யிலே
னயலுறவிளாவினிலடையச்செய்யுமாற்
பயனுறப்பகையினைப்பண்ணுவாரென. (௧௪)

ஆன்றபூந்தழைபொதுளலர்மென்சோலையூற
றேன்றுளிசிதறலுந்திகழுமாமயில
வான்றருமழையெனமதித்துத்தோகையை
யேன்றுறவிரித்துநின்றெழிலினாடுமே. (௧௫)

கற்பகச்சோலையைக்கருதிநக்கென
நிற்புறுசோலைமேனிமிர்ந்தரும்பூவ
மைந்துணைமலர்தெரிபொறிவண்டார்த்திடு
கந்தவேபொருந்துமற்றன்னதென்பபோல். (௧௬)

மரிமைகொணகரினர்ப்பொருதுமாரவே
ளேழுற்றுசிலையவையிறவிறப்பினும்
தாமன்வகொள்ளுவானறமழையவைத்தெனத்
காமுறவளருமாழ்கரும்பினீட்டமே.

இளைசைம்மாநகர்தனதிடத்துவீற்றிரு
திளூகருணைகரற்குயர்கைநீட்டியே
மிளிருறுசாமரம்வீசுமாறெனக்
களிதருபாளையோடசையுங்கந்தி[illegible]

கோழுறுகாட்சியிற்குலவிநின்றிடும்
வாழையினிலைகளின்வாருநெற்கதிர்
தாழுறக்கிடந்திடுந்தன்மையின்னிக
ழூழுறுசெயலைமுன்னுணர்த்தலொக்குமே. (௧௯)

தென்றல்வந்தசைவுறத்திகழுமூசனோர்
மன்றலம்மலமேன்மகிழுமன்னமுற்
றென்றுதேன்சோலைவண்டுவந்துபாடிடத்
தன்றுணைதன்னொடுஞ்சயனஞ்செய்யுமால். (௨0)

தையலார்குடைந்திடுந்தடத்தின்வாளைகள்
மொய்யின்மேற்பாய்ந்தெழூஉமுகிலைக்கீறியே
யொய்யென்ச்சிதைத்திடவுவந்துபைம்பொழில்
செய்யதேன்கனியெதிர்சிறப்பவீசுமே. (௨௧)

ஆடியல்கருங்கணாரடும்போதினின்
வீடியகோவையுமணியுமிக்குறீஇத்
தேடுநரின்மையிற்றிகழுமாதரிற்
றோடுறுவாவியங்குலவுமென்பவே. (௨௨)

அடையாறு
சென்னை 20

பேணுறுமூன்றுகண்பெற்றபான்மையாற்
ருணுவ்வகிகர்த்தகாய்சான்றனம்மெனு
வேணுறுகொள்கையினெழுந்தவாறெனச்
சேணுறநிவந்ததுதென்னஞ்சோலையே. (௨௩)

பரிதிதேர்ப்பாகொருபகலினீர்விடா
யொருவவித்தென்னிளநீரையூக்கியே
விரைவொடுபறித்தலுந்தவறிவீழ்ந்தனன்
கரைதருமவனிருகாலுமிற்றவே. (௨௪)

சோலைவாய்த்தென்னையந்தலையுந்தோகைமார்
கோலமென்மார்புறற்குரும்பைகாட்டிடு
மோவிடிற்சிறுமையின்மறையுமொன்றுள
மாலுறப்பெருமையின்மறையுமற்றது. (௨௫)

தங்கண்மெய்யெடுத்தவன்றன்பகைக்கின
மிங்கிவையெனத்தெளிந்திடர்செய்தன்மைபோ
லங்குயின்மாமரத்தலங்கல்நோகிகியே
வெங்கணைமீமிசைமிதித்துச்செல்லுமே. (௨௬)

நந்தனகளத்துமைநாதன்றொண்டினர்
நந்தனமேயெனநயந்துபொற்றிடு
நந்தனவனமவைநாகர்நாட்டுறு
நந்தனநாணுறநண்ணும்பற்பல. (௨௭)

புறநகர்.

உரலடியுடையனவுலக்கைக்கையின
வரிமுறச்செவியனகும்பம்வாய்ந்தன
தருபலகாரமேற்றரிப்பவாகிய
கரியினகர்ப்புறங்கலந்துமன்னுமே. (௨௮)

காரூறுநிறத்தினாற்கடியிடிப்பினாற்
சாரும்வில்லணியினாற்றானமாரியான்
சூரிமால்யானைகண்முகிலினின்றிடும்
வாரிகளெண்ணிலமல்குகின்றன. (உ௯)

மதமிகுமருவியவயிரக்கோட்டின
முதிர்பெருவடிவினமணிகொண்மொய்ம்பின
பதலைகணிகர்த்திடும்பருங்கையானைகள்
கதிகொளுஞ்செலவினிற்காட்டும்பேதமே. (௩௦)

கந்துகமொப்பனகாலிற்செல்கையின்
வந்திணையொப்பனமடங்கலொப்பன
கந்தலிலார்ப்பினின்டத்திறனடகர்
தந்திறமொப்பனசரிக்கும்பாடலம். (௩௧)

தந்தனித்தன்மைகொண்மறையினற்றமைமையை
யந்தமிருமூமுற்றமைந்தபண்புபோற்
கந்துகமாயினகதிகள்காட்டுவ
மந்திரமுறுவனமங்கலத்தன. (௩௨)

பரியெனவிதிவயம்பரிப்பித்தான்கொலோ
வொருபரிப்பெயரடைவுற்றவவ்வய
மருவியவியல்வயமாவெனும்பெயர்
தெரிவுறச்செய்திடச்சிறக்கும்வாசிகள். (௩௩)

கண்ணுதல்பொற்றேர்கடுக்குமவ்வயி
னண்ணுறுதேரொனநவிலலாகுமோ
நண்ணியவியல்புடைத்தகுவனன்னதை
யெண்ணலன்கவர்ந்திடவிழிந்ததென்றிடின். (௩௪)

பரிதிதேர்நிகரெனப்பகர்தமேயெனி
னிருநில்த்தேகுதலிலதுமற்றதோ
ருருளினையன்றியேயொழிந்தவில்லது
தரியலர்வைகலுந்தடுத்தல்செய்வது. (௩௫)

மாடுறுநேமியவயிரவச்சின
பாடுறுசெம்மணிப்பரப்பபச்சையிற்
றேடுறுகாலகாழ்மேலதேரவை
யாடுமைம்பூதமாரடுக்குநேருமே. (௩௬)

வேலெதிர்மேவினும்விழியிமைக்கலார்
காலனேர்கடிகினுங்கால்பின்வைக்கலார்
மால்வரைவீழினும்வாட்கைசோர்க்கலார்
கோலியபோரெனக்குலவும்வீரரோ. (௩௭)

படையினுற்போரினிலாகம்பற்றிய
வடுவதுவேயலால்வடுவொன்றோர்கிலா
ரடலுறுகாலையிலரியவாவினைக
கடைதருபுல்லெனக்கணிப்பர்வீரரோ. (௩௮)

படைபயிலிடங்களும்பகருங்கோழியோ
டுடுமுதற்போர்தெரியிடமுமுற்றிடும்
புடைநகரியலிலெலன்புகலுற்றாமினி
யிடைநகர்வளத்துளுமியம்புகின்றனம். (௩௯)

இடைநகர்.

வேறு.

புளினஞ்செய்வரைபொய்கையே பூம்பொழில்பொன்
கொளுவுமாடமேகூடமேமுதலவாக்கூறும் [னோர்

வளிமேலாந்தெரீஇக்கண்ணிமையார்களாய்வானத்
துளபெருஞ்சுரர்நோக்குவரின்னமுமுறங்கார். (௪0)

மிடையுநன்னுளிர்மிக்கதேர்விரிமலர்ப்பொங்க
ரிடையின்மென்மொழிக்குயிலனுறொழிவினைடாட்ட
வடுவிலூசலூற்றுவொர்மாதரார்மருங்கி
னுடையுமாடவருளத்தையுமாட்டுவதூருசல். (௪க)

மாவடுப்புரைவரிவிழிமங்கையர்தங்கை
மேவுபந்தினையடித்தலுங்கச்சுகவெளியிற்
றாவிநோக்கிடுந்தடமுலைதம்பகைக்கின்னல்
பாவியுற்றிடின்மகிழ்வொடுயாவர்தாம்பாரார். (௪உ)

பதுமமார்தடத்தெதருமகன்பயின்முகந்தோற்றி
வதியுமர்தினைத்தேடலுமற்றவணைகைக்கப்
புதியதாமரைமுத்தெனுப்புகன்றுபின்றேட
விதமொடேடயெழுமகிழுவனின்னவர்பல்லோர். (௪௩)

உரைகொண்மாதரார்தமமிசையுரங்கெழுகுமரர்
மருவிவெஃகிடமாரவேள்வடித்தவிற்கணைகள்
பொருதல்வேண்டிடாமற்றவர்புருவவில்லிரண்டோ
டரிவிழிக்கணையிரண்டுளவன்னவேயமையும். (௪௪)

அளத்தல்செல்லருமளவினவரும்பொருளான்ற
வளத்தசேய்மையிற்றோன்றுவவன்பெருநிலைய
முளைத்தமாமுடிமாடங்கண்மொய்வரைநேரும்
இளக்கின்மாடங்களழகினவழகிலகிரிகள். (௪ரு)

யாகமன்றியுமாடமேனெறிவழியேகி
நாகமுற்றிடல்கூடுமானரிவணைனும்

போகமற்றவணின்மையின்வெறுத்தனர்போகார்
மாக்மோர்பெயர்வெறுக்கையந்நகரெனமன்னும். ()

குலவுமாமணிமாடமேலாடுறுங்கொடிக
ளிலையெனச்சொலுமுலோபிகளிடத்தினிலேகிர்
புலமைமிக்குளரிந்நகர்ப்பொலிந்தவரிடத்துப்
பலமுறும்படிவழ்மினென்றழைத்தெனப்பரவும். ()

மாடமேலுறச்செம்பொனின்மணியினின்வகுத்த
நீடுமேன்மையகுடங்கர்கணிரைநிரைநிலவும்
பீடுதங்குசெந்தாமரைப்பிராட்டியையாட்டக்
கூடுமன்பினினைமைத்திடுமாமனுக்குடம்போல். ()

செம்பொன்மாடமுநித்திலமாடமுந்திகழ்ப்
பம்புமாமணிமாடமுமடுக்கியேபயிற
லும்பரிற்பொலிபரிதிநல்லுடுபதியெரிக
டம்பரம்புறுமண்டலமூன்றெனச்சாலும். (௪௯)

செம்மணித்திருமாடமேற்கருமுகில்செறியு
மெம்மையாளரன்கரியுரிபோர்த்ததையேய்ப்பக்
கொம்மைவெம்முலைக்கொடியனார்குளிர்முகடிதியாற்
பொம்மலம்புலிக்காந்தநன்மாடநீர்பொழியும். (௫௦)

துங்கமேனிலைமாடமேற்றேருகையினிருந்து
மங்கைமார்குழற்கூட்டகிற்கொழும்புகைமருவி
யங்கணற்பலகணியுறவவ்வழியுடையுந்
திங்கண்மெய்ப்படக்களங்கமென்றுயதுதெரியின். ()

மருவுமாடமேன்மைந்தரோடியமகளிர்
விரவுபன்மணித்தாரினையகைத்தனர்விரைவி

ணுருவிவிண்ணிடையழுந்துறவோச்சலுமழுந்திப்
பெருகுதாரகைப்பெயரினைப்பெற்றனபிறங்கும். ( )

மீதுயர்ந்திடுமொளிக்மிசையுறநிற்கு
மாதொருத்தியின்மருங்குலைவானவர்நோக்கி
யீதுவாவொருகும்பமேயுற்றுளதிரண்டா
லோதுகும்பமுற்றுள்ளதவ்வாவென்னவுவப்பார். ( )

மலையினிற்கொடிதோன்றிடல்வழக்கதாமலைதா
னிலைகொடியினிற்றோன்றிடலிவ்வியல்பிகந்து
நிலவுநன்மலையிரண்டுமேற்றோன்றிடநிகழு
மலகில்பூங்கொடியங்குறுமரம்பையர்நாண. (௫௪)

மைந்தர்மாதர்களும்பரிசைமருவியேமாறுச்
சிந்துகின்றபொற்சிவிறியிற்றெறித்திடும்பனிநீ
ரந்திலாக்குறுஞ்சேற்றினையன்னவர்பின்னை
ருந்துபொற்சுண்ணமுலர்த்திடவொளிர்ந்திடும்வீதி. ( )

வரத்தினுங்குளாரகற்றியமணிகளேமறையோர்
கரத்தினுக்கியதானநீர்வெள்ளமேற்கலந்து [ற
புரத்தினின்றுபோந்தெங்கணும்புதைந்துமேற்றோன்
விரத்தினாகரமெனும்பெயரெய்தியதாழி. (௫௬)

மேக்குயர்ந்தபொன்மாடமெல்லமளியின்விளக்கு
மாக்கமன்னவராடவர்கலவியினயர்வை
நீக்குமைந்தருமலர்மணநீடிவானதியின்
றேக்குநீரளாய்வந்திடுந்திகழுமென்காற்று. (௫௭)

இரதிநேரெழின்மாதர்பஞ்செழுதடிச்சுவடு
திருமிகுந்துளகாளையர்குஞ்சியிற்றிகழு

முறைகொண்மாரனேர்மைந்தர்களொளிர்நகச்சுவடு
குரவ்மார்குழன்மங்கையர்கொங்கையிற்றிகழும். ()

மலையிடத்தவும்வனத்தினிடத்தவுமருத
நிலையிடத்தவுநெடுங்கடலிடத்தவுநகரத்
தலையிடத்தவுமாம்பொருள்சாருமாவணமுன்
னுலகமேழையுமுண்டமாலொருவயிறொக்கும். ()

அகநகர்.

திகிரிமால்வரைதானுமத்திகழ்வரையுடுத்த
நிகரிலாப்பெரும்புறக்கடறானுமேநேர்ந்து
தகவினுற்றெனப்பல்பொறித்தடம்பெருமதிலு
மகழியும்புறஞ்சூழ்ந்திடுமகநகரதுவாம். (சுo)

முந்துகின்றகாலாக்கினியுருத்திர முதல்வன்
செந்தழற்படிவத்துறுதீயதோர்வெம்மை
வந்தெமக்குறாதவன்றலம்வரையுறவாழ்ந்தே
யந்தமில்கமடத்தொடுமமர்ந்திடுமகழி. (சுக)

வெங்கராமுதலாயினவகத்திடைவிரவப்
பங்கயம்முதன்மலர்கண்மேற்பரவுறும்பரிகம்
பொங்குதீக்குணமுள்ளுறப்பொலியவேபுறத்திற்
றங்குநற்குணங்காட்டிடும்வஞ்சனைத்தகையும். (சுஉ)

குமுதமம்புயங்குவளையென்றின்னவைகோலி
திமிருமோடையினிற்றலங்கரநேரிழையா
ரமுதவாய்முகம்விழியுறழ்கினைவெல்லத்
திமிருநீரினுற்றருந்தவஞ்செய்திடல்சிவணும். (சுங)

திருமவாழ்க்கையான்சார்தனம்புறத்துளார்தமக்கு
மருவுநன்மைமைபவழுங்கல்போலிளைசையின்மன்னும்
புரிசைமேலுறுங்கீழுறுமூலைகையும்புரக்கு
மொருதனிப்பெருந்தன்மைமையுடையதுமன்றே.()

வெற்றி கொள்பொறி யடக்கலாற் பகைப்புலம் விளிய, வொன்று மேன்மையா லகத்திடை யுயர்பொரு ளமைந்து, துன்று வன்மையாற் றொலைவருந் தன்மைசே ருரவாற், குன்ற வில்பெருந் தவத்தரிற் குல வுறு மிஞ்சி. (சரு)

மதிலிற்கோபுர மேனிலைக்குளிர் புறைவழியாக்
கதிர்கொள்டாறுதேர்ப்பரிப்ளங்கெய்தலுங்களித்து
முதிரும்வேனிலிற்ழுத்துநின்றேகுவமொழியு
மதுபொருட்டினுற்பகற்பொழுதறவுநீடுமால். ()

பாந்தையர்வீந்.

வேறு.

இகபரத்தாசைநீத்தோரொன்னினுமனுகினன்றே
ரகமுறமயங்கச்செய்யுமழகினர்கற்பினுரின்
மிகுதியினன்புகாட்டிவேழமுண்விளவையொக்கும்
வகையினுடவரையாக்குமாதரார்சேரிமல்கும். (சுஎ)

பயனொரு வருக்கே யாக்கும் பான்மையர் தமினும் பல்லோர்க், கியலுற வாக்கு வோரே யேற்றம துடையா ரென்னு, முயர்வுறு முலக நீதி யுண்மையை யுணர்ந்தார் போலு,, மயர்வறு பயனை யார்க்கு மாக்குவார் வரைவின் மாதர். (சுஅ)

ஆடவர்முத்தமீவாரவர்களுமுத்தமீவா
ராடவர்தனங்களீவாரவர்களுந்தனங்களீவா
ராடவராசையீவாரவர்களுமாசையீவா
ராடவர்மெய்யன்புள்ளாரவர்களோமெய்யின்புள்ளார்.

சிலர் பொரு ளவி நயத்தின் றிறத்தொடு மாட லானுஞ், சிலர்பொரு ளமுதம் போலத் தெளிவுறப் பாட லானுஞ், சிலர்பொரு ளுள்ளம் பூப்பத் தெரித்திடும் விநோதத் தானுஞ், சிலர்பொருள் கலவி யானுஞ் சேருற வௌவிக் கொள்வார். (௭௰)

புல்லுறல் சுவைத்த லங்கம் புணர்நகக் குறி சுவைத்துப், பல்லுற வழுத்த லோடு பாணியாற் றட்டலாதி, யெல்லையில் செய்கை தேற்றி யெழுதுசித்திரங்கள் காட்டி, மல்லல்சேர் மைந்த ருள்ள மயக்குவார் கணிகை மாதர். (௭௧)

மைந்தராம்வயலைத்தங்கட்பார்வையாம்விலையின்வாங்கி
தந்தநேர்முலையலத்தாற்சாலுறவுழுதுகாம [வித்
மந்தமிலாதுவித்தியமுதவாய்நீரைப்பாய்ச்சி
முந்துமன்னவர்தஞ்செல்வமுதிர்விளைவெய்துவார்கள்.

வேளாளர்வீதி.

மன்மகண் மகார்களென்னும் வண்பெயர்க் கேற்ப மண்ணி, னுண்மலி விளைவின் வாழ்வா ருயர்கங்கா குலத்த ரென்னுந், தண்மைசால் பெயருக் கேற்பத் தவாதநற் றூய்மை மிக்கார், திண்மைசேர் வேளாண் மாக்கள் செல்வமா மனைகள் சேரும். (௭௨)

தம்முயிர்க் கிடுக்கண் வந்து சாரினும் வாய்மை காத்துச், செம்மையி னிறுத்த வல்ல செய்கைய யுடையா ரீசன், மெய்ம்மைசேர் திருவ டிக்கண் மேவுநல் லன்பு வாய்ந்தோர், பொம்மல்சேர் விருந்து செய்வார் புகழுறு வேளாண் மாக்கள். (எச)

வைசியர் வீதி.

தருமநற் குணங்க ளெல்லாஞ் சான்றிடுந் தகையோ ராகித், திருவுறு சீர்க ளெல்லாஞ் சிறந்திடுஞ் செல்வ ராகிப், பெருமைசேர் புகழ்க ளெல்லாம் பெருகிடப் பெற்றோ ராகி, மருவுறும வணிக மாக்கண் மல்லன்மா ளிகைகண் மல்கும். (எரு)

இன்றிகழ் காம கோட்டத் திறைவிமுன் னொன்றான் காய, வறவகை வளர்த்தல் செய்தா ளறம்பெறீஇ னடநா டெய்ய, நிறையுமன் னதுதான் செய்யா ணித்தகல் யாணி யம்மை, முறையொடிந் நாட்டி னுய்க முதல்வளா வைத்த நீரால். (எசு)

இளைசைமா நகரந் தன்னி லியல்பெரு வணிகர் தம்பா, லளியொடு வறியோர் செல்வி னன்னவர் மிடியை யோட்டித், தளர்வறு தனத மொன்றே சாற்றிடத் தருவா ரொன்னின், விளைவுறு மன்னோர் செல்வ மேன்மையார் விரிக்க வல்லார். (எஎ)

மனைவியே மைந்த ராதி வகையினர் பொருட்டே நாளுந், தனமதை யீட்டல் செய்யுந் தன்மையோர் காண மெய்த, முனைதரு மன்ன தான மாலய தரும

முன்னும், வினைகளின் பொருட்டே நாளும் விரும்பி
ஞன் கீட்டல் செய்வார். (எ௯)

பொருளினை முன்ன ரீட்டும் போதினிற் காணி
யென்னு, மொருசிறு கணக்கைத் தானு மொராயிரம்
பங்கா வெண்ணி, யுனாவொடு மீட்டு வார்கண் மா
நகர் வணிக மாக்க டருமமேற் செலுத்தும் போது
தாமது நினையா ரம்மா. (எ௰)

அவர் திருப்பணிகள்செய்யாவாலயமியாண்டுமில்லை
யவர்திறத்தமைத்திடாதவன்னசத்திரமுமில்லை
யவர்வயினிரந்திடாதாரவனியில்யாருமில்லை
யவர்வயினேற்றிட்டோருக்காவதோர்மிடியுமில்லை. ()

கோனுத லின்றிக் கோடி கோடியாப் பொருள்
கொடுக்கு, மானுடை யவர்க ளிந்த வணிகரே யன்றி
யாவர், பேணியே யெவர்வந் தாலும் பின்னிடா தெ
ந்த நாளும், பாணியா தளிக்கும் பான்மை படைத்
திடு நியமம் பூண்டார். (அக)

கன்னிய கழக வாயாற் கல்வியாம் பொருளை
யீவார், தின்னிய கொடையாம் வாயாற் செல்வமாம்
பொருளை யீவா, ரெண்ணிரு பொருளு மீந்தே யிரு
பொரு டாமுங் கொள்வார், புண்ணியப் பொருளு
மோங்கும் புகழ்ப்பெரும் பொருளு மன்றே. ()

ஒருவரோர் கருமஞ் செய்ய வுற்றிடின் மற்றை
யோரும், பரிவொடு துணையா நின்று பண்பொடு

முடித்தல் செய்வார், கருதுமுள் ளழுக்கா றில்லார்
கைதவஞ் சிறிது மில்லார், தருமமே கொள்ளை கொ
ள்வார் தரணியில் வேறு யாரே. (௪௩)

இடையறுத் தரும மின்னே ரியற்றுவா ரென்ப
தோர்ந்தோ, வடுவினுட் டறங்க டற்பின் வளர்க்குவ
ரென்று தேர்ந்தோ, கொடைதிகழ் வணிகர் தம்மைக்
குறித்தலு முவந்து தானு, மடைவுறீஇ யிங்கண் வாழ
வமைத்தனன் பாண்டி வேந்தன். (௪௪)

துங்கவெண் ணீறு பூசித் துலங்குருத் திராக்க மா
லை, யங்கமேற் பூண்டு நாளு மஞ்செழுத் தெண்ணு
வோராய்ச், சங்கர னெம்மான் பாதந் தணப்பறும்
வழிபா டுட்கொண், டெங்குமே புகழ் படைத்தா ரிந்
நகர் வணிக ழாக்கள். (௪௫)

அரசர்வீதி.

அறனினின் றிழுக்கா ராகி யல்லவை நீக்கி யான்ற,
மறனினின் றிழுக்கா துள்ள மானம துடைய ராகி,
முறைகெழு முயிரா யெல்லா முதிருமன் பியலி
னோடு, மிறைசெய்யும் வாழ்க்கை யோர்வா ழேந்தன்
மா ளிகைக ளோங்கும். (௪௬)

மந்தமில்வயமானார்ப்புமதகரிபிளிறுமார்ப்பு
மெந்திரத்தேரினார்ப்புமிகலுடைவீரரார்ப்பு
முந்திடுசெயலைக்காட்டுமும்மையாமுரசவார்ப்பு
மந்தமின்றியங்கிநிற்குமரசர்பொன்மாடவீதி. (௪௭)

அந்தணர் வீதி.

ஓதலேயோதுவித்தல்வேட்டல்வேட்பித்தலோடு [ர்
யீதலேயேற்றலென்னவியம்பறுதொழில்கள்செய்வா
மாதொருபாகனைமரபினுக்கிறையாக்கொண்டோர்
மேதகுமறையோர்வாழுமேனிலைமாடமோங்கும். ()

முதல்வழி சார்பே யென்ன மொழியுமுந் நூலுந் தங்கள், மதிபெறு முளத்தே யுள்ள வகைமையைத் தேற்று வார்போ, லிதமுறு மார்பின் முந்நூ லிலங்கிடப் பூண்டார் நல்ல, கதியுறு மந்த ணப்பேர்க் கார ணம் விளங்க வாழ்வார். (௮௯)

இந்நகர் மறையோர் செய்யு மிட்டியி னெழுதீந் தூமந், துன்னிமேற் போந்து வானந் தொடர்புகை வண்ண மாக்கிற், றன்னரு மவர்த மில்லின் யூபமுந் * தருமத் தோங்கு, மன்னவ ருள்ள நீர்மை யவபிரு தங்கள் காட்டும். (௯௦)

மன்னுமாமகங்களாற்றிமந்திரமுறையிற்கூவி
யிந்நகருவந்துவாழும்பூசுரரிடையருந்து
பன்னருமவிகணல்கும்பண்புறுசெயலாலந்தப்
பொன்னகர்ச்சுரரைத்தம்போற்பூசுரராக்கினார்கள்.()

ஒருபிறப்பெய்தியபாலிருபிறப்புற்றுமூன்று
துரிசினிற்றீர்ந்துநான்குதொன்மறைதேறியைந்து
தருபொறியடக்கியாறுசார்பகையகற்றியேழு [ர்வார்.
வருபிறப்பொழிந்தேயெட்டுவான்குணத்திறைவற்சா

* தருமம் - யூபத்தம் பத்தி னுனியுமாம்.

மூத்தழலோடும் * வேறுமுதிர்தழல்வளர்ப்பாரையர்
மெத்துநல்லதிதியோர்கள்வெம்பசித்தழலவிப்பா
ரத்தினூர்பூசையன்றியகங்கொள்ளார்வேறுபூசை
சித்தமங்கவர்பாலன்றிச்சேர்கிலார்வேறிடத்து (சநு)

நாந்தகமாதியாகநவின்றிடுங்கருவியெல்லாங் [ங்கண்
தேய்ந்திடவழிவுசெய்யுஞ்செய்கையொன்றுடையவ
வாய்ந்திடுமறையோர்தங்கள்வாய்மனுக்கருவியோாந
ருய்ந்திடினழிவினேடுமாக்கமுமியற்றவல்ல. [ன்

நான்மறை யங்க மாறு நவிலுமீ மாஞ்சை தர்க்க, மேன்மைய புராண மிக்க மிருதியாம் வித்தை சேரும், பான்மைய பொருள்க டேர்ந்து பகர்வுறு வாதஞ் செய்வோ, ருண்மலி யுயிர்போ லென்று முலப்புருக் கழக மெங்கும். (சஒ)

மற்றையநகர்கள்வாழுமாந்தர்களாயினரை
யுற்றிடுதுயிலினீக்குஞ்சூட்டுவாரணத்தினைச
சொற்றவிர்நகருளாரைத்துயிலினினீக்கல்செய்யும்
பற்றவாமறையோரோதும்பரமவாரணத்தினைசை()

கரந்திகழ் பலாசத் தண்டுங் கடியிடை முஞ்சி நாணின், நிரந்திகழ் தானைத் தூக்குஞ் செறிந்திடு சிகையின் சீரு, முரந்திகழ் மான்றோ லார்த்த வொள்ளூமும் நூலும் பொற்ப, வரந்திகழ் மாணி யோர்சார் கிடைகளே வயங்கு மெங்கும். (சஎ)

---

* வேறுமுதிர்தழல் - ஔபாசனக்கினி.

வேதமுற்கலைகளோடுவிரிந்திடுசிவாகமங்க
ளோதியேயுண்மைதேறியுயர்கயிலாயநாதச் [ய்
சோதிதன்மேனிதீண்டித்தொன்மையாராதன்றுசெ
கோதிலாவாதிசைவர்குலங்களும்பலவாம்கண். ( )

கரகமார்கரத்தராயுங்காவிதோயுடையராயு
மருவுகோவணமேலார்த்தவளவியகோலராயும்
பரசிவவுணர்ச்சியின்றிப்பரகதியிலையென்வேத
சிரமுணர்ந்துயர்வோராயுந்திகழுமாதவர்களெங்கும்.

குடிலையொன் றிரண்டாய்ப் புல்லக் குலவியே யவ தரித்த, கடகரி முகத்துப் புத்தேள் காவல்செ யையனுதிப், புடைதரு தேவ ரெல்லாம் பொலிவொ டு பொருந்தா நின்ற, வடுவிலா லயங்க ளெங்கு மரு விடு மளவிலாத. (க00)

மும்மல நோயை நீக்கு முதல்வரா மான்ழு நாதர், தம்மருட் சத்தி யாய சௌந்தர நாய கிப்பே, ரம்மை யோ டினிது மேவி யமர்ந்துவீற் றிருக்குங் கோயில், செம்மைசேர் சீர்க ளோங்கச் சிறந்தொரு பாலின் னைகும். (க0க)

மருமலர் மகிழ்சீ தேவி வனப்புறும் பூமி தேவி, இருவரு மிருபால் மன்னு மெழிலினோ டருளின் வைகிப், பெருமையிற் றிகழு மாதி கேசவப் பெரு மாள் கோயி, லொரு மருங் கதனின் மேவி யுயர் வொடு விளங்கு மன்னே. (க0உ)

இயலுறுமிவைகளெல்லாமெழிலினோடியங்கப்பெற்
பயிலுறுநகரந்தானோர்பதக்கமாமதற்குநாப்ப [றுட்

னுயா கயிலாயநாதரொருதிருக்கோயிலந்த
நயனுறுபதக்கத்தோங்குநாயகமணியேயாகும். ( )

திருத்தகு கோயிற் றென்கீழ்த் திசையினிற் சித்
தி நல்கும், பொருத்தமார் சித்த தீர்த்தம் பொலிந்
திடு மதற்கு மேல்பால், விரத்திசேர் முனிவன் வே
ண்டி விரிசடைப் பெருமா னுய்ப்ப, வரத்தொடு
வந்த சேது கங்கைநீர் மலியு மாதோ. (௧0௪)

வேறு.

தந்திரமுணர்ந்துளார்தாஞ்செய்பூசையின்
மந்திரவகைகளினுருக்குமாமதிற்
சுந்தரநிலைமையைத்துலங்கக்காட்டுமே
கந்தரமேலெழுகடிகொண்மாமதில். (௧0௫)

மும்மதில்கடந்திடுமுக்கண்மூர்த்தியைத்
தம்மகத்தமைத்திடுந்தகைமைபெற்றதோ
ரிம்மதிலென்றுமேயிறிலன்புடைச்
செம்மதியடியவர்திறத்தைத்தேற்றுமே. (௧0௬)

நாகமேற்பதங்களைநலித்திடாவகை
யேகநாயகன்சிவனேவவந்துநற்
சேகுயர்மதிலுறீஇயழுத்துஞ்சீரொன
வாகையினெருங்குவவிடபமாநிரை. (௧0௭)

இன்னமும்பொறிநிறைமெயடுப்பன்வில்லென
வன்னதுவராவகையமைவன்யானென

வுன்னியேமேருவிவ்வுருவுற்றுலெனப்
பொன்னுயர்முடியொடுபொலியுங்கோபுரம். (க0அ)

மலங்களைந்தாண்டிடும்வள்ளலாருறை
நலங்கெழுமிலிங்கமங்கதற்குநாடுமுற்
றுலங்குசீர்க்கோபுரந்தூலலிங்கமா
யிலங்கலின்யாவருமிறைஞ்சுசீரதே. (க0௯)

சேணுறுபதங்களிற்றிகழுவோரொலாங்
காணியமதிபுனைகயிலைநாயகன்
மாணடிவழிபடவிறங்கிவந்திடு
மேணியினிவந்துளதெழில்கொள்கோபுரம். (கக0)

மடலவிழ்நீபமாமாலைப்புங்கவன்
மிடலுறுசூரனதகந்தைவீட்டிட
வடைதருவிச்சுவரூபமன்னதா
னெடுநிலைகெழுமுறநிவந்தகோபுரம். (ககக)

தொழுங்கயிலாயநற்றேன்றன்முன்னுற
வழங்குசீர்க்கோபுரவாயில்சார்ந்தவ
ரொழுங்கதிர்ச்சிவபுரவாயிலேயல
தழுங்கல்செய்யமபுரவாயிலண்ணுறார். (ககஉ)

சிம்யமாமகளருள்செய்யுஞ்சீரினை
யமைவுறக்காணியவடைந்தகுன்றுகள்
சமைதரநின்றெனச்சார்ச்சூழ்வுறு
மிமையவர்சினகரமிமைக்குமென்பவே. (ககங)

பண்ணவர் தலைக்கொளும்பர்க்கணுருறு
மெண்ணருமிரவியின்மண்டலம்மிவண்
மண்ணினிய்குற்றெனவள்ளலார்திக
ழொண்ணிழன்மணிகெழுநிலயமோங்குமே. (௧௧௪)

நிறைநிலவுலாவினினீடுயிர்க்கெலா
முறைவருள்பிராட்டிதன்னிடத்தினோங்கிடப்
பெறுமதிமண்டலமானும்பேரரு
ளிறைவிசேர்நிழன்மணியிமைக்கும்பொற்றளி. ()

அம்மையோடப்பனைத்தெதிரிலன்பினோர்
செம்மையிற்பணிந்திடுவாருஞ்சீர்த்திக
டம்மைநன்கிசைத்திடுவாருஞ்சால்பொடு
விம்மெனநடித்திடுவாருமேயெலாம். (௧௧௬)

மறையொலிமனுவொலிமணியினொல்லொலி
துறைசெழுபண்கொடேவாரத்தொல்லொலி
நிறைதிருவாசகநெருங்குநல்லொலி
யறைகொளின்னியவொலியார்க்குமெங்கணும். ()

இத்தகுகோயிலினினிதுமேவுறு
நித்தகல்யாணியாநிமலைநாயகன்
முத்தொழினாயகன்மோனநாயக
னத்திருநாயகன்கயிலைநாயகன் (௧௧௮)

அந்தநன்னாயகனாருயிர்க்கெலாஞ்
சிந்தையினினைந்தவைசேரும்வண்ணமே
தந்தருள்கருணையின்சால்பின்மேவுறு
மிந்தனவாறுதலிறைவிதன்னோடுமே. (௧௧௯)

பன்னரும்பான்மைசேர்பகவனாகிய
வன்னவனருளிளையகங்கொடேயவன்
மன்னியசரிதையைவடமொழிப்படி
தென்னுறுமொழியினாற்செப்பலுற்றனன். (௧௨௦)

திருநகரப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௬௨

புராண வரலாற்றுப்படலம்.

திகழிரும்புவிபடைத்தவன் முனிவரர்சில
நிகழுமாறொருதருப்பையினேமியையுருட்டப்
புகழுமன்னதுபோகியேயிறுத்ததோர்பொருட்டான்
மகிழுறும்பெயர்படைத்ததுநைமிசவனமே. (௧)

மண்டனிற்றிகழ்தபோவனமெனப்படுமகிமைத்
தண்டகாவனமுதலியதலங்களிற்றலையா
மெண்டிசாமுகமளந்திடுமிருஞ்சினைமீது
விண்டதேங்கணீடருச்செறிநைமிசவிபினம். (௨)

உற்றசெவ்வியையுணர்ந்திடுமுறுவராமுழுவர்
பற்றுறும்புலந்திருத்தியேபத்திநெல்வித்தி
யற்றமின்மைநீர்தேக்கியேயவக்களைகளைய
நற்றவப்பயிர்வளர்நிலநைமிசாரணியம். (௩)

திங்கள்சூடியசிவபிரான்றிருச்சடையிதழிக்
கொங்களாவியகுணத்தராயன்னவன்குவ்வி
லெங்களம்மைசேரிமகிரிமிசைவிடவிறங்குங்
கங்கைமாநதிகலந்ததுநைமிசக்கானம். (௪)

அனைவருந்தொழுஞ்சிவமுளத்தழுத்துதலானும்
வினையைவீடுறச்சினத்திடலானுமுண்விடயந்
தனைவென்றுத்துறலானுமத்தனிவனத்துறுவர் துடம.
முனிவரொண்பதோர்மொழிப்பொருணுட்டுவர்முழு
தோலையர்த்துநன்மலர்ப்பொடிதுதையவேய்பூசி
மாலைவண்டெனுமுருத்திரமணிவடம்பூண்டு
கோலவீழ்சடைகுலவியேகாலினீர்பருகி
மேலவாந்தருவெனுமுனிகணங்களும்விளங்கும். ( )

குயில்கள்கூவுவதென்றனின்றசைகுவகுலவிப்
பயில்வகிள்ளைகளறுபதம்பாடுவவேலுக்
கியலுங்காகளுந்தேர்பரிநாரியாயிருந்துஞ்
செயிர்விளைத்திடல்வியிலவாயினசிறிதும். (எ)

பின்னமுற்றிடாப்பிரமமாரொழுக்கமும்பிரியை
துன்னொழுக்கமும்வனத்துறையொழுக்கமுந்துறவு
மன்னொழுக்கமும்வழுவிலாமெய்யர்கள்வசிக்கும்
பன்னசாலைகள்பற்பலபரந்தவட்பயிலும். (அ)

கூறுநான்மறைமுழக்கமுங்கோதிலாகமங்கள்
வீறுமிக்கெழுமுழக்கமுமிருதிகண்முழக்கு
மாறிலாதபல்புராணநன்முழக்கமும்வைய
மீறுசேரினுமீறுசேர்ந்திடுதலையியையா. (௯)

* பிரமசாரிகளங்கிய + மனையினிற்பிரியா

---

* பிரமசாரிகளங்கி—சமிதாதானாக்கினி.

+ மனையினிற்பிரியாரிருவகைப்படு மெரிகள்—ஔபாசனாக்கினியும் அக்கினிகோத்திராணியும்.

ரிருவகைப்படுமெரிகளுமீறின்மெய்த்தேசும் [இ
பொருவில்சோதிகொள்விருக்கமுங்காணிருள்போக்
கிரவலோதியாலவித்தையைவிலக்குமாறுணர்த்தும்.

வேதநான்கவாவிதித்திடும்வியாதனார்வினை
மாதியாகியவருந்தலமிருந்துவந்தடையுங்
கோதிலாரிடர்குறைவினைக்குறிக்கிலார்கலியிற்
போதுகின்றதோர்நதித்தொகைபோன்றிடுமன்றே.

வேழங்கேசரிமாவொடுவியாக்கிரமுன்னாச்
சூழுமாக்கடந்தொகையொருதுறையினீர்பருகிக்
காழுறும்பகையின்மையைக்காட்டுமேலங்கண்
வாழுநற்றவர்மாட்சிமைவகுத்திடும்வகைத்தோ. ()

இவ்வகைப்படுநைமிசமெனும்வனத்தொருகாற்
சைவவாகமம்வல்லநல்விரதமாதவர்க
ளொளவியந்தவிர் *சத்திரயாகமொன்றதனைத்
தெய்வமாமறையிசையொடுசெய்குவாரானார். (கரு)

அன்னகாலைவான்பெருமையுமளவிலாத்தேசு
மன்னுகின்றசீர்ச்சூதனுமாதவர்கோமான்
றன்னையன்பொடுநன்குறப்பரவியத்தகையோன்
மின்னுமாமுகநோக்கியேவினவுரைசெய்வார். (கச)

பரசிவன்கதையமுதநற்பானத்திற்றெவிட்டன்
மருவவேயிலையெங்களுக்கின்னுமவ்வள்ளல்

---

* சத்திரயாகம் — பலருங்கூடிப் பலவகைத் தருமங்க ளோடு நெடுங்காலஞ் செய்யப்படு மொருவகையாகம்.

மொருபவந்தனையகற்றிடும்புண்ணியக்கதையை
பருளுருக்கொளுமருந்தவபகர்ந்தருளன்பால். (௧௫)

நல்லதீங்கதைகேட்டிடுநயப்பினாலன்றே
வெல்லுமற்புதச்சித்தவைராக்கியவீறுந்
தொல்லைத்திவ்வியஞானமுஞ்சோதிபாலொழியா
தொல்லும்புண்ணியத்ததிகமாம்புத்தியுமுண்டாம் ()

என்றுகூறியவிருந்தவரின்மொழிகேட்டுத்
துன்றருட்சுவைநிதியமாஞ்சூதமாயோகி
நின்றயாவையுமுணர்ந்திடுநிகரிலாவியாத
மன்றனைத்தனதிதயமாங்கமலமேல்வைத்து. (௧௭)

முத்திறப்படும்பவங்களைமுருக்கியமுனிவர்
சித்தமாகியதாமரைசெவ்விதின்மலர
வுய்த்தசெங்கதிர்ப்பரிதியஞ்செல்வனுயுவந்தே
யித்திறத்தினாலின்புறவியம்பியேயருள்வான். (௧௮)

தேவதேவனதிருங்கதைசெவிக்கொளவிரும்பு
நீவிரோநிலவுலகிடைநெடுந்திருவுடையீர்
தாவிலாப்பெருந்தகைபெறுந்தவத்தினீரதனை
கூவுகின்றனமன்புடைக்குணத்தொடுங்கேண்மின். ()

நிகரிலாகமமெங்கணுநிகழுமந்தணமா
யிகலிலாமலேயமருவதிளைப்பினையாற்று
நகரமாகுமரன்மற்றதுநனிபெரிதுலகின்
மிகுதியாகியதலங்களின்மேன்மைபெற்றுளது. (௨௦)

ஓதுபாவங்களனைத்தையுமுனைத்திடலொண்ணாப்
பாதகங்களெவ்வெவற்றையும்பரிந்திடப்பாற்று.

நீதிசேர்ந்ததாலன்னதனிகரின்மான்மியத்தைப்
பேர்தமாம்வகைபுகலுவம்புகரிலாப்புலத்தீர். (௨௧)

தப்பிலாவகைமுழுமையாந்தருமங்களுணர்ந்து
மிப்புராணங்கேட்பவர்களுக்கெவ்வகைப்பாவத்
துப்புநீக்கிடுமிகபரத்தொன்மையைப்பயக்கு
மொப்பிலாதசௌபாக்கியமுதவிடுமென்றும். (௨௨)

முன்னைநாளினிலகத்தியமுனிவரன்விரும்பித்
தன்னுணர்ந்திடும்வசிட்டனையாதியாச்சாற்றும்
பொன்னிருந்தவர்க்கிசைத்ததோர்புராதனவனத்தின்
மன்னுமான்மியமறைகளின்முடிவினில்வயங்கும். ()

வேதவிற்றிடைத்தவமறைபொருள்களைமிகவும்
போதமாம்படிதெளியவேபுராணங்கள்புகலு
மாதலானவில்புராணங்களெவற்றினுமமைய
வோதிடப்படுமிளைசையாந்தலத்தினதுண்மை. ()

ஆயினுஞ்சிவபுராணங்களவற்றினுளொன்றாய்
மேயதோர்பிரமாண்டமாம்புராணமேவிரிவாய்
நேயமோடதன்வகைமையும்பெருமையுநிகழ்த்து
மேயவாறுலகுய்ந்திடவியம்புவமவையே. (௨௫)

வேறு.

முன்னமோர் காலங் காசியாந் தலத்தின் மூலமா மறைமுடி வுணர்ந்தோர், பன்னுமைம் முகத்துச் சிவபர்ஞ் சுடரை யுளத்திடைப் பதித்திடு நீரார், மன்னுகற் பத்தி விழுங்கவே தோன்று வடிவமா கேச்சுரத் தொல்லோர், தன்னைநே ரில்லாத் தவத்தையே யுலகிற் றலைமைசேர் தனமெனக் கொண்டோர். (௨௬)

வசிட்ட னங்கிராக் காசிபன் குற்ச னத்திரி பிருகு வான் மீகி, விசிட்ட னுஞ்சத்தி பராசரன் வியாதன் சுகன்கட் முனிவரன் விடயம், புசித்தலில் போதா யனன்புலத் தியன்சா பாலியே கவோளகன் புலக, னசித்தலில் வாம தேவன்யாக் கியவற் கியன்சன கா தியர் நால்வர். (௨௭)

இத்திறப் பெரிய ராதியா முனிவர் யாவரு மொ ருங்குசேர்ந் தாங்கே, சித்திதேர் ஞான வாவியே முதலாந் தீர்த்தங்க ளெவற்றினும் படிந்து, பத்தி யின் விசுவ நாதநந் தேவைப் பணிந்துயர் தோத்தி ரம் பகர்ந்து, முத்திமண் டபத்தி லிருந்துநம் பெரு மான் முதன்மைபா ராட்டினர் மகிழ்ந்து. (௨௮)

அந்தநற் பொழுது பத்தினின் றேவ வருந்தவர் வே தநா லகலாச், சிந்தையைத் திருத்திச் சிவத்தினை யிருத்துஞ் செல்வமுந் திருச்சடைச் சீரு, மிந்தலா முகமு மக்கமு நீறு மிலங்கொளி மேனியும் பொலிந் து, முந்துற வதிந்த வகத்திய முனியை முதத்தொடு போற்றுவார் தொழுது. (௨௯)

வெல்கநீ குமர நாயக னடியார் வேங்கெனுந் தலை மைபூண் டுள்ளோய், வெல்கவைம் புலத்தை வென் றிடுந் தவரின் மேம்படு மகிமைபெற் றுறுவோய், வெல்கவே தாந்தப் பங்கயத் தடத்தை விளக்கிடும் விண்மணி யானோய், வெல்கவா தாவி மேவல வென் னவியந்துபின் னியம்பினர் விரிப்பார். (௩௦)

பவ்வமா ருலகின் மகத்துவம் விசிட்டம் பல்லிய சுயம்புவா மிலிங்க, மவ்வவை யனைத்து மண்ணலா ரருளா லறிந்தனை யவற்றினுண் மேலாய்த்,' திவ்விய புத்தி முத்திக ளளிக்கு மிலிங்கமே தீர்த்தமே தலமே, யிவ்வொரு மூன்று மார்வமீக் கூர்ந்து வெங்களுக் கிசைத்தரு ளென்றார். (௩௧)

என்றசொற் கேட்ட வகத்திய நாமத் திருந்தவப் பெருந்தகை முனிவன், மன்றவா தரித்து வடிவினி லெங்கு மயிர்த்தொகை பொடிப்பவா ரிசம்போற், றன்மெழில் வதன மலரநீர் விழிகள் சொரியநாத் தழுதழுப் படையக், குன்றலில் குணத்து வசிட்டனை முன்னு மறிஞரைக் குறித்திது கூறும். (௩௨)

வினையிலீர் நீவிர் வினவிய தாற்ற மேலதாம் விடையதற் களிப்பே, மனமுறக் கேண்மி னென்றுபின் னுளத்தை மலைவுறா தொருப்பட நிறுத்தித், துனிவினை யகற்றும் விசுவநா யகனுந் தொல்பெருந் தேவையு மகலாத், தனதருட் குருவா மறுமுகம் படைத்த தாயனுன் றன்னையு முன்னி. (௩௩)

இளைத்தலை யொழிக்குந் தலத்துவீற் றிருக்கு மிறையையு மிந்துநேர் முகத்தாற், றளைத்தகை சிதைக்கு மங்கலத் திறைவி தன்னையுஞ் சார்ந்தவ ரிடும்பை, வளைத்தடுஞ் செல்வ வடுகநா தனையும் வணங்கிநல் லஞ்செழுத் தெண்ணிக், கிளர்ந்தருட் கடலின் முனிவரை நோக்கிச் சகமெலா முய்யுமே செப்பும். ()

முன்பெருங் கயிலைக் கோயிலின் வீணை முனிவற்
கு முளரியின் முளைத்தோ, னின்புறும் வகையி னீங்
கிது விரித்தே யிசைத்தன னென்றனன் கேட்ட,
மன்புனை யறவோர் மலரய னெங்ஙன் வகுத்தனனா
வகுத்தியா லென்றே, யன்பினொண் காதை,விருப்பி
னால் வினவ வன்னவ னருளுவா னானன். (௰௫)

வேறு.

உலகம்யாவினுமொருவுருதுறைந்திடுமொருவ
னலகிலாவுயிர்க்கருளுவான்சத்தியானமைந்த
விலகுருக்கொடுவெளிப்படவினிதுவீற்றிருக்குஞ்
சிலையெனப்படுந்தகையதுதிருக்கயிலாயம். (௰௬)

பணிபரித்திடும்பாருலகிருள்கெடப்பாற்று
மணிபெறும்படியெம்பிரானமைத்ததோர்தூண்டா
மணிவிளக்கினையொத்துளதாழியுமழியாக்
கணிதமற்றிடுஞ்சுடருடைக்கயிலையங்கிரியே. (௰௭)

கண்டுறுங்குளமியைதலாலைம்முகக்கவினால்
விண்டுதன்னடிவணங்கலான்மேகமேற்கொளலான்
மண்டபப்பொலிவெய்தலான்மறலிமாய்ந்திடலாற்
றொண்டர்சூழ்தலாற்சிவனெனத்தொழப்படுங்கயிலை

சிமயம்பெற்றிடுதொடர்பினாற்சிவனிடத்துறலாற்
கமழும்பூங்கொடித்தகவினாற்களிறுதோன்றுதலாற்
றுமமகன்றிடவுயிர்த்தோகைதன்வயின்வரலா [ல்
லுமையெனப்படுமொருத்தியையொத்ததவ்வோரங்க

பண்ணுலாமறைமெயவைகளுமிருங்கலைபலவு
மெண்ணிலாவுயிர்முழுவதும்பற்பகலியற்றும்
புண்ணியத்தொகையாவையும்பொற்புறத்திரண்டு
கண்ணியோருருவந்தெனவிளங்குமந்நகமே. (௪0)

பிள்ளைவான்மதியணிபவன்பெட்புடனிருக்க
வெள்ளிவெற்பெனஞானமார்பிழம்பினைவிதித்திட்
டுள்ளதாம்பெருங்கயிலைமிக்குயர்ந்தஞானியர்தந்
தள்ளருந்திருமனத்தினுந்தணப்புறுதியலும். (௪௧)

எவ்வகைப்படுமுலகுளோருளத்தையுமிழுப்ப
தெவ்வகைத்தனியறங்கட்குமிருப்பிடமாய
தெவ்வகைச்சுசிப்பொருளையுமிருஞ்சுசி.செய்வ
தெவ்வகைத்தினும்புண்ணியர்தொழுவதவ்விரவி. ()

பிணிகணீக்கியெப்பொருள்களும்பெறச்செயுஞ்சிந்
மணியினங்களுங்கோக்களுமலர்களியொழியா [தா
தணிதருக்களுமதுவிழுதமுதம்பாறயிரக
ணணியவாவியுமங்கவணலத்தொடுநிலவும். (௪௩)

திருந்துமாமறையோசையுந்தேவதுந்துபிக
ளிரந்தவோசையுந்தவர்துதியோசையுநீடும்
புரந்தராதியர்வேண்டுமோசையும்பூதர்
பரந்தவோசையுமருவிவீழோசையும்பல்கும். (௪௪)

பல்வகைப்படுஞ்சிகரமார்பந்தியுமணிசேர்
பல்வகைப்படும்விமானங்களொழுக்கமும்பகரும்
பல்வகைப்படும்பிரமதகணங்களின்பதியும்
பல்வகைப்படும்பாரிடர்பவனமும்பரக்கும். (௪௫)

இன்னதாகியசிறப்பினையியற்கையாவுடைத்தா
மன்னதோர்பெருங்கயிலைமேனைந்தலையகத்தி [ந்த
லுன்னுதெய்வவெண்கமலமென் பொருட்டெனவுயர்
பொன்னிறுவைமகோயிலொன்றுற்றதுபொலிந்தே.

முந்துமொள்ளொளியரதனதீபிகைமுயங்கு
மந்தவாலயமதனிடையனந்தசூரியர்கள்
வந்தொருங்கியேயொளிர்தல்போனவமணிமயமா
யுந்துசீர்கொளுமரியணைப்பீடிகையும்பர். (சஎ)

திங்கள்சூடியசடிலமுந்திகழொருமுகமும்
பொங்குமுக்கணுமான்முதற்பொலிந்திடுநான்கா
மங்கையுங்கறைக்கண்டமுஞ்சேர்ந்தமெய்யழகு
மங்கைபாகமுமுடையதோர்சீகண்டவடிவாய். (சஅ)

பம்புபல்லியங்கவரிகள்பீலிகள்பரித்துத்
தம்பரஞ்செயப்பாரிடர்தாபதர்பரவத்
தும்புருப்புகழுதியோரியாழ்கொடுதிப்ப
வெம்பிரான்பெருங்கருணையோடினிதுவீற்றிருந்தான்.

பரியநாரணனிதயமார்சுடரிடைப்பதிந்த
வரியகாட்சிபோற்கயிலைசேர்கோயிலினணைமேற்
றெரியவெம்பிரானருளினுற்றிகழ்ந்துவீற்றிருக்கும்
பெரியசீர்த்திறமினைத்தெனப்பேசுதற்கெளிதோ. (•)

அப்பரன்றனைவழிபடவுயனரியுவனை
ன்வப்பினுக்கிறையாதிபூரம்வானவர்தவத்தி
னுப்பிலாதுறைநாரதன்முதலியவுறுவர்
கப்பிலேனையவிருடிகளியாவருஞ்சார்ந்தார். (ருக)

அன்புநின்றமுன்னோ ருறவனைவருஞ்சார்ந்து
முன்புகோபுரத்தலையினின்முதன்மைகொண்டிருந்
துன்புநீக்குநந்தியம்பிரான்றொல்லருள் பெற்றுக்
கொன்புனைந்ததோர் திருத்தருங்கோயிலுட்குறுகி. ()

தேவதேவுமுச்செகங்களுக்கிறையுமாய்த்திகழ்ந்து
நோவகற்றுநஞ்சறைமிடற்றண்ணலைநோக்கி
யேவுமன்பினுவிறைஞ்சியேயைந்தெழுத்தெண்ணிக்
கோவின்முன்னுறச்சிவனருள்குறிக்கொடேயிருந்தார்.

வேறு.

இருந்திடுங் காலை யோகத் தேற்றமா ரதனென் னு
மத், தருந்தவன் பதுமக் கண்ணனன் பயுத் துதித்
தோ னென்னைப், பொருந்திய விருவர் தம்மைப் போ
ற்றியே விநயத் தோடும், திருந்திய கமலத் தோனைத்
தெரிந்துவந் தியம்பு கின்றான். (ருச)

புண்ணியத்தலங்களுள்ளும்புண்ணியதீர்த்தத்துள்ளு
திண்ணிலத்தமுதநல்குந்திவ்வியவிலிங்கத்துள்ளு [ந்
நண்ணியதூய்மையானநலமெலாம்வல்லைநேர்வ
தண்ணியமறங்கடப்பதலமுதன்மூன்றும்யாவை. ()

பவக்கடல் கடந்து முத்தி பசுக்கள்பெற் றிடுமா
றெங்ஙன், னிவக்குமூ வகைய கன்ம நிகழ்பய னெதனு
லெய்து, மிவற்றினை யெல்லா மெந்தா யிசைத்தரு
ளன்பின் சீட, ருவக்கவெப் பொருளுந் தீர்த்த ருண
ர்த்துவ ரன்றோ வென்றான். (ருசு)

என்றுநா ரதப்பேர் பெற்ற விருந்தவ னியம்ப
லோடுந், துன்றுபல் புவன மெல்லாந் தோற்றிய பிர
ம தேவன், மன்றவத் தொல்லோன் சொற்ற வாசகஞ்
செவிவாய்த் தேக்கி, யொன்றிய வருளி னாலே வுல
கெலா முய்ய வோதும். (௫௭)

நாரத நீயிங் கெல்லா ஞாலமு முய்யு மாறு, கூர
வே வினவ லுற்றாய் செவியிடைக் கொள்வோர் பா
வம், வேரறக் களைந்து மிக்க வெறுக்கையை வழங்கு
மன்ன, சீரினை விளம்பு கின்றுஞ் சித்தமொன் றிட
வே கேட்டி. (௫௮)

தனயநீ வினவி யுற்ற தலமுதன் மூன்றி னுக்கும்,
துணியக லுவமை யான தொல்லைமா லுலகி னில்லை,
யனையவை புவியில் வாய்ப்ப வமைந்தன வவற்றின்
மேன்மை, யெனையவ ரியாருந் தேற்றி யலுமந் த
ணமாய் வைகும். (௫௯)

இளசைமா நகரம் பிள்ளை யிருந்தல மெவைக்கு
மேலாங், களிதரும் கயிலை வெற்புக் கடுப்பது கயிலை
நாதக், கிளர்பெய ரிலிங்கத் திற்குச் சேறினை யெங்கு
மில்லை, நளிர்மிகுஞ் சித்த சித்த நயப்பினுங் கொப்
பொன் றுண்டோ. (௬௦)

என்னவே யிசைத்து கஞ்சத் திருந்தவி சிருந்த
தோன்றல், பொன்னடி வணங்கிப் போற்றிப் பொரு
விலா விரும்பூ தெய்தித், தன்னிகர் தலமுன் மூன்

MAHAMAHOPADHYAYA

றுஞ் சாற்றினை தொகுத்தி யாரு, நன்னெய் துறவி ரித்து நவிலுதி யென்றான் றூயோன். (௬௧)

புன்மைசே ரவங்கண் மாற்றிப் புரையிலாத் தவங் கள் செய்தோ, னன்மைசேர் பத்தி யோடு நாரத மு னிவன் கேட்பப், பன்மைசேர் * பொழில்க ளெல் லாம் படைக்குநான் முகத்துப் புத்தேள், வன்ம சேர் பான்மை யின்றி வகுத்தவை யருளிச் செய் தான். (௬௨)

கயிலையிற் கமல யோனி காதலித் தருளிச் செய்த, வியனுறு மிளசைத் தான மேன்மையை யன்ன கா லை, யயலுறு மியாருங் கேட்டா ரன்னதை யுங்கட் கின்னே, நயமுற மொழிது மென்று நற்றவ னவில லுற்றான். (௬௩)

பாராசரர் ச்சாற்றுப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௬௨௫.

தலவிசேடமுந் தீர்த்தவிசேடத்திற் சுபத்திரன்கதையு முரைத்த படலம்.

திருமையாருமுளங்கிகழுண்மையி
ரருமையாருறுமம்புவிக்கைலையா
மிருமையாருமிளசையெனுந்தலப்
பெருமையாருந்தெரிந்திடப்பேசுவாம். (௧)

* பொழில்—உலகம்.

சுபத்திரன்கதையு முரைத்தபடலம்.

என்றுபுண்ணியத்தானங்களெங்கணு
மொன்றுமேயமைந்துற்றிடவில்லன
வன்றுசங்கரனாகியவெம்பிரான்
மன்றவாற்றுவைத்ததிளைசையே. (௨)

ஆதலாலதன்மேன்மையனைத்தையுங்
கோதிலாதுணர்கொள்கையர்யாருளர்
மாதுபாகனெனப்படும்வள்ளலே
பேதமின்றியுணர்ந்திடும்பெற்றியான். (௩)

வேறு.

முதலுகந்தன்னின்ஞானமுந்துமற்றையதின்வேள்வி
யதன்பினாமிரண்டினீகையாரியவீடுதவுமென்றும்
விதமுறுமவற்றினெல்லாம்வியன்சிவபூசையொன்றே
மிதமிகுமுத்திநல்குமென்றுநல்லறிஞர்சொல்வர். ( )

தீமைதீர்த்தின்பநல்குஞ்சிவலிங்கபூசைதானுங்
காமுறுபவர்க்குப்பன்னாட்கழியவீடருளுமென்ப
ராமதத்தலத்திலந்தவரும்பயன்விரைந்துநல்குந்
தோமிலத்தலத்தின்றன்மைசொற்றிடுகிற்பார்யாரே

வேறு.

இளையாற்றங் குடியென்று கேட்டலினா லறம்பெ
றுவ ரியல்சேர் மாந்த, ரிளையாற்றங் குடியென்று நி
னைத்தலினாற் பொருளடைவ ரேற்ற மிக்க, விளையாற்
றங் குடிதன்னைக் காணுதலா லின்புறுவ ரிடைய று
ம, விளையாற்றங் குடிதன்னில் வதிதலினா லிறைவன
டி யெய்தி வாழ்வார். (௬)

காசிமுதற் புண்ணியநற் றலங்களிலே யுடன்முடி
விற் கலப்பர் முத்தி, தேசுடைய விளைசையினின் மூ
ன்றுதினம் வசிக்கினது சேர லாகும், பேசுபெரும்
பாதகமாம் பஞ்சினுக்குச் சூறையெனும் பெருமைத்
தாகி, யேசகலு மப்பதியின் முன்வினை சிந்திடுமா
றெய்தல் வேண்டும். (எ)

அறியாமை மயக்கமொடு தெய்வகதி யெனப்புகலு
மவற்று ளொன்றுன், மறைபுகழு மிளைசைநகர் புகி
னுமவர் பாவமெலா மாய்த லுண்மை, * யுறவிமுத
லானவனை யுயிர்களவன் முத்தியடைந் துய்யு மாற்
ருன், முறைதருமத் தலந்தனக்கு நிகரில்லை யில்லை
செக மூன்றி னுள்ளும். (அ)

அனைவருக்கு மிருமைதரச் சிவபெருமா னிருமித்
த வனைய தானம், வனமவுலி முதலமரர் சித்தியெலா
மெய்திடுவான வழிபட்டுள்ள, தினையதல நினைத்த
தொரு மாத்திரத்தே பெரும்பாவ மிரிக்கு மின்னு,
முனிவரரோ யுயர்புத்தி முத்திபெறக் கொடுக்கின்ற
முதன்மைத் தாகும். (௯)

அத்தலத்தி லென்றுமுறை யனைத்துயிர்க்கு மீள
வும்வந் தவனி மீது, பொத்துமலத் துடலுழலு மச்ச
மில்லை யீதாயப் புகலும் வேண்டாந், தத்துவத்தின்
றலைகடந்த சிவபெருமான் வீற்றிருக்குந் தலங்க டம்
மு, ளுத்தமமாம் புராதனநல் வனத்தளவின் மகிமை
யையா ருரைக்க வல்லார். (௧௦)

* உறவி—எறும்பு.

ஏவரேனும் பொறியடக்கி யுளநிறுத்தி யப்பதியி லிருப்பவராயி, னவர்மூன்று பொழுதினுமுன் னேற்றிடு னுங் கற்றினையுண் டமர்வா ரொப்பர், நவிலுமொரு முட்டியள வீதவினது மாதான நலத்த தின்னு, நில லுலதென் சித்தபுரங் காசிமுதற் றலங்களினு நோன் னைமத் தாமே. (கக)

அப்பதியின் றிருப்பெயர்கள் சிவபுரமுங் கைலாய மகில காமங், துய்ப்பவருள் புரஞ்சித்த புரம்பழைய வரணியமே தொலைவின் மன்ற, லுய்ப்பதொரு பொருவில்புர மிளையாற்றங் குடிமுதலா வுயர்வுற் றுள்ள, விப்பெயர்க ளன்றியினு மனேகமுள வறிவுடையோ ரிசைத்த பேர்கள். (கஉ)

இன்னவகை மான்மியத்தா லிளைசையெனுந் திருப் பதியே யெவற்றி னுக்கு, முன்னையதா யுத்தமத்தி னுத்தமமா மீண்டைய முனிவீ ரில்லை, யன்னபரி சுணர்திறென் வகத்தியமா முனிவிளம்ப வதனைக்கேட்டு, மன்னுபெரு வியப்பினராய் மாதவர்க ளின்னபடி வழங்கு கின்றார். (கங)

தலப்பெருமை முழுதுணர்ந்த மாதவநீ யுண்மை யினைச் சாற்றல் செய்தா, யுலப்பில்விய னிளைசைநகர் வைபவத்தைக் கேட்டுநல முற்றோம் யாங்கள், மலைப் பில்வகை சித்ததட மான்மியத்தைக் கருணையினால் வகுத்தி யென்ன, நலப்படுமம் மொழிகேட்டு முற்றுணர்ந்த கடமுனிவ னவில லுற்றான். (கச)

கேட்டபொழு தேயுயிர்கள் பெரும்பாவம் போக்
குவதாய்க் கிளரு மேன்மை, யீட்டமுள தாரியலுஞ்
சித்ததட மான்மியத்தை யின்பமாரக், காட்டுமதன்
றேற்றமொடு கழறிடுவ மின்னேயாங் கரிசு சேர்ந்து,
வாட்டமுறு முனீந்திரர்காண் மனந்தன்னை யொருப்
படுத்தி மகிழ்ந்து கேண்மின். (௧௫)

எப்போதிப் புவனமிசைத் தீர்த்தங்க ளானவைக
ளில்லை யாமோ, யப்போது கயிலையிறை யெப்பொ
ருளு மருடீர்த்த மமைத்தா னுங்கே, யொப்போதாச்
சிவதீர்த்த மெனப்படுமன் னதுபிழை யொழிக்கு
மேன்மைத், திப்போதத் தீர்த்தவுயர் வுணர்த்துமொ
ரு தொல்காதை யியம்பு கின்றாம். (௧௬)

வேறு.

முன்னமொருகாலத்துமுத்தமொடுமுழுவயிர
மின்னுமாமணிகனகம்வெற்பினெருங்குறவரன்றிப்
பன்னுமுயரகிலாரம்பறித்துவருந்திரையகலாக்
கன்னனிகர்சுவைவிருத்தகங்கையினோர்கரைதன்னில்.

நிபத்தினில்வே றில்லாத நீடுவள நிறைந்துடை
ய, சுபத்திரக மெனவுரைக்குந் தொன்மைபெறுங்
கிராமத்தில், விபத்தினையுற் றறியாத வேதியர்தங்
குலத்துதித்தோ, * னுபத்திதிசே ராரணநூ லொழி
க்கிடுநற் கலைகண்டோன். (௧௭)

சிரவுதமே மார்த்தமெனத் திகழ்கரும நெறிவல்
லோன், பொருமாரன் வடிவிலிப்பேர் பூண்டிடச்

---

* உபத்திதி—ஓதியவையுள்ளத்தமைத்தல்.

செய் வடிவுடையோன், வருபிறகே மாவனப்பை
மாற்றுமெழிற் பத்திரனைப், பொருவில்பெயர்ப் ப
ன்னியொடு பொருந்தியவில் லறம்புரப்போன். ()

இஞ்ஞாலஞ்சுபத்திரனென்றேத்துமொருநாமமுள்ளா
விஞ்ஞானம்பிகையோடுமேவியருள்வைப்பாகி [ன்
மெய்ஞ்ஞானமீந்தருளும்விருபாக்கபரமனடி
யெஞ்ஞான்றும்வழிபடுதலியற்றியேயிருந்தனனால். ()

இருந்திடுமம் மறையாள னேழுலகு மிருணீங்க,
வருந்திருக்கண் மாண்புடையோன் வைகலுமே மகி
ழ்ந்தருளப், பெருந்தவங்க ளொல்வகையிற் பேசலு
றுஞ் சரியையிடைப், பொருந்தியநந் தனம்வைக்கு
ம் பொருவில்பணி பேணிடுவான். (உக)

தாதகிகூவிளம்புன்னைசண்பகமாமந்தாரம்
பாதிரிமாதுளந்தும்பைபனிதுழாய்கரவீர [ந்து
மாதவிமல்லிகைமௌவன்மருவகம்வேர்மருக்கொழு
பீததருதேவதருபிணரிதழிமகிழ்குந்தம். (உஉ)

இவைமுதலா முயர்தருக்க ளிருங்கொடிகள் புதல்
பிறவு, நவையறவைத் துண்டாக்கி நந்தனமாம் வன
மமைப்ப, வவையெல்லாங் கண்டோர்க ளதிசயிக்க
நனிவளர்ந்து, கவைசேருந் தழைபொதுளிக் கான்
மலர்மிக் கோங்கினவே. (உங)

கொம்பரவை நின்றசையக் குலவுமலர் தேன்சொ
ரிய, வம்புதெரி வண்டிமிர வயங்கியுறுந் தருநிரைக,
டம்பயில்கை யேந்திவிழி சார்தரநீர் போற்றல்செய,

மும்பர்பிரான் றிருத்தொண்ட ருயர்கூட்ட மொப்ப
னவாம். (௨௪)

செந்திருமார்பனையேய்ப்பத்திகழ்ந்துமலர்ந்தனகாயா
வந்தணனைநேராகவலர்ந்தனபொற்கொன்றைமர
மிந்திரனையொப்புமலரியைந்தபெருங்காஞ்சிநகஞ்
சந்திரனைமானவலர்ந்தனவோங்குமரவங்கள். (௨௫)

அருணனையே கடுப்பவொளிர் மலர்பூத்த பலாசங்
கள், வருணனையொத் தவிழ்ந்தனவெண் மந்தார மம்
மலர்ச்சி, பொருணயங்கொ ளத்தேவர் போதெதிர்
பார்த் தெண்ணிலவர், கருணைநுதல் விழிப்பெருமா
ன் கழல்போற்ற வுறல்போலும். (௨௬)

சுருதியிடை விளங்குதிரி சுபன்னமிசைத் திடுகின்
ற, வரமிகுசத் திகண்மூன்றின் வடிவிதழ்கள் பொரு
ள்வில்வ, *யரியமறை நல்லவெனு மடைதன்னு லரு

---

* அரிய மறை நல்ல எனும் அடைதன்னால் அருளியது ஓர் பொருளினைத்தன் அடைதன்னால் புலப்பட நேர்காட்டிடும்.— அருமையாகிய வேதமானது நல்லவென்னும் விசேடணத்தினாலே அருள்செய்த அருத்தத்தைத் தன்னிலையினாலே தெரியும்படி நேராகக்காண்பிக்கும். ஈண்டு அரிய மறையென்றது திரிசுபன்னத்தை. திரிசுபன்னம் யசுர்வேதத்திலே தைத்திரீயோபநிடதத்திலுள்ளது. திரிசுபன்னத்தைக் கூறுகின்றமையால் அவ்வேத பாகம் திரிசுபன்னமென்னும் பெயர்த்தாயிற்று. திரிசுபன்னம் மூன்று நல்ல விதழ்களையுடைமையால் வில்வத்திற்காகிய வொருபெயர். நல்லவெனுமடை நல்லவென்னும் பொருள்படநின்ற சுவ்வென்னுமடை. அடையிரண்டில் முன்னையது விசேடணம். பின்னையது இலை. திரிசுபன்னம் நல்லவென்னும் விசே

ளியதோர், பொருளினைத்தன் னடைதன்னாற் புலப்
படநேர் காட்டிடுமால். (௨௭)

குற்றமுருக்கவையினொடுகுலவுமருமம்பாதபங்கள்
பற்றியேபடர்ந்துமலர்பல்குற்றபைங்கொடிக
ளொற்றிவிழியுடையபிரானீள்கழல்கள்பற்றியலாற்
சிற்றுயிர்கள்பேரின்பஞ்சேராமைதேற்றுவன. (௨௮)

மருவியலுங்கொழுந்துதுழாய்வனப்புடைய செவ்வந்தி
யுருவமதுவாடுறினுமுயர்வாசமுதவுதிறம்
பெருகிளையான்குடிமாறர்பெற்றிருந்தசெல்வமெலா
மருகியுமேயடியார்கட்கமுதளித்தவாறனைய. (௨௯)

காமருவுநீர்நிறைந்தகயங்களெலாங்கலந்திலகுந்
தாமரைகள்செங்குமுதந்தண்கழுநீரரும்புவன
சேமருவுசிவபெருமான்றிருவாரூர்க்கோயிலுற
நாமமிகுநமிநந்திநாட்டியநீர்விளக்கெனலாம். (௩0)

எய்தியவன் விரூபாக்ஷ வரையுறைதல் கேட்டு மதன், வெய்துறலும் றோடவுளம் வீவசந்த சாமந்த, னுய்தலையே கடைப்பிடித்தவ் வுய்யானப் பணியாற் காச், செய்துவர மலர்ந்ததெனத் திகழ்ந்திடுமம் மலர்ப்பொம்மல். (௩௧)

செந்தளிரார் தேமாவிற் சேர்ந்தகுயில் கூவுவது, கந்தமையின் றெடுத்தவுமை நந்தனத்தின் பணியு

டணைத்தாற்கூறிய பொருட்டன்மையாகிய கோமளப்பொலிவை வில்வந் தன்னிடத்திலுள்ள தளிரினாலே காட்டுமென்க. இதனால் வில்வம் வேதப்பிரதி பாதிதமென்பது பெறப்பட்டது.

வந்தே, யந்தணனுஞ் சுபத்திரனுக் கருடரவந் தருளென்று, வெந்தைபிரான் றனைக்கூவு மிருஞ்சிறப்பை யெய்த்திடுமால். (௧௨)

இத்தகைய நந்தனத்தை யினிதோம்பிச் சுபத்திரப்பே, ருத்தமனுண் மலராய்வுற் றோவாது கொய்தெடுத்துக், கொத்துமலர்க் கண்ணிதொடை கோவை முதற் றார்சமைத்து, மித்தையற மேனோக்கும் விழுப்பரற்கு நனிசாத்தி. (௧௩)

நறுமலரால் வில்லுவத்தா லனைத்தும்பல பூசைபுரிந், தறுசுவைய வமுதுபல வருங்கனிக ணிவேதித்தே, யிறைமகிழு மைந்தெழுத்தா மீறின்மனு வுவந்தெண்ணிச், செறிவகைய தாளமொடு திருமுன்னர் நடஞ்செய்வான். (௧௪)

சிவனடியார்க் கெந்நாளுந் திருவமுது செய்விப்பான், சிவநாம மன்பினொடுஞ் செபித்திடுவா னின்புதருஞ், சிவபெருமான் றிருக்கருணைத் திறங்கேட்கக் காதலித்துச், சிவகதைவல் லோர்புகலச் செவிக்கொண்டு மகிழ்வுறுவான். (௧௫)

இவ்வண்ண நன்னிலையி னிருந்திடுமம் மறையோர்க்கு, மைவண்ண மேவுகுழன் மங்கையையோர் பங்குடைய, செவ்வண்ணத் திருமேனிச் சிவபெருமான் றிருவருளா, லுய்வண்ண நெறிமைந்த ரொன்பதின்ம ருதித்தார்கள். (௧௬)

சுபத்திரன்கதையு முரைத்தபடலம்.

உதித்திடுநற் புத்திரர்க ளுரியபொழு துபநயனம், விதித்தபடி செயப்பெற்று வித்தையெலா மொருங் குணர்ந்து, ததித்திடுவல் லமைப்பூணக் கண்டபெரு மறையாள, னிதித்திறங்க ளொன்பதுமே நேர்ந்ததெனக் களிகூர்ந்தான். (௩எ)

குணநிதிக்கும் பொருணிதிக்குங் கோதகலும் வைப்பாய, தணிவில்புகழ்ச் சுபத்திரன்பின் றன்புதல்வ ரனைவோர்க்கு, நணுகுபெரு மங்கலஞ்சேர் நல்லமயந் தனில்வாய்ந்த, மணவினையைப் புரிவித்து மகிழ்சிறந்து வாழ்ந்திருந்தான். (௩அ)

வேறு.

இத்திறஞ்சின்னாட்செல்லவெத்திறக்கலையும்வல்ல
புத்திரரியாரும்வீடுபொருந்திடும்வேட்கையெய்தி
யத்தனையனுவந்தித்தங்கைகள்கூப்பிநின்று
தத்தமகருத்தையிங்ஙன்சாற்றுவாராயினார்கள். (௩௯)

கருமமே மேன்மைத் தென்று கழறின னொருவன் பத்தி, மருவிய மேன்மைத் தென்று வகுத்தன னொருவன் யோகம், பொருவறு மேன்மைத் தென்று புகன்றன னொருவன் ஞானம், பெருகிய மேன்மைத் தென்று பேசின னொருவன் மாதோ. (௪0)

இன்னண மியாரும் பேணு மியல்பதா யிருஞ்சிறப்பு, மன்னிய வீட்டினுக்கு வயங்குகா ரணமா வெவ்வொன், றுன்னியொவ் வொருவர் தாமு முரைத்தனர் கேட்ட மெய்யன், றன்னுள மகிழ்ந்து பின்னர்த் தனயரை நோக்கிச் சாற்றும். (௪௧)

தனையர்காளுங்களுள்ளந்தனிப்பரமுத்திதேறும்
வினையினிவியற்கைத்தாகமேவலிற்புலன்வாழ்ப்பட்டு
மனைவயல்சோலையாதிவாழ்ந்தசையினைழுந்திற்றில்லை
யினையதோர்பண்பானீவிரிருஞ்செல்வமாயமில்லை.()

உலகியல் போகந் துற்று மொடுங்கிய திலெயென் றுள்ளங், குலமெலாமுய்ய நீவிர் கூறிய வகைமை தன்னை, நலமுறத் தெளிந்து தேற்ற நான்வலி யுடைய னல்லேன், வலமுடை யுபாய மொன்று வகுப்பனென் னதற்குக் கேண்மின். (சங)

பொருளெலாங் கையிற் கொண்டு புடவியி லெங்கும் போதுங், தெருளுற நமக்குச் சங்கை தீர்ந்திட யாவ ரேனு, மருளுறி னவரோ யார்க்கு மதிபர்சத் துவத்தின் சால்பான், மருளறப் பூசித் தேத்தி வணங்கவும் படுவர் திண்ணம். (சச)

என்றுதேர்ந் துறுதி கூறி யிருபிறப் பாளர் கோமான், றன்றனித் துணைவி மைந்தர் தனமொடுந் தன்னூர் நீங்கிச், சென்றுபை திரங்க டோறுந் திரிந்திட ரடைந்து சையக், குன்றினின் றெழுகா விரிக் குணைபுனற் பொன்னி சார்ந்தான் (சரு)

பூவனநீரதாகிப்பண்ணவரொவரும்பல்குங்
காவிரிநதியையன்பாற்கலந்துகண்டதன்றீரத்து
மேவுபரிலிங்கம்யாவும்விரும்பியேயிறைஞ்சிப்பூசித்
தாவுறுதங்கட்கெல்லாமுழுவதோலாடுறைந்துபின்னர்.

உம்பரெலான் றடைந்து வான்பே றுற்றவா ரணிப மெய்தி, நம்புறு மகில வண்ட நாயகி யோடு மேவுஞ்

சம்புகேச் சுரப்பி ரானைத் தாழ்ந்துபே ரன்பி னோடும்,
வெம்பூதந் நிகழ்ச்சி யாவும் வினையமோ டுரைத்து நின்
றான். (சஎ)

அங்குலா முந்த ணர்க்கு மருந்தவ யோகி கட்குஞ்,
சங்கையைப் பரிவாற் சொற்றான் றவிர்த்தில ரொவரு
ம் பின்னை, ரிங்குநின் றகன்று தென்பா லியைந்ததோர்
பெருங்கா டெய்திப், பொங்கிய புதல்வ ரோடும் புன்க
ணுற் றிளைத்துச் சென்று. (சஅ)

திருமகிழ் சசிமுன் பூசை செய்திடுங் கீர னூர்போ
யப், பெரியநா யகிப்பேர் பெற்ற பிராட்டியோ டினி
து மேவி, யொருவுறு தின்ப நல்கு முத்தம நாதன்
றன்னைப், பரவியே நிகழ்ந்த வெல்லாம் பரிந்துவிண்
ணப்பஞ் செய்தான். (சகூ)

அங்கதன் கீழ்பாற் றால வனந்தனை யடைந்து தூய்
தாய், நங்குறை யகற்றுஞ் ஞான நாசினி நதிநீ ரத்து,
மங்கலம் பிகைசேர் தால வனேச்சுரப் பரமன் பாத,
பங்கயம் பணிந்து வேண்டிப் பகர்ந்தன னிகழ்ந்த
பான்மை. (௫௦)

உரைதரு மதற்குத் தென்பா லுன்னரு மரனு லுண்
டாய்ப், பிரமன்மான் முதலாந் தேவர் பேறுற வழிப
ட் டுள்ள, திருவரன் குளமென் றேத்துந் திவ்விய தல
த்திற் சேர்ந்து, குரைபுன லரதீர்த் தத்திற் கோதறக்
குடைந்தே யாடி. (௫க)

உன்னுமத் தீர்த்தப் பாங்க ருத்தம விலிங்கந் தன்னைப், 'பின்னமி லருட்கு வைப்பாய்ப் பெரியவம் பிகைப்பேர் கொண்ட,வன்னையை யுளத்திற் சார வமைத்துயர் பூசை யாற்றி, முன்னுறு பரிவால் வேண்டி முன்னிகழ் வுணர்த்தி னுல். (ருஉ)

அத்தலந்தனக்குமேல்பாலரிபிரமேந்திராதி
யெத்திறத்தேவராலுமியோகியர்முனிவராலும்
பத்திசேர்மக்களாலும்பசுமுதற்பசுக்களாலும்
தொத்துறவழிபட்டுள்ளதூயகோகன்னம்புக்கான். ()

சொல்லிய கோகன் னப்பேர்த் தொல்பதி யதனின் ஞானை, மில்லதோர் பசுவு முண்மை யியல்பசு பதியாந் தன்மை,புல்லுமா வினைய பான்மை பொருந்திய தொடர்பா லந்த, நல்லதோர் தலத்தின் மேன்மை நவின்றிட யாவர் வல்லார். (ருச)

துங்கமாரத்தலஞ்சேர்சுபத்திரனென்னுந்தொல்லோ
மங்கணதீர்த்தமென்னும்வாவிதாந்தீர்த்தமாடி [ன்
யங்குயராலயஞ்சென்றமைந்தவற்புதங்களெல்லாம்
பொங்கியபுதல்வரோடும்புரிவொடுகொண்பானுன் ()

வேறு.

ஆங்கிலஞ்சி மரத்தடியி னுண்பெண்பாற் பன்மையினு வ்டைவிற் கொண்ட, பாங்கிறுதி விசர்க்கமமைம் மயிற்குரலாங் கேகாவென் பதத்தைக் கேட்ட, வோங்குமைகைக் கிளிநேற்றிக் குடல்பிரிந்து சாருய முற்ற பொட்டு, வீய்கெவரா டவர்பெண்க ளெவரெனவிம் மயில்கேட்ட தென்றே சொல்லும். (ருசு)

(இ - ள்.) ஆங்கு - கோகன்னமென்னுந் தலத்தில், இலஞ்சி மரத் தடியில் - மகிழமரத்தி னடியிலே, ஆண் பெண்பாற் பன்மை வினு - வடமொழி ஆண்பாற் பன்மைவினுவையும் பெண்பாற் பன்மைவினுவையும், அடைவில் கொண்ட - முறையே பொருந்திய, பாங்கு இறுதி விசர்க்கம் அமை - உரிமையோடுந் தன்னிறுதியிலே இருசுழி வடிவினதாகிய விசாக்கமமைந்த, மயிற்குரல் ஆம் - மயிலின் தோசையாகிய, கேகா என்பதுத்தை - கேகாவெனப்படும் வடசொல்லை, கேட்ட ஓங்கு உமைகைக்கிளி - கேட்டிருந்த உயர்ந்த உமாதேவியாரது திருக்கரத்துக் கிளியானது, நேற்று இங்கு உடல்பிரிந்து சாரூபம் உற்றபொட்டுள் - நேற்று இவ்விடத்தில் இறந்து சிவசாரூபிய சத்தி சாரூப்பியங்களைப்பெற்ற கிடங்களுள்ளே, எவர் ஆடவர் - யார் புருடர், எவர் பெண்கள் என்று - யார் பெண்களென்று, இம் மயில் கேட்டது என்று சொல்லும் - இந்த மயில் வினவியதென்று கூறும்.

ஆண் பெண்பாற் பன்மைவினு வடைவிற்கொண்ட கேகாவென்பதும், பாங்கிறுதி விசாக்கமமை கேகாவென்பதும், மயிற்குரலாங் கேகாவென்பதுமென்று தனித்தனி கூட்டுக. பதமென்றதனுல் வடசொல்லென்ப தாயிற்று. ஈங்கு அசைநிலை. கே என்பது ஆண்பாற் பன்மைவினு. கா: என்பது பெண்பாற் பன்மைவினு. இரண்டு வினுக்களுஞ் சேர்ந்த கேகா: என்னுஞ் சொல் மயிற்குரலை யுணர்த்தும் பன்மைச்சொல்லாம். பன்மையாற் கூறியது மயில் பலமுறை யகவிற்றென்பது தோன்ற.

கோகன்னத்திலே மகிழமரத்தடியிலே கேகா: என்று மயிலகவுதலை யம்மையார் திருக்கரத்துக் கிளிகேட்டு இங்கே நேற்றிறந்து சிவசத்தி சாரூப்பியங்களை யடைந்த கிடங்களுள் யாராடவர் யார் பெண்களென்று இந்தமயில் வினவிற்றென்று சொல்லுமென்க. இது வடமொழியிற் கூறியவாறு கூறியது.

என்பதுவே முதலாய வின்புதரும் பலமொழிக ளினிது கேட்டு, மன்பொலியு முண்மையறி வானந் தமயமான வடிவங் கொண்டு, கொன்பரிவு தீர்த்த ருளுங் கோகன்னப் பெருமாற்குச் சேரதில் பூசை, யன்பினொடும் விதிவழியே யாற்றியடி பணிந்தேத்தி யார்வங் கூர்ந்து. (ருஎ)

என்னுடையாள் பெரும்புகழ்க்கோ ரியையுடை யாள் பல்லண்டத் திடையே மேவி, மன்னுடையாள் பரிதிநிகர் * மஞ்சுடையாள் மந்திரங்கள் வகைக ளெல்லாந், தன்னுடைய வவயவமாச் சார்ந்துடையா ளருட்சுவையே தணப்பிலாது, தன்னுடையாள் சே ந்தநெடு நோக்குடையா ளிந்துமுகத் தொன்மை வா ய்ந்தாள். (ருஅ)

அயனுதி கீடம்வரை யமையுயிர்கட் கன்னையுல க னைத்தி னுக்கும், * வயினுளள் பதினறு வன்னமனு நாமமுளாள் வரிமூ வைந்தா, வியலாரு கனுமெய்யா ளெழுகோடி மனுத்தவிசி னிருந்தாள் செல்வம், பெ யராமை யருளுபவள் பெருந்தேவி பொழிற்றலைவி பெரிய வம்மை. (ருகூ)

என்றுபுக ழிறைவிக்கு மேற்றபடி யங்ஙனமே யி னிய பூசை, நன்றியற்றி வழிபட்டு நற்புதல்வ ரோட ங்கு நண்ணி யுற்றான், மன்றவது பொழுதங்கண் ம ங்கணனு மாதவர்கோன் வந்துவானோர், துன்றுமரு

* மஞ்சு - ஆபரணம். * வயின் - ஆதாரம்.

ங்கைத்தனையு மம்மையையுந் தரிசித்துத் தொழுது
போற்றி. (சுO)

உள்ளமகி ழமையமது லுவர்த்துமனை யிளைப்புமிக
வுற்றுச் சேருங், தெள்ளுதவச் சுபத்திரனைத் தேவி
யொடுஞ் சிறுவரொடுஞ் சேரக் கண்டு, கள்ளமிலாக்
கருத்துடையாய் கலங்குதற்குக் காரணமென் கழறு
கென்னத், தள்ளவிலன் போமெவன் றங்கிகழ்ச்சி யி
னையெல்லாஞ் சாற்றினனே. (சுக)

அதுசெவிக்கொண் மங்கணனு மருந்தவத்தோ னி
ருகடிகை யகத்தி னய்ந்தே, யிதுதுணிபென் றிசைக்
கும்வலி யில்லாது தேற்றுமொழி யியம்பி யீண்டுக்,
கதியுதவும் கருணையுருக் கலந்தபெரு மாட்டிபிரான்
கருத்துட் கொண்டு, திதியினையா னம்முளத்தைத்
தெளிவித்தே யிருள்வனெனச் செப்பி னனல். (சுஉ)

செப்புமொழி கேட்டசுபத் திரன்பெரிய வம்மை
யது திருமுன் சார்ந்தங், கப்பனிகர் மங்கணனோ டம
ர்ந்தனனு லப்பொழுதி னந்த ரத்தே, யொப்பரிய
வசவமொழி யொன்றெழுந்த தித்தலத்திற் குரைக்
குந் தென்பாற், றப்பகலோ சனையொன்றிற் சத்திய
புட் கரிணியெனுந் தடத்தின் பாங்கர். (சுஙு)

பேசுறுசத் தியகிரியென் பெயர்பெற்ற வுத்தமமா
ம் பெரிய தான, மாசகல விருந்ததற் கறைதென்
மேற் றிசைதன்னி லேங்கு ரேச, வேசுதவிர் நீனி
டையி லிளையாற்றங் குடியென்ன விசைக்கு நாமத்,

தேசுடைய பெருமைமிகுந் திருநகர நிகரின்றித் திக
ழு மன்றே. (௬௪)

அவ்வயினுஞ் சுயம்புவடி வாகியரு ளளித்திடுமா
றய்பர்து நாமே, பெய்வளையா ளுலகமெலாம் பேதுற
நீர்த் தாருபவள் பெரிய வம்மை, யெவ்வமிலா நித்
தியகல் யாணியெனு மேற்றபெய ரெய்தி யின்னே,
ருய்வகையை வேண்டிடவே யுருக்கொண்டு கருணை
யொடு முறைகின் றாளே. (௬௫)

வானவர்கள் வழிபட்ட மாண்பொருளாய் மறை
பொருளாய் வயங்கி லிங்கத், தீனமிலாச் சந்நிதியிற்
சிவதீர்த்த மெனுந்தீர்த்த மிருந்த தாங்கே, நர்மமது
செய்தலினு னமதருளா லியாவர்க்கு நண்ணி யுள்ளத்,
தானபெருஞ் சங்கையெலா மகன்றிடுமா லருந்தவ
னே யைய மில்லை. (௬௬)

இருவிசும்பி னிங்ஙனமே யெழுந்தமொழி யிருசெ
வியி லேக லோடும், பெருகியதோ ரையமுறும் பெ
ருமறையோன் பேதுறவின் பெற்றி நீங்கி, மருவு
மொரு மகிழ்வென்னும் வாரிதியி னழுந்தியுள மாட்
சி யெய்தி, யருமைதரு தனயரொடு மடைந்தனனு
லிளைசையென வான்ற தானம். (௬௭)

இளைசையெனுந் திருப்பதியை யெய்தியிடுஞ் சுப
த்திரனு ரினிய மைந்தர், தெளிவுதருஞ் சிவதீர்த்தந்
தினைத்தாடித் தீர்த்தத்தின் செம்மை யாலே, யுள
மிகுந்த சங்கையெலா மொருவிநவ சித்தனொ வுறை

ந்தி ரற்று, லனிதருமத் தீர்த்தங்கள் தீர்த்தமிலை யிலை யுண்மை யந்த ணீரோ. (சுஅ)

தலவிசேடமுந் தீர்த்தவிசேடத்திற்
சுபக்கிரன்கதையு முரைத்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ருசுரு

ங சுபத்திரன் சித்திபெறு படலம்.

என்றுசொலு மலயமுனி யின்மொழியை யிருந் தவத்தோ ரினிது கேட்டு, நன்றுரைத்தாய் தீர்த்தவி யன் ஞானமுளோ யத்தீர்த்த நலத்தா லாங்கே, தன் றனயர் தம்மோடுந் தவமிக்கோ னெங்ஙனந்தன் சங் கை தீர்ந்தான், குன்றடக்குங் குறுமுனிவ குயிலுகெ னக் குடத்துதித்தோன் கூறலுற்றான். (க)

சிவபெருமான் றிருவாக்கைச் செவிக்கொண்ட திருமறையோன் சிறுவ ரோடும், பவமகற்றும் பக வானைப் பகவதியைப் பரிவினொடும் பணிந்து போற் றித், தவமுயலு மங்கணனுந் தாபதன்பால் விடை கொண்டத் தலத்தை நீங்கி, யுவமையிலாச் சிவவாக் கை யுவப்புமிகப் பலகாலு முன்னி முன்னி. (உ)

இத்துணைத்தோ விளைசையெனு மிருந்தலத்தி னெற்றமதென் றிறம்பூ தெய்தி, மெத்தியதோர் வே கமொடு மேன்மைதிகழ் மெய்யமெனும் வெற்புமே

விச், சத்தியபுட் கரிணியெனச் சாற்றுபெருந் தட்த்தின்பாற் சார்ந்து மூழ்கிப், பத்தியொடு சத்தியநற் பருப்பதத்துப் பரனையருட பனையை யண்மி. (௩)

தரிசித்துத் தாழ்ந்தெழுந்து தானவரைச் சங்கரித்த சார்ங்க பாணிப், பிரசித்திப் பெருமானைப் பேணி நவில் பிறங்கற்குப் பிறழ்தென் மேல்பாற், பரிசித்து வானையுயர் பழுவத்தே படர்ந்தெய்த்துப் பரிந்தப் பாலும், வருசித்தி மைந்தரொடு சிறுதூரம் வழிக் கொண்டு வருந்தி யுற்றான். (௪)

திசைகாணுக் கானகத்திற் சென்றிளைத்த திருமறையோன் றெண்ணீர் தன்னை, மிசைதாகந் தலைப்படலும் வெய்துயிர்த்து நீர்தேடி வெதும்பிச் சோர்ந்து, தசைசார்மெய் பலவெடுத்துச் சலித்தவனற் குருவருளைச் சார்வுற் றாங்குக், குசைநேருங் கூர்மதியீர் குறைபுனல்சேர் சிவதீர்த்தங் குலவக்கண்டான். (௫)

திடந்தனைநல் லுயிர்க்கருளுஞ் சிவதீர்த்த மெனவழங்குந் தீர்த்த நோக்கி, யடைந்துமிகு மகிழ்ச்சிநலமான்றபெரும் புதல்வரொடு மதன்றே யத்திற், குடைந்தெழுந்து நாடோறுங் குயிற்றியிடுங் கருமமெலாங் குன்றா தாற்றிக், கடந்தசுவை நீர்பருகிக் கரையேறி யிருந்தனனாற் கலைவல் லீரே. (௬)

அப்பொழுது சிவபெருமா னருள்புரியத் திருவுளத்தி லார்வங் கூர்ந்து, துப்புநிகர் சடைமுடியோங் குறயோக பட்டமிகத் துலங்க வேங்கை, யொப்பிலு

ரி யுடைமருவ வுயர்பூதி மெய்யொளிர வுருத்தி ராக்கந், தப்பில்வகை சிவனமதித் தன்முகத்துப் புன்முறுவல் சார்ந்து பொங்க. (எ)

கோடிபெரு மன்மதர்கள் கோலமெலாந் திரண்டொன்றாக் குலவி யென்னப், பாடியலு நல்லழகு பரவ்வுயர் பொற்பிரம்பு பாணி மல்க,; வீடுதருஞ் சித்தவுரு வெடுத்தருளி யெழில்கூரு மியலா ளோடு, நாடுசிவ தீர்த்ததட நண்ணியரு ளினன்புனித ஞானமூர்த்தி. (அ)

மறையாலும் வாக்காலு மனத்தாலு மிற்றெனவே மதிக்கொ ணாது, நிறைவாகி யெவ்வயினு நின்றபரம் பொருளாய நிமல மூர்த்தி, யறிதருதற் கெளிதாகி யம்பிகையி னோடுமெழுந் தருளி வந்தும், பெறலரிய திருவடியைப் பெருமறையோன் பேதுறலாற் பேணாதுற்றான். (௯)

இன்னவகை பொருட்படுத்தா திருந்திடவு மெம்பெருமானெவ்வாற் றானு, மன்னுயிருக் கெளிவந்து வழியடிமை வருவித்து மாட்சி நல்கும், பின்னமிலா வியல்புடைப் பெருங்கருணைத் தடங்கடலாம் பெற்றியாலே, யன்னவனைப் புதல்வர்தமை யளித்தருளத் திருவுளங்கொண் டருளிச் செய்யும். (௰)

யாவர்நீ ரெங்கிருந்திங் கெய்தினிரா லெய்துதற்கோ ரேது வென்னை, யோவறுமுள் ளயிர்ப்புநனி யுடையீராக் காண்கின்றீ ரவற்றை யெல்லாந், தாவகல நமக்

கீண்டிச் சாற்றுதிர்நற் றுணிபுனாயைத் தருவ மெ ன்றுத், தேவர்குழுத் தொழுதேத்துஞ் சித்தர்பிரான் முறுவலொடுஞ் செப்பி ஞல். (கக)

சித்தவுரு வெய்தியருள் சிவபெருமான் றிருமொ ழியைச் செவியிற் கொண்டு, முத்திநெறி தலைநின் றோர் மொழிந்தருளு மியல்பிற்றுய் முதன்மைத் தாய, மெய்த்திறனை யரிவையொடு மேயினே னெங் ஙனமோ விளம்பு வானென், றத்தனது திருவாக்கை யாதரியா தருஞ்சுதரோ டமர்ந்தா னன்றே. (கஉ)

இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ண னிவனெனக் காண் பியையாதாக, வப்படியு மந்நிறமு மவ்வண முங் தகக்காட்டி யருளும் பெம்மான், றப்படையா மார்ச்சால சம்பந்த நயம்பற்றித் தயைமீக் கூர்ந்து, மைப்படியுங் கண்ணுமையாள் வாணகையளமுகநோக் கி வகுத்தல் செய்வான் (கங)

மங்கலநல் லியல்புடையாய் மற்றெமது வடிவை யிவர் மதியா துற்று, ரிங்கிவர்கள் பரமார்த்தத் தியல் சங்கை மிக்கவரா யீண்டு வந்தார், துங்கமுறு ஞாலத் திற் றாரமிருந் தெய்திப்பூ சுரர்க ளுள்ளச், சங்கை யெலா நாந்தாமே தவிர்த்தருளி முதுக்குறைவு சார் விப் பேமால். (கச)

எவற்றினையு நாமறிது மெவற்றினையு நாம்புரிது மின் ன வாய்மை, யவற்றினையிங் கறிகிலரொன் றறைந்தரு ளச்சுபத்திரன்று னனைவ ரோடு, முவற்றினைக்கேட்

டியிர்பெரியோ யுணர்தியெனி னுயங்குகம துள்ளத் தெண்ணங், தவற்றினையா தருள்கவெனத் தயாமூர்த் தி வாய்மலர்ந்து சாற்ற லுற்றான். (கரு)

வேறு.

மருளுறு மனத்தராகி வைகிய மறையோர் மகனே மின், பொருளுறு வேதமுன்னுப் புகன்றநல் லருள் சேர் நூல்க, ளருளுறு தெளிவா யுள்ள வரும்பெறற் றுணிபு தன்னைத், தெருளுற நுங்க ளுள்ளஞ் செவி யறி வுறுத்தல் செய்வாம். (கசு)

அறம்பொரு ளின்பம் வீடென் றறைந்தநாற் பொ ருள்க ளுள்ளே, திறம்படு முன்னை மூன்றுஞ் சிதை வன வாத லாலே, மறம்படா யாவ ராலு மதித்திடப் பட்ட வீடே, புறம்படர் சிந்தை யில்லீர் பொருவி னித் தியமாய் யுன்னும். (கஎ)

அந்தநல் வீட்டிற் கேது வாகிய தரிய ஞான, மிந் தவா றுறு வேறிங் கில்லையென் றிசைத்து நின்ற, சந் தமார் சுருதி வாய்மை தலைக்கொண்ட வன்மை தன் னுன், முந்துறு நூல்க ளெல்லா முழங்கியே யுரைக்கு மன்றே. (கஅ)

அனையதோர்ஞானந்தன்னையடைதாற்குரியவாய துணியகல்காரணங்கடொல்லையாரணத்தின்பாகங் கனிவொடுகழறுகின்றகரிசறுங்கருமசால மினுமுயர்பத்தியோகமென்றிடுமிவைகளாகும். (ககூ)

உண்மைநல் லறிவா னந்த வுருவமாய் மனம்வாக் குக்கட், கண்மைய தின்றிக் கூறு மருவமாய்க் குண

ங்க ளின்றித், தெண்மை சேர் மகிமைத் தாகிச் செயல்வகை யொன்று மின்றி, யெண்மையில் காட்சிக் கண்ணே யிருந்திடும் பிரமந் தானே. (உ0)

அருளுறுமாயாசத்தியதனதுசார்பினுலே
வருகுணமுடைத்தாயாரும்வழுத்துதற்கேற்றதாகிப்
பொருவிலீசாதிநாமம்புகலும்வாசகமாயோங்கத்
திரிபில்வாச்சியந்தானகித்திகழ்ந்தருள்செய்துநிற்கும்.

அத்தகு வாச்சி யந்தா னுகியே பரமே சான, மெய்த்திரு நாமங் கொண்ட மெய்யனைப் புகலாக் கோடல், பத்தியென் றுரைக்கற் பாற்றுப் பரசிவா காரத் தோடுஞ், சித்தமொன் றிடவே செய்தல் செயற்கருமியோக மாமே. (உஉ)

சிவபிரா னருளிச் செய்த செழுமறை விதித்த வாகி, நவையற் றிருதி யாலே நன்குறத் தெரிக்கப் பட்ட, வுவமையில் கரும மெல்லா முயர்ந் துணர்ந் தியற்றல் வேண்டு, மவைபெருஞ் சித்த சுத்தி யரும் பய னுக நல்கும். (உங)

சித்தசுத்தியினுலாங்குச்சேர்வதுவிரத்தியாகு
மத்தகுவிரத்தியாலேயடைவதுசாந்தியத்தாற்
றத்துவஞானம்வந்துதலைப்படுமதுவேமுத்தி
யுய்த்தியல்சுவானுபூதிக்குத்தமகாரணமாமே. (உச)

விதிமுதலாயினோர்கண்மேலதாமுத்திவேட்டுத்
துதிபெறுமுயற்சினாளுந்தொடர்வுறப்புரிகின்றூர்கள்

பதியுறுசொரூபந்தேர்தல்பந்தமின்முத்தியாகுங்
கதிதருசொரூபமுற்றுங்கழலவேமறைவுற்றன்றே. ()

மன்னுலகுதிக்குமூலமானயுட்கரணம்பற்றித்
துன்னுமற்றுலனுதிமலத்தொடுதொடர்ந்ததென்று
பன்னுபகர்ணந்தன்னைப்பகருமும்மலங்கடம்மைப்
பின்னமின்றுணர்தன்ஞானப்பெற்றியாற்றனேசாரும்.

அந்தநன்ஞானந்தன்னையடைவிக்குஞ்சித்தசாந்தி
வந்திடுமதுவிராகவன்மையால்விராகந்தன்னை
முந்திடுநான்குபேதமொழிந்துறுசாதனங்க
டந்திடுமவைவேதாந்தத்தருமொழிக்கேள்வியாலாம்.

பற்றவாங்கேள்விமேலாம்பத்தியாலுண்டாம்பத்தி
நற்றவர்சங்கத்தாலேநண்ணிடுமனையசங்க [னும்
முற்றிடுஞ்சிரத்தையாலேயுளைத்திடுஞ்சிரத்தைதா
கற்றவரொழுகநின்றகருமத்தால்வாய்க்குமாதோ. ()

கருதியின் றைக்கப் பட்ட கருமங்க ளெல்லாங் கோதில், சுருதிகள் விதித்த லாலே தூய்மைசேர் சிரௌதமென்று, மிருதிகள் விரித்த லாலே விளம் பிடு மார்த்த மென்று, மிருதிற னுடைய வாக விசைத் திடப் படுமான் மன்னோ. (உகூ)

அக்கரு மங்க டேரு மறிவுமா மறையா லாகு, மிக் கதோர் மறையு மேலோ ரொழுக்கமீத் தொடர நிற் குந், தக்கதா மொழுக்கந் தேர்ந்து தழுவிய வந்த ணாளர், னிக்குவ லயத்தோர் போற்ற விரும்பய னிம் மை யெய்தும். (௩0)

ஒழுக்கமா ரானைத் தூய்மை யுய்ப்பன வாகா வேத, 'மொழுக்கமார் விப்பிரற்கே யுற்றிடுஞ் சித்தி யெல்லா, மொழுக்கமா' ரிருமை யின்பப் பயனெலா மூவற்கே யுண்டா, மொழுக்கமார் கரும நன்காய்த் தோற்றுக வாத லாலே. (நுக)

அறிவுடை யிவன்மேற் கூறு சாதன மனைத்துந் தேடி, மறையுணர் பெரியோ ரோடு மகிழ்ந்திருந் தின்ப நல்கு, மிறைதிகழ் ஞான மூக்கி யெய்திமேற் பிறவி சாராத், துறையெனுஞ் சுவானு பூதிச் சொரூப மா முத்தி சேர்க. (நுஉ)

எனச்செவி யறிவு றுத்தே யேற்றமா மகிழ்வு பூப்ப, வனிச்சமெல் லடியா ளோடு மாடியு நகைத்து முற்றான், மனச்சுசி யடைந்து வீயா மாணலன் விரும்பி னோர்கள், வினைச்செயற் கேற்பத் தோன்றி வீடருள் கருணை மூர்த்தி. (நுந)

அவ்வழிச் சுபத்தி ரப்பே ரருந்தவன் புதல்வ ரோடு, மெவ்வமில் பன்னி யோடு மெய்தரு மகிழ்ச்சி யென்னும், பவ்வம திடையே யாழ்ந்து படருமற் புதத்தோ டன்னோர், திவ்விய பாதம் போற்றி நின்றிவை செப்பு கின்றான். (நுச)

கேண்மதி பெரியோ யன்பிற் கிளத்திடும் வாசகங் கள், வாண்மதி வழங்கு மிப்பூ மண்டலந் தன்னில் வாழு, நீண்மதி யுடையார் யாரு நீக்குதல் செல்லா தெங்கண், மாண்மதி மயக்க மூற்ற வலியதோர் சங்கை தீர்த்தாய். (நுரு)

ஆகலி னமக்கு நீயே யரும்பெருந் தலைவ னாய், சோகமி லுலக மெல்லாந் தொழப்படுந் தொன்மை யோனும், யோகமார் நிலைமைசார லுற்றிடும் பெரி யோ ருக்கு, மோகமின் மற்றை யோர்க்கு முதல் வனு நீயேயன்றோ. (௩௯)

அத்தகுபெருமநீயாரமர்வதெங்கெங்கிருந்தே
யித்தலந்தனக்குவந்தாயியம்பினீமனுடனல்லை
புத்தமுதருந்துகின்றபுலவனுமல்லைமேலாஞ் [றாய்.
சித்தியையுதவுந்தொல்லைச்சிவபிரானெனக்காண்கின்

நினைத்தரிசித்தபோதேநிகரினல்லறிவுதோன்றிற்
றினித்துயரொன்றுதானுமில்லையாலெங்கட்கெந்தாய்
நுனித்ததோர்தகைமாழைநோக்குடைவஞ்சியோடு
முனைத்தநின்னுரியகோலமுயலினுமறியொணுதால்()

ஞானிகளாயினோர்கணனுகிடுஞ்சங்கமெல்லாம்
போனபின்விரத்தியுள்ளம்புகுந்தவராகிநிற்பா
ரானதனாலேபெண்ணோடமர்ந்திடுநினதுசித்த [டும்.
மூனமாபுலனைவேட்டதென்றரோவுரைத்தல்வேண்

ஆயினு நினது கோல மகமொழிக் ககப்பா டில்லை, நாயகி பாகங் கொண்ட நாயகன் சிவனே போல, நீயிவட் டோன்று மாற்ற னின்னுரு வியல்பை யெய ல்லா, மேயநல் லருளா லின்னே விளம்பியே யருள்க வென்றான். (௪௦)

எனுமொழி கேட்டி யோக வியலுருக் கொண்ட வெம்மான். பனிமொழி யமலை யோடும் பயினுகை

முகத்த னாகிக், கனிமொழி யொன்று தானுங் கற்றி
டா திருந்து சென்றே, தனிமொழி யிலிங்கந் தன்
னிற் றன்மறைந் தருளினானே. (௪௧)

செய்கைசெய் யாமை வேறு செயதைபயன றிவை
கள் யாங்க, ளுய்கையைப் பொருளாக் கொண்டே
யுளுற்றிடுங் கருணை வள்ளல், கைசழு றேன்றுச் சா
தாக் கியந்தனிற் கரத்த லோடு, நைகையி னின்றுந்
தீர்ந்த நற்றவ னதனைக் கண்டான். (௪௨)

காண்டலு மைந்த ரோடுங் கருதரு மற்பு தங்கொ
ண், டாண்டுற விரைந்து சென்றே யவிர்சடை யுரு
த்தி ராக்க, மாண்டிருக் குறிகொண் டோங்கு மகி
மைசே ரிலிங்கந் தன்னை, யேண்டகு பொற்பு வாய்
ந்த விறைவியைத் தரிசித் திட்டான். (௪௩)

தரிசனஞ் செய்த மேலோன் சால்புறு மன்பி னோ
டுங், கரிசற வணக்கஞ் செய்து கடிமலர் வகைக ளா
லே, விரிசடை குலவா நின்ற மேலவன் றன்க்கு
மின்பப், பரிசருள் செய்யு நோன்மைப் பணைக்குநற்
பூசை செய்தான். (௪௪)

மனுதிகட்களவுகாண்டன்மற்றறிதாகின்ற
வனுதியாமிலிங்கத்திற்கங்கமைதரும்விமானமாதி
தனுதிரும்பொருளானன்னூல்சாற்றுமாறொல்லையாற்
பினுதிமாறின்றிமிக்கபெருமைசேர்பூசைசெய்து [றிப்

பலம்வர வுயிர்கட் கெல்லாம் பரிந்தருள் பகவன்
றன்னை, வலம்வரல் புரிந்து பல்கால் வணங்கிநெஞ்

சுருக நீள்கட், புலம்வரத் தூநீர் வாரி பொடிப்பு
முற் றுடலம் போர்ப்ப, நலம்வரத் திருமு னின்று
நாத்தழு தழுப்ப வேத்தும். (சசு)

வேறு.

தத்துவங்க டோற்றமுறுந் தனியிலிங்க வடிவு
டையா, யெத்திறமு நமையாண்ட வியம்பரிய பே
ரிறைவா, பத்தியொடு பணிவோர்கள் பணிவுகொ
ளும் பரம்பொருளே, சித்தரெலாந் தொழுதேத்துஞ்
சித்தேச நமநமவே. (சஎ)

வேறு.

பிரமன்முத லானவர்க ளேடும் பாதப் பெருமை
யனே யனைவோரும் பேண லுற்றோய், மருவுலகுக்
கிறைவசுரர்க் கதிப மாற்றார் மதின்மூன்று மட்டவ
னே மன்னு மீசா, வருமைமிகு மங்கலநல் வியல்பு
சேர்ந்தோ யச்சுதனுங் கணையுடையா யான்ற மே
லோய், கருமைதிகழ் கண்ணினுமை களிக்கும் பா
கா கடையேன்மேல் வைத்தியருட் கடைக்க ணேக்
கம். (சஅ)

ஆதிமுடி வில்லவனே யமர ரெல்லா மஞ்சலிசெய்
திறைஞ்சுமல ரடிகள் கொண்டோ, யோதியமற் கந்
தகனே யந்த கன்ற னுரம்பிளந்தோய் கருணையெனு
மோதத் தானே, கோதகலுஞ் சித்தவன நாதா நந்தா
குலவிபுத ராகமங்கள் கூறுஞ் சீரோய், காதளவுங்
கண்ணியுமை களிக்கும் பாகா கடையேன்மேல் வை
த்தியருட் கடைக்க ணேக்கம். (சகூ)

நமனைவலி யொழித்தவனே நிமலா வெங்கு நண்ணியேனுய் மதிசூடி நலத்தை யீவோய், சுமசரத்தோன் றனையெரித்தோய் மூன்று நோக்கத் தொன்மையனே மூவுலகுந் தோன்ற நின்றோ, யழைவுதருங் கயிலைமலை யமர்ந்த வாழ்வே யடைக்கலம்புக் கோர்க்கின்ப மளிக்கு மெந்தாய், கமழுமியற் கூந்தலுமை களிக்கும் பாகா கடையேன்மேல் வைத்தியருட் கடைக்க ணோக்கம். (ருo)

பங்கமில்பாற் கடனுரைபோற் பயிலு மூரல் பல்குமொரு திருமுகத்தாய் படருங் கங்கை, துங்கமுறு ந் திருச்சடையாய் தொலைவில் சீலனே தூண்டாத சுடரனையாய் சூல பாணீ, யிங்கெவர்க்கு மிறையானே யிமையோர்க் கீசா விருடிகள்வுந் தடிவணங்கு மெம்பி ரானே, கங்குல்புரை கோதையுமை களிக்கும் பாகா கடையேன்மேல் வைத்தியருட் கடைக்க ணோக்கம். (ருக)

படருமதி வெண்மைதிகழ் படிவ முள்ளாய் நல்லோர்கள் புகலடைந்து பணியு மாதி, யிடரிலறு நூறெரிக்கு மேற்ற மிக்கோ யியல்கவிநற் பூசைபுரி வெழில்சேர் பாதா, தொடருமறைச் சிரமுணர்த்துந் தொல்லோய் வாய்மைச் சொற்பயிலு மாகமமாங் கூண்டி லுற்றோய், கடணிகரும் கருணையுமை களிக்கும் பாகா கடையேன்மேல் வைத்தியருட் கடைக்க ணோக்கம். (ருஉ)

வேறு.

என்றுபோற்றிசெய்தெம்பெருமான்றனைக்
குன்றுபோலுங்குணநலங்கொண்டுளான்
மன்றவன்பின்வணங்குமனத்தனாய்
நின்றுசிற்சிலவேண்டுநிகழ்த்துவான். (ருஙூ)

என்னையாண்டவயாவுமுணர்ந்தவ
முன்னுமூதுலகுக்குமுதல்வயா
நின்னோர்தீர்த்தமகிமையினின்னடைந்
தின்னசித்தியிங்கெய்தினமாகலின். (ருச)

இத்தலக்குமிலிங்கமதற்குமேற்
சித்ததீர்த்தந்தனக்குஞ்சொலும்பெயர்
கத்திரஞ்சித்தபதிநல
முய்த்திடுஞ்சித்ததீர்த்தமென்றோதுக. (ருரு)

இன்றுதொட்டிலகெங்கணுமிப்பெயர்
சென்றுசீர்த்திசிறந்துதிகழுத
லன்றியும்பலவண்மையடைகுக
வென்றிசேரிறைவாவெனவேண்டினான். (ருசா)

வேண்டலோடும்விமலன்றிருமொழி
சேண்டனிற்றிகழ்ந்தோமெனச்செப்பிய
தாண்டுநின்றசுபத்திரற்கம்மொழி
யீண்டுபுத்தமுதென்னச்செவிப்புக. (ருஎ)

மகிழ்ச்சிபொங்குமனத்துமறையவ
னிகழ்ச்சியற்றநம்மெண்ணமெலாமிவ
ணின்றுநன்னாதுபின
புகழ்ச்சிமிக்கபுதல்வருக்கோதுவான். (ருஅ)

சித்தபங்கயமீதுசிவன்றனைச்
சத்துஞானசுகக்குறிதன்னைமெய்
யெத்திறத்தையுமென்றுமறிவனை
யுய்த்தநல்லருண்மூர்த்தியையுன்னியே. (௫௯)

அன்னவன்மயமாகிப்பிரமநா
னென்னுமொப்பரும்பாவனையெய்தியே
துன்னுகின்றசுகத்திடைவைகுவன்
பன்னுநல்லியல்பற்றியமைந்தர்காள். (௬௦)

மறுமைநன்னிலைக்கோர்வழுவந்திடா
தறநெறிக்கணின்றேய்வனவாற்றுமென்
றுறுதிகூறியரன்றனையுள்ளுற
நிறுவியின்பநிலையினின்மேவினான். (௬௧)

மைந்தர்தாமும்வழுத்துநன்னூற்பொரு
டந்தைபாலிற்றகவுறத்தேர்வுறீஇ
யந்தமின்றுணர்வெய்தியனைவரு
நந்தலில்சுகநண்ணினரென்பவே. (௬௨)

வேறு.

ஒன்பானு முயர்சுதருண் முதல்வனான வுத்தால னாட சித்த னெனும்பேர் பெற்றான், பின்பாலான் சாலங்கன் கரும சித்தப் பெயர்பெற்றான் சுமனக்கன் பத்தி சித்த, னென்பாக்கு நின்றனனாற் ககோள னென்போ னியல்வேத சித்தனெனு மிரும்பேர் வாய்ந்தா, னன்பார்ந்த வியல்புடைய சுசாந்த னென்பேரா னறைஞான சித்தனெனு மரும்பேர் கொண்டான். (௬௩)

மேன்மைதிகழ் சந்திரன் ஞமசித்த வியன்பேறா மேவினுல் வெருளி தீர்ந்த, நோன்மைதிகழ் சூலேச்சுரன்று ணிலய சித்த நுவல்பெயரைத் தரித்திட்டா ஞேற்றன் மிக்க, பான்மைதிகழ் பண்ணவனும் பர்சகன்னன் பகர்காம சித்தனென்பேர் பரித்து நின்றுன், போன்மைதிக ழருநாடா யனனென் றுள்ளோன் புகழ்தார யோகியெனப் புகலப் பட்டான். (சுச)

சாற்றிடுமத் தனிப்புதல்வர் சாலவோர்ந்து தத்தமக்கு வேண்டுபவாஞ் சித்தி கட்கே, யேற்றபடி யடமுதலாம் வகைமை பற்றி யியன்றுபெறுஞ் சித்தியினு லிப்பே ரெய்திப், பேற்றையுறு நவநாத ரென்னப் பெற்றுப் பெருங்குருமீ தன்பார்ந்து பெருகுஞ் சித்தி, ஞற்றலுறு முத்திரையோ டமர்ந்து தம்பி லாயநல னகலாதே யடைந்தா ரன்றே. (சு௫)

இவ்வாறக் கேத்திரத்திற் சித்தசாமி யின்னருளா லிருஞ்சித்தி யெய்தி மேலாந், துவ்வாரு நவசித்தர் சித்த விஞ்சைத் தொன்மைதனின் மிக்கோராய்ச் சித்தாகைக்கொண், டெவ்வாரத் துயர்தீர்க்கு முறைக டம்மா லுடல்வலிபெற் றுயிர்வலித்த னிறுத்தன் மேலு, நைவார வடக்கலருள் செயவல் லோராய் நிடெங்குஞ் செலும்விறலோ ராகி யுற்றுர். (சுசு)

தேவாதி தேவனெனுஞ் சித்தநாதன் றிருவருளாற் சுபத்திரனுந் தேவி தன்னோ, டோவாமை யறிவின்ப வுருவா னனை யுள்ளத்தி னுள்ளூற்று மமுதா னனைப்,

பாவாத மனத்துறத்தி மலத்தா ளுய பற்றகற்றி யோ
கிகட்குப் பதியாய் நின்று, மேவாத யோகநல மேவி
யென்றும் வீடாத வீடுற்றான் வீடுற்றானே. (கூஎ)

இன்னணமே சுபத்திரன்றன் புதல்வ ரோடு மிரு
ளுசித்தி யெய்துதலா லன்று தொட்டே, யன்னதட
முயர்சித்த தீர்த்த மென்னு மரும்பெயரை யடை
வுற்ற தனைய தீர்த்தந், தன்னையெதிர் காணுறினு நினை
ந்திட் டாலுந் தகவுபெற வெண்ணியவை தம்மை
யெல்லா, முன்னுமுன முதவிடுமா லுறவீ ரன்ன து
யர்வினையா மெங்ஙனமோ வுரைத்து மம்மா. (கூஅ)

கயிலாய நாதனெனு மிலிங்கத் திற்குங் கருதரிய
சித்தேச னென்னு நாமம், பயில்வாய தவ்விலிங்கப்
பெருமை மிக்க பான்மையதா லினைத்தெனவே பகர
வொண்ணு, தெயிலாரு மப்பதிக்குஞ் சித்த தான மெ
னும்பெயருற் றதுமேலா முத்த மத்தி, னயிலாரு மத்
தலத்தி லாண்டு வாழ்வோர்க் கம்மைவரு மச்சமிலை
யாய வேண்டாம். (கூகூ)

தேளுடைய திங்கடனிற் றிங்கள் வாரந் தேடுசனிப்
பிரதோடஞ் சிவனி ராவா, நா*ளுடைய நாள்வியதி
பாதமேன்மை நண்ணும்விழா நாளென்று நவிலி வற்
றிற், றுளுடைய தாமரைசேர் சித்த தீர்த்தத் தடநீரி
லிரியினொடு மாடி னோர்க, ளாளுடைய நாயகன்ற
னம்மை தன்னோ டருளவகத் தெண்ணியவை யடை
ந்து வாழ்வார். (எ௦)

* உடையநாள்—ஜென்மநக்ஷத்திரம்.

வேறு.

இந்தநற்காதையையியம்புவோர்மன
முந்திட.வொருவழிக்கேட்குநலுற்றவ
ரந்தமில்சித்திகளடைந்துபின்னுற
முந்தியவுணர்வுசார்முத்தராவரே. (எக)

சுபத்திரன் சித்திபெறுபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சகூச.

சூரன் றேவரைத் தேடவிட்டபடலம்.

இன்னவண்ணமவ்வகத்தியமுனிவரனியம்ப
மின்னுசெஞ்சடைமுடியுடைவிழுத்தவர்கேட்டு
மன்னுகின்றதோர்சித்தமாதீர்த்தத்தின்மாட்சி
சொன்னலம்பெறச்சொற்றனைமகிழ்ந்தனந்தூயோய்.

இளைசையாம்பெயரப்பதிக்கியாதுகாரணத்தால்
விளைவதாயதுதூய்மையர்ன்மிக்கவந்நகரம்
வளமுலாம்புவிதன்னிடையாங்ஙனம்வதிந்த
துளமுறப்புகன்றருளெலாமுயர்கடத்துதித்தோய். ()

எனறுமாதவர்வினவியவின்சொலைக்கேட்டுக்
குன்றுபோன்றிடுந்தவமுடைக்குடமுனிநயந்து
துன்றுபல்வகைமேன்மைசேரத்தலத்தொன்மை
நன்றியாவையுமுரைப்பனுலென்னவேநவில்வான். ()

வேறு.

தூயார்பெறவேதுயர்செய்தலுறுந்
தீயாரவுணத்தொகையோர்செறியும்

வியாவுயர்வாழ்வுறமேவியதான்
மாயாபுரமாம்வளமாநகரோ. (ச)

அம்மாநகருற்றரசாளுறுமவான்
மெய்ம்மாணுறுவச்சிரமெய்யுடையான்
செம்மாலுமயங்குதிறற்செயலா
னெம்மாமையுமிக்கியல்சூரனரோ. (ரு)

வேறு.

சூரனெனப்படுமெதால்லசுரேசன்
வீரமிகுந்தன்மெய்ச்சுதனுலே
காரிபதந்தனைக்கட்டழிவித்தே
கோரமிகுந்தகொடுந்துயர்செய்தான். (சு)

செய்தலுமிந்திரனேமுதற்றேவர்
வெய்துறலோடவன்வெய்தெனநீங்கிப்
பைதிகழ்பார்தன்பரித்திடுபாரி
னெய்தினர்யாருமிருந்துயர்மூழ்கி. (எ)

ஒயர்மாழுகவிறல்மகடும்விண்ணோர்
தந்தமுருக்கொடுசார்ந்திடலுற்று
லெந்தவிடத்தினுமாமிடமொன்றே
சிந்தையினெண்ணினரிவ்வகைசெயவார். (அ)

சகீகமெறும்பலவன்மயிறத்தை
யெருவைகுரங்குவியாக்கிரமேனங்
கரிமுதலாயகணிப்பிலவற்றி
னுருவவையெய்தியுறுந்துயர்கொண்டு. (கூ)

விசயமெனப்படுமையமளித்த
துய்யநதிக்கரைதோறுமியைந்து
வெய்யதொர்நோய்தொலைவித்திடுகின்ற
செய்யசிவத்தலஞ்சேர்ந்திருந்தாரால். (௧௦)

அண்மையினேருமறிந்திடலொண்ணு
நுண்மையுருக்கொளும்விண்ணவர்நொய்தா
மெண்மையொடவ்வழியோரிடையெய்தி
யுண்மைகளின்னவுரைத்திடுகின்றார். (௧௧)

முக்கணியைந்திடுமூர்த்தியைநீக்கித்
தக்கனியற்றியசத்திரந்தன்னிற்
புக்கவனோடுபொருந்திடலாலே
தொக்கபெரும்பவம்வந்ததுதன்னி. (௧௨)

அப்பவமீந்தபயன்களனைத்து
மெப்படியுந்துகர்வெய்திடல்வேண்டுந்
செப்பிடுமெத்தவஞ்செய்கையினானும்
துப்பினைநீக்கித்தொலைத்திடலாகா. (௧௩)

மெய்வகையோர்ந்துவிளம்புமிடத்தி
துய்வகைதன்னையுணர்த்திடுகன்னா
லெவ்வகையாகியியல்பவங்கட்குஞ்
செய்வகைதீர்வுகள்செப்பினவன்றே. (௧௪)

சிவனரிவிப்பிரனொன்றுதெரிக்கு
மிவர்தமக்காற்றுமிகழ்ச்சிதனக்குத்
தவறிலநூற்றொகைதீர்வதுதன்னை
நவிற்றொழிந்தனநான்மறையாலே. (௧௫)

ஆடலினாலலதஞ்ஞதையாலே
வீட்ருமெய்யுணர்விப்பிரருக்கு
நீடவமானநிகழ்த்தினுமற்றுற்
தேடனேவோர்க்குங்கிடைத்திடலுண்மை. (௧௬)

இப்படியாயினெவ்வெவ்வுலகுக்கு
மொப்பினிதானமெனப்படுவோனா
யெய்ப்பருநற்குருவாயியலின்ப
முய்ப்பவனாகியுளோன்சிவனன்றே. (௧௭)

அச்சிவனுக்கவமானமதிந்த
முச்சகவைப்பிலியற்றியமூடர்
நிச்சயமாவிடர்மூடுறநிற்மன்
மெச்சிவிளம்பவும்வேண்டிடுங்கொல்லோ (௧௮)

ஆதலினாமவற்காற்றியதீமை
யோதுபல்கோடியுயர்பெருங்கற்ப
பேதமுலப்பிலபேரினும்பேரா
தேதமிலின்பமெய்தவுஞ்செல்லேம். (௧௯)

தேவர்கடேவன்றிகழ்பரமான்மா
வாவிகணன்றியடைந்திடவீவோன்
பாவருள்வந்துபதிந்திடுமாயின்
மேவுதுமின்புவிளம்பியதுண்மை. (௨௦)

அப்பரமற்குயரன்பியலோடு
மொப்பகல்பூசனையெங்கணுனாற்றி
யெப்படியின்பருணல்கருளெய்தித்
துப்புறுமின்னதுயர்தனிற்றீர்தும். (௨௧)

என்றுவிலங்குமுதல்வடிவெய்தி
நின்றிடுதானவர்நேரலரொல்லா
மொன்றுபுதம்முளுரைத்தனராகித்
துன்றியதஞ்சமிலாதுதுயர்ந்து. (௨௨)

இன்பமுயிர்க்கருளீசனிருந்த
துன்புமகற்றிடுதொல்பதிமேவி
யன்பொடுமெய்வழிபாடுகளாற்ற
மன்புனைநல்லருள்வேண்டிவதிந்தார். (௨௩)

வேறு.

செப்புமாறுசிலபக
லப்புத்தேளிரமர்தரித்
துப்புமிக்கசூரனென்
றொப்பில்பேரையுற்றுளான். (௨௪)

செம்மைசேர்ந்ததேவரை
மம்மர்செய்யும்வுண்ணழா
வெம்மைமிக்கவேயினோர்
தம்மையாய்ந்துசாற்றுவான். (௨௫)

இந்திராதியிமையவர்
சிந்துசூழ்ந்ததிண்புவி
வந்தொளித்துவைகினு
ரந்தவாற்றையறிதிரால். (௨௬)

அறிதலுற்றிங்கடையினென்
றுறுதியோடுமோதிட
விறலியைந்தவேயினோர்
பெறுநராணைபோர்குவார். (௨௭)

ஒத்தபான்மையோர்ந்திடாத்
தத்தமிற்பல்*சமினைசொற்
றெத்தலத்துமேகுருச்
சித்தமூக்கித்தேடுவார். (௨௮)

பாரிலுற்றபல்லிட
நேரலுற்றுநேடியே
யாருந்தோன்றலின்மையா
லோரிடத்தொருங்கினர். (௨௯)

ஒருங்குகூடுமொற்றுவர்
நெருங்குமாயநீணகர்
மருங்குசென்றுவாய்ந்தகு
ரரங்குதன்னையண்மினர். (௩0)

வேறு.

அப்பொழு தணிகொண் டோங்கு மவைக்களந் தன்னிற் சூழ்ச்சி, வைப்பெனும் புகரு மற்றை மந் திரத் தோரும் வைக, வெப்பிரு ரகனே சிங்க முக த்தனென் றுரைக்க நின்ற, வெய்ப்பிலாத் தம்பிமார்க ளிருவரு மிருபான் மன்ன. (௩௧)

பானுகோபனையேமுன்னாப்பகர்ந்திடுபுதல்வரெல்லா
னைமதில்லாவாற்றுற்சேர்ந்தினிதிருப்பவாகைத் [ந்
தானையந்தலைவர்யாருஞ்சார்ந்தெதிர்பார்த்துச்சூழ
வேனையவவுணவீரரிடந்தொறுமியைந்துநிற்ப.(௩௨)

---

* சமினை—குறி.

மேருவை நிகர்த்துச் செம்பொன் மிளிர்தரு தவி
சின் மீதே, யேருறு மண்ட கோடி யிருக்குமிந் திரர்
க ளெல்லா, மோருரு வெய்தித் தேவ ரொருங்குற
வுறைந்தா லொப்பச், சூரனு மவுணர் கோமான் றுல
ங்கிவீற் றிருந்தா னன்றே. (௩௩)

இன்னணஞ் சூர பன்ம னிருப்பவாங் கடைந்த சா
ரர், முன்னுறத் தலையாற் றாழ்ந்து முதன்மையின் வா
ழ்க வென்றே, சொன்னலம் பெறவே வாழ்த்தித்
தொடர்ந்திடும் விநயத் தோடு, மன்னவன் முகத்தை
நோக்கி யடைவினி விசைக்க லுற்றார். (௩௪)

நங்குலவரசகேண்மோநாமிவண்விடைபெற்றேகி
யெங்கணுந்தணந்துசென்றேயிந்திரன்முதலாவுள்ள
புங்கவரானோர்யாண்டுப்பொருந்தினரென்றுவுள்ளந்
தங்கியவூக்கத்தோடுந்தளர்வறத்தேடலுற்றேம். ()

பல்வகையாயபொற்றைப்பரப்பெலாந்தேடினேமாற்
பல்வகைமரங்கள்வல்லிபுல்லியுஞ்சனமின்றாயும்
பல்வகைப்புதல்களார்ந்தும்பன்னகநிறைந்துநின்ற
பல்வகைவனங்கள்யாவும்படர்வுறத்தேடினேமே. ()

தேடினேமக்கட்கூட்டஞ்செறிந்திடூர்களெல்லாந்
தேடினேமவைகள்சூழ்ந்தநிகழ்ந்திடுநகரம்யாவும்
தேடினேந்தவத்தின்மேலோர்சேருமாச்சிரமமுற்றும்
தேடினேமுயர்வின்மிக்கசிவத்தலமனைத்துமன்றே.

மன்னவர்மன்னனுகிவயங்குருமுறைவயாங்க
ளின்னணந்தேடலுற்றுமிமையவர்க்கண்டிலேமா

லன்னதனாலேயன்னோரும்பசிதாகமிக்கு
மெய்ந்நலமகன்றுமாழ்கிவீடினர்போலுமென்றார். ()

என்றசொல் வினவி யங்க ணிரவியம் பகைஞன் சொல்வா, னன்றிது மொழிந்தா ரொற்றர் நாகர்கோ னாதி யோர்கள், பொன்றினர் தாமே யாவர் பொன்னக ரென்னும் வ்வைப்பை, யன்றடைந் தனமா லெந்தா யஃதினி நமக்கே திண்ணம். (௩௯)

வசையகல்கின்றந்திவலலசாரணர்கடம்மாற்
சசிமுகக்கவின்கொண்டுள்ளசசிதனைக்கொணருவித்து
மிசைபெறுகூட்டிக்கோழிவிருத்தியதியல்பினாலே
நசையுறுபோகமெல்லாநாடியேதுய்த்தியென்றான்.()

சாரரும்புதல்வன்றானுஞ்சாற்றியமொழிகள்கேட்டுத்
தேருறுநீதிநன்னூற்றெளிவுடைப்புந்திவாய்ந்த
சூரர்கோனெடிதுசூழ்ந்துசுக்கிராசிரியன்றன்னைப்
பாருணரவையினோரைப்பார்த்திவைபகர்தலுற்றான்,

இந்திரனாதியாயவிமையவரெல்லாங்கூர்ந்த [தோர்
புந்தியர்நீதிவல்லோர்பொழுதியல்வகைமையேதேர்ந்
நிந்தையில்குரவனாணைநெறியினினிற்குஞ்சிலர்
சிந்தையாலின்னமொன்றுதேறருமுண்மையுள்ளோர்.

நல்லவாய் கலைக ளெல்லா நாடிய பொருண்மை தனினில், வல்லவ ரெண்ணில் கேள்வி வந்தவர் விபுதரொன்று, சொல்லுறும் பெயர்கொண் டுள்ளோர் சூரராந் திறத்த ரன்னோர், செல்லரும் புலத்தில் யாண்டேர் சேர்ந்தொளித் திருக்கின் றார்கள். (௪௩)

செய்திடுமுபாயச்செய்கைதேற்றமதுறுமோனாளும்
வெய்துறநமையடக்கும்வினைமுயன்றிடுவனாய
மெய்திட்டொழிகவின்னவேவதுவாற்றேவரானோ
ருய்திறனோடுமெங்கண்ணுறுகின்றாராய்மினென்றான்.()

தூங்குதலின்மைகல்விதுணிவினையுடைமைமூன்று
நீங்கலில்சூரபன்மனிகழ்த்தியமாற்றங்கேட்டுப்
பாங்குறுதகவுதேர்ந்தபரிசுமிக்குடையோனாகி
யாங்குறுமாசானிவ்வாறகத்தினின்மதிக்கலுற்றான்.()

விண்ணவர் நிலையி னுண்மை விளம்புத லாகா தேனு, மெண்ணுறு மவையி னாப்ப ணிறைவனா லேவப் பட்டோ, னுண்ணிகழ் புந்திக் கேற்ப வுரைத்திடல் வேண்டு மீது, மண்ணினிற் பண்டை தொட்டு வந்ததோர் தரும மாகும். (சசு)

என்றுள மதித்துப் பின்ன ரிறைவனை நோக்கிச் சொல்வான், வன்றிற லரச வானோர் மற்றையர் போல வீயார், நன்றுறத் தெரிதற் கொண்ணார் நாடுறுந் தேர்ச்சி மிக்கார், குன்றலி லுணர்ச்சி வாய்ந்தோர் கொற்றமீர் திறத்தோ ரின்னும். (சஎ)

தேசனை நிறைந்தோர் கண்ணாற் சேரலர்த் தகிக்கத் தக்கோர், பேசுமன் னவர்கள் பூமேற் பெருமை சேர் தலங்க டம்மின், மாசறு பறவை மாக்கள் வடிவொடு மறைத லுற்றுக், கூசியே திரிவ ரொன்று கொண்டதென் னுள்ள மென்றான். (சஅ)

புகரெனுங் குரவ னானோன் புகன்றவா சகத்தைக் கேட்டு, நிகரறு சூர னென்ன நிகழ்த்திடு மன்னர்

மன்ன, னுகவையோ டறுபத் தாறு கோடியென் று
ரைக்கு மெண்ணின், றகைபெறுங் கொற்ற வாய்மைத்
தருவர்தங் குழாத்தி னோடும். (௪௯)

வக்கிரதமிட்டிரன்னேமாதமிட்டிரன்கும்பாண்டன்
றக்கவித்தானைவீரர்தங்களைநோக்கிச்சொல்வான்
மிக்கதோர்புந்தியாற்றல்வெற்றிசேர்தருவீர்கேண்மின்
றொக்கநற்றனையோடுந்தொல்புவியின்னேயேகி. ()

உத்தமதலங்கடம்மையுறுவர்கணிலைகடம்மை
யெத்தகையோருமஞ்சவிமைப்பினிலழிவுசெய்து
கொத்தழல்கொள்ளுமாறுகொளுவியேபறவைமாக்க
டத்தமதுருவங்கொண்டோர்தம்மைநீர்புற்றுமின்கள்.

அல்லதுகொன்மினல்லாலரியதோர்சூழ்ச்சிதன்னான்
மெல்லவேசுடுமின்கூறும்வினையெதுவேனுமாற்றிச்
சொல்லினுற்சுகமேபோலுஞ்சுந்தரியிந்திராணி
நல்லியற்பெயராள்யாண்டுநண்ணிடுகின்றளென்று.

உள்ளமா ருக்கத் தோடு முண்மையை யோர்ந்து
கொண்டு, தள்ளரு வேக நின்று தள்ளிட வும்பி னை
ன்றே, யள்ளலங் கடலே போலு மவுணர்தங் குழாத்
தை யேவி, வள்ளுறை கொண்ட வாட்கை மன்னவன்
வீற் றிருந்தான் மாதோ. (௫௩)

வேறு.

அன்னகாலைதனிலன்னவொல்லா
மன்னர்மன்னனதுவார்கழறன்னைச்
சென்னிமேற்கொடுசெல்லவிடைபெற்றே
யின்னபோரமைவிசைந்திடுகின்றார் (௫௪)

ஏற்றுரிப்பறைகளெற்றிடவோர்ந்தே
யூற்றமிக்கவுழவோர்பலதேர்கள்
சிற்றவாசிகரியூற்றவுஞ்சேர
வாற்றலோடுகொடுவெந்தனரம்மா. (௫௫)

வந்தகாலைதனில்வாம்பரிபண்ணு
மெந்திரத்திரதமேனுறுபாய்மா
சிந்துரத்தொகுதிசேனைகளின்ன
சுந்தரத்தியறொடர்ந்தணிகொண்ட. (௫௬)

மிக்கவாற்றல்கொளும்வீரர்கடாமு
நெக்கமுன்னணிகள்யாவையுநீக்கித்
தக்கபேரணிகள்சாலவுநன்றுத்
தொக்குறும்படிதொடர்ந்திதுசெய்வார். (௫௭)

பன்னிறத்தொளிபடைத்தொளிர்கிற்ப
நன்னர்மைந்துடையயானர்நலத்த
மின்னுசாலிகைகண்மெய்யுறயாத்தார்
துன்னுவாளியுறுதூணிபிணர்த்தார். (௫௮)

பிறங்குகோதைகளையங்கைபிணித்தார்
திறங்கொலாவுவிரற்புட்டில்கள்சேர்த்தார்
மறங்குயிற்றுவனமாணுறநீண்ட
கறங்குநற்றொடைகொள்கார்முகங்கொண்டார். ()

இற்றெலாமமையவாற்றியபின்னோர்
செற்றமேதகையர்சீயவுலத்தார்
வெற்றிமிக்குடையர்வெஞ்சமர்வல்லார்
நெற்றியம்படையினீணவெந்தார். (௬௦)

வரிகளேறினமணிப்பணிக்கோட்டுக்
கரிகளேறினர்கடுங்கதிகொண்ட
பரிகளேறினர்படர்ந்திடுநேமி
புரிகளேறினர்களேறினராண்மை. (சுக)

ஏறலுற்றபொழுதத்தவனுய்த்தே
வேறலுற்றிடுவியன்படையெல்லாஞ்
சேறலுற்றிடுதல்சிந்தைசெய்தாழி
போறலுற்றிடமுழங்கினபொங்கி. (சுஉ)

தேரொலித்தனதிறன்மிகுபூழ்க்கைக்
காரொலித்தனகடுங்கதிமாக்க
ணேரொலித்தனநிசாசரரானோர்
தாரொலித்தனவொலித்தனதண்ணம். (சுங)

இந்தவாறுயர்படைப்பொலிவெய்த
மைந்துசேரவுணமள்ளர்களெல்லா
மந்தரத்தினையாய்ந்திடவெங்குஞ்
சிந்தைகொண்டுபுவிசென்றிடுகின்றார். (சுச)

செல்லலோடுமவர்திண்ணியகால்கள்
புல்லியேயெழுதலுற்றிடுபூழி
மல்லல்வெம்பரிதிவெல்லொளிமாறறுச்
சொல்லும்வானவர்கடொல்லுலகுற்ற. (சுரு)

இங்ஙனந்தகுவரோகிடலோடு
மங்ஙனந்திகழுமண்டர்களாசர
னுங்ஙனந்நிகழ்வியாவையுமோர்ந்தே
யெங்ஙனஞ்சுரர்களுய்குவரென்று.* (சுசு)

கருதியோங்குகயகானனமெய்தி
விருகமாதியுருவங்களைமேவித்
திரியும்வானவரைவல்லையிற்சேர்ந்தே
பரிவினன்னவர்பணிந்திடவோதும். (௬௭)

சிவனுறைந்துதிகழ்தெய்வதலங்க
ளவைகளூற்றுமறைநுங்களமர்ச்சி
கவியெனுங்குரவன்காட்சியினோத
வுவகையோடுமுறுசூரனுணர்ந்தான். (௬௮)

அசுரருக்கிறைவனன்னதறிந்தே
பசுவையாதிவடிவங்கள்படைத்த
வசையினுங்கடமைமாய்த்திடல்செய்ய
மிசைகொள்சேனையினைவெய்தெனவுய்த்தான். (௬௯)

உய்த்தகாலைதனிலொண்புவிதானு
மெய்த்திடும்படியிருங்கடலென்ன
மெத்துவன்மையொடுமேவுறுசேனை
யொத்தவாறிவணடைந்துறுகின்ற. (௭0)

இன்னதாந்தலமிமைப்பினினீங்கிச்
சென்னிமேனதிசெறித்திடுமெங்கோ
னுன்னுநல்லருளையுற்றிடுகாறு
மன்னுமின்களவணேனுமதித்து. (௭௧)

யாவிகட்கபயமாக்கிடுவோனை
மேவுமுள்ளமொழிமெய்களினுமல
யோவிலன்பினொடுபோற்றிடுமின்கள். (௭௨)

அவ்வியல்புடையிராகியகாலை
நைவியல்பகலநீக்கிடும்பன்
றெவ்வியல்பினுமைமெய்தியதீதா
மூவ்வியல்பினையுளங்கொளுமன்றே. (எங)

கொண்டதோர்பொழுதுபார்ப்பதிகோமான்
பண்டைநீங்கள்செயும்பாவமதெல்லாம்
விண்டுபோகும்வகைமெய்யருள்செய்தே
தொண்டுகொண்டருளுந்தொல்லையினும்மை. (எச)

ஆதலாற்புகல்கொளவ்விறையோனை
நீதிசேர்நெறியினின்றடைவீரோ
லேதிலின்பநலமெவ்வகையானுந்
தீதிலாதபடிசேர்ந்திடறிண்ணம். (எரு)

நன்மையாயதனைநாளுமளிக்குந்
தன்மையாலுயர்சிவப்பெயர்சாலுந்
தொன்மைசேரிறையையெய்தியதொண்டர்
புன்மையாயதுபொருந்தினர்யாரோ. (எசு)

என்றுசீவனிமையோர்தமதுன்னல்
பொன்றிடும்படிபுகன்றுமறைந்தான்
குன்றரிந்தவரியன்னதுகேட்டான்
றுன்றுமாற்றலர்கள்சும்மையுங்கேட்டான். (எஎ)

சூரனுணைகொடுதுன்றுபடைக்குட்
பேரியார்த்தலுறுபேரொலிதன்னை
நேரிலண்டர்பதிநீளிடைகேட்டுத்
தேரவின்றியிதுசெப்பிடுகின்றான். (எஅ)

யாதுஞ்செய்துமெவனேனுகுதுமங்தோ
வேதமாப்பறவையாக்கையெடுத்தும்
பூதலத்திடைபொருந்திடுமாறு
தீதுறும்வகைமைசேர்ந்ததையன்றே. (எகூ)

சிவத்துரோகமதுசெய்திடலாலே
யவத்துயர்க்குவழியாகியமைந்த
பவத்தினால்வருபயனிதுவேயே
தவத்தினாருமிதுதாங்குவர்கொல்லோ. (அ0)

அத்தனேநமையளித்திடல்வேண்டு
மெத்துணைத்தலையினெண்ணலொய்தா
ரொத்தவத்தலையினோடுவெம்யர்ங்கள்
சித்தமுற்றதொருதேற்றமிதேயாம். (அக)

என்னவேந்தனிமையோர்க்கிவைகூறி
யன்னதேவரொடுமெக்கணமோடி
யுன்னருந்தகையகீரனதூர்போய்த்
தன்னருந்தலைவிதன்னையடைந்தான். (அஉ)

இசைகொளம்மையொடுமெப்பனையெண்ணி
வசையுறாதுவழிபட்டுவகிந்த
சசியையுங்கொடுதணந்துவிரைந்தே
மிசைகுலாவுதிருமெய்யமடைந்தான். (அங)

தலங்களிற்றுருவுதானவர்தன்மை
குலங்களுக்கொருகுருச்சொலுமாற்றாற்
புலங்கொளும்புலவன்பொள்ளெனவந்த
நிலங்கொளுந்நிலையினீங்கினனோடி. (அச)

நீங்கரும்படருளாழ்ந்தனனின்றான்
பாங்கரும்பருமயர்ந்துபரிந்தார்
கோங்கரும்பணிகொள்கொங்கைகுலாவுந்
தீங்கரும்பனையதேவியுநொந்தாள். (௮௫)

அங்கணற்குநவையாற்றிடலாலே
புங்கவர்தமதுபொற்பியலெல்லா
மங்கலுற்றிடவின்மாந்தர்களேபோற்
சிங்கலார்சிறுமைசேர்ந்துகவன்றார். (௮௬)

விழுத்தகுங்கதியின்விண்ணவரீசற்
பழித்தலாயபிழைபற்றுதலாலிவ்
விழித்ததன்மையினராயினரொன்றாற்
கழித்தமாந்தர்செயிற்காண்பதியாதோ. (௮௭)

ஐந்துபாதகமதாற்றினுமென்னை
யெந்தவன்பவமியற்றினுமென்னை
நிந்தையில்சிவனைநிந்தைநிகழ்த்தல்
சிந்தைசெய்தலொடுகேட்டலுந்தீதே. (௮௮)

சேணடைந்துவருசெய்கையினாலே
மாணலந்தவிரும்வானவரெல்லா
மாணர்நீக்குமெலிவாற்றலராகி
நாணுமுள்ளமிசைநன்றுதெரிந்து. (௮௯)

தேசிகன்றனுபதேசநினைந்தே
யீசனையலதிடர்ப்படுவோர்க்குத்
தேசுசேர்சரணமின்மைதெளிந்து
மாசிலாவகைவழுத்துதலுற்றார். (௯௦)

வேறு.

மாவுயர் சிவனே போற்றி வன்றுய ரடைதலுற்ற,
வாவிகட் குறவே போற்றி யடியர்துன் பொழிப்பாய்
போற்றி, தேவருக் காதி யாய தேவெனுந் திறத்தாய்
போற்றி, பாவுறும் பசுக்கட் கெல்லாம் பதியென
நின்றாய் போற்றி. (௯௧)

சுத்தமதாயமூலப்பகுதியிற்றோன்றுகின்ற
சத்துவமுதலவாகிச்சார்ந்தமுக்குணங்களாலே
முத்திறப்பட்டமேலைமூர்த்திகளுதிக்கச்செய்து
நித்தமாய்மன்னிநின்றநிதானமாம்பொருளேபோற்றி.

நின்றொருநாமமோர்காணினைந்திடவியற்றியாத
னின்றொருவடிவையுள்ளநிறுத்திடலாற்றியாத[மாறு
னின்றொருதொழும்புற்றோர்கணெடுந்துயர்கடக்கு
நின்றொருதகவாற்செய்யுநிமலைதன்றலைவாபோற்றி ()

அந்தகா சுரனைக் கீண்டா யந்தகன் றன்னை மாய்த்
தாய், வெந்திடப் புரங்க ளட்டாய் வேழமா மவுணற்
செற்றாய், நிந்தையி லடியார் துன்ப நீக்கலே செய
லாக் கொண்டாய், முந்துநற் கருணை யென்னு முரி
மா கடலே போற்றி. (௯௪)

இன்னலங் கடலாழ்ந் தேமை யெடுத்துயர் கரை
யிற் சேர்ப்பாய், துன்னுமிவ் விளைப்பை யின்னே
தொலைத்தருள் செய்யாய் நின்னை, நன்னர்சேர் புக
லாக் கொண்ட நம்மையேன் சோதிக் கின்றாய், யன்
னவா றருளா யாயி னுற்றிட வல்லே மல்லேம். ()

தற்பரனினதுபாததாமரைப்பெருமைதன்னைச்
சிற்பமுந்தேருத்தியேஞ்செய்ததோரபராதந்தான்
கற்பமார்முடிவுகோடிகழியினுங்கழிவதன்று [பாய்.
லற்பினுற்பொறுத்துக்கோடியல்லதெம்முயிரைநீப்

பூமியை யகமுஞ் செய்கை புரிந்திட லுறுவோர் கட்குக், காமுறும் பற்றுக் கோடு கருதுமப் பூமி தானே, யாமது போல நின்பா லாசினை யிழைத்தேங் கட்குத், தோமிலாச் சரண நீயே தொன்மையாஞ் சிவனே போற்றி. (கூஎ)

இன்னவாறேத்திநையுறிமையவர்யாருமோடி
நன்னிலவணிந்தோர்நோக்காளைமிசாரணியம்போல
மன்னியபறவைமாக்கண்மற்றவுமாறுகொள்ளும்
புன்னெறியின்றிவாழும்புராதனவனத்துட்புக்கார். ()

புக்கதோர மாத்திரத்தே புரந்தர னெழுவா யான, மிக்கவின் னுள்ளோர் தங்கள் வியன்பசி தாக மெய்ப்பா, மிக்கொடுந் துயர்க்ண் முற்று மிரவியி னொளி முற் பட்ட, தொக்கபே ரிருளே போலத் தொலைந் தழிந் தொழிந்த வம்மா. (கூகூ)

சூரன் றேவரைத் தேடவிட்டபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ருகூா.

அசுரர் புராதன வனம்புகுபடலம்.

இப்படியொழிதலோடுமிமையவர்தொகையோரெல்லா
மொப்பருந்தெளிவுமேவியுள்ளமார்ந்துலவாநிற்ப
மெய்ப்பெருமகிழ்ச்சிபொங்கவிம்மிதநீரராகிச்
செப்பிடலுற்றார்தத்தஞ்சிந்தையிற்றோன்றுமாறு. ()

எங்களுக் குற்ற வெய்ய விளைப்பெலா மேகற் றே து, துங்கமிக் குடைய விந்தத் தொல்வன மகிமை தானோ, திங்களஞ் சடையோன் மேலாந் திருவரு டானோ வென்னும், புங்கவ ரின்ன வாறு பொருண் மையைப் புகன்று நின்றார். (௨)

நிற்றலுமவர்கள்சங்கைநீங்கிடுமாறுமென்று
மற்றமதுறுதவாழ்வையடைந்திடுமாறுமன்னோர்
துற்றிடுமுதினின்றுஞ்சுவையதாய்த்துழனித்தாகி
மற்றவர்மகிழவெம்மான்வாணிவானெழுந்துசெப்பும்

வாசவனாதியாயவானவர்யாருங்கேண்மி
னாசகல்பதிகடம்முளதிகமாயமர்ந்துதிய
பாசமதகற்றுமிந்தப்பழம்பதிதன்னினீவிர்
தேசுமீக்கொண்டுசிந்தைசிறிதுமில்லாதுவாழ்மின். ()

இத்தலந்தன்னினீங்களெய்துமாத்திரத்தேயுங்கண்
மெத்தியபழங்கணெல்லாம்விளிந்தனநீவிர்செய்த
பத்திசேர்துதியினாலேபரிந்துளமகிழ்ந்தநந்த
மெய்த்திருவருளேநும்மைமேவுவித்தருளிற்றிங்ஙன்.

• சிலபக லிங்கு வைகிச் சேவைசெய் திடுமி னம் மை, யில்குமித் தலைக்குச் செய்மை யில்லதோர் தலத்

திற் சோதி, யலகிலா ததுதே ருத வற்புதத் தது தா னேயாக், குலவுவ தாமி லிங்கங் குறைவினம் மரு ளாற் காண்பீர். (௬)

கண்டதோர் பொழுதே யன்ன காட்சியின் பெரு மை யாலே, யண்டர்கா ணீவிர் நீங்கற் கரியவெம் பா வ மெல்லாம், விண்டிடத் தூய ராகி மேவியே சில கா லத்திற், றண்டரு நிழற்கீழ் வாழுந் தலைமையை யுடைவீர் மன்னோ. (எ)

தருவர்கடலைவனுகிச்சார்ந்திடுஞ்சூரபன்மன்
றெருகலொடுமேவிவிட்டதுப்புடையேவலாளர்
புருவரோவீண்டுமன்னோர்பொருவலிபோக்குதும்யாம்
பகைவரானுமக்குச்சற்றும்பனிப்பினியுறுவதில்லை. ()

நீவிர்செய்தோத்திரத்தானெகிழ்ந்திடுமுள்ளத்தோடு
மேவரோவெனினுமெம்மையேத்திடல்செய்வாராயிற்
பாவமிக்குடையராயபண்பினரோனுமன்னோர்
நோவினையகற்றுதும்யாதுவன்றதுவாய்மையாமே. ()

நாடினல்லமுதாமிந்தநாகமார்மொழியைக்கேட்டு
மூடினர்புளகப்போர்வைமுகிழ்கரமுடியின்மீது
சூடினர்பணிந்தார்பல்காற்சோகமேயாதியெல்லாம்
வீடினர்மேலாமின்பவேலையின்வீழ்ந்தார்விண்ணோர்

களையிலாப் பரமா னந்தக் கடலினு ளாழ்ந்த வா னோர், விளைவினி லெழுந்து செக்கர் விரிசடை யுடைய பெம்மான், பொருவிலா காய வாக்காற் புக ன்றரு ளிலிங்கந் தன்னை, வளர்விலாத் தருச்சூ ழுந்த வனத்தினிற் றேட லுற்றார். (கக)

தேடுதலுற்றபோழ்துதிகழுமற்புதத்ததாகிக்
கோடலின்மதிகள்கோடிகுலவனேர்கொள்கைத்தாகி
நீடுளம்புந்திகண்கணைகிழுநற்காட்சித்தாகிப்
பீடுயரிலிங்கமொன்றுபெருவனத்திடையேகண்டார்

அச்சிவக் குறிக்கு முன்ன ரண்மையாஞ் சாரி லீச
ன், மெய்ச்செய லதனு ளுண்டாய் மிகத்தெளி நீர தா
கி, நச்சலின் முனிவர் மேலோர் நண்ணுறுங் கனைத்
தா யாரு, மிச்சைகொள் பெருமைத் தாகி யிலங்கு
நற் றடமுங் கண்டார். (கஙூ)

கண்டுவந் திந்தி ராணி காதல னுதி யாய, வண்டர்க
ளௌவரு. மேன்மை யமைந்தசங் கற்பஞ் செய்து,
தண்டுறை கெழுவுஞ் சால்பிற் றடத்தினில் விதிசொ
லாற்றான், மண்டிய * பவங்க டேய்க்கு மனுமுதற்
சொற்றே யாடி. (கச)

விரித்திடும் விலங்கே யூதி நெய்களை யெல்லாம்
வல்லே, யிரித்துநல் வடிவங்கொண்டே யெழில்பெற
விபூதி யெங்குந், தரித்துயர் தூளி யாமுப் புண்டரந்
தாங்கி மேலோ, முருத்திர மணிக ளாலே யுறுவட
மூலவைப் பூண்டு. (கரு)

பொருடிகழ் மறைகண் மூன்றுட் புகலுநள் ளௌசுரீ
வே தித்துட், டெருடிகழ் நாலாங் காண்டஞ் சிறந்த
மா வுருத்தி ரத்து, ளருடிகழ் நாப்ப ணோங்கு மைம்
பொறி மந்தி ரத்தை, யிருடிமுன் னியாச முற்கொ
ண் டியைபுளி யெண்ணி னாரல். (கசா)

* பவங்கடேய்க்குமனு—அகமருடணமந்திரம்.

எண்ணியேதூயராகியெழுந்தரன்பூசைக்காகப்
பண்ணமைவேதஞ்சொற்றபணிப்படிதாமேசென்று
தண்ணியலாயவில்வதளங்களைப்பல்வேறான
கண்ணறுமலர்கடம்மைக்கனிகளைக்காணுட்கொண்டார்.

இவையெலாங் கொண்ட பின்ன ரேனவு மமைத்து க் கொண்டு, நவையெலா முயிர்க்கு முமே நன்மைசெ யிலிங்க நண்ணி, யவையெலாஞ் சிரமேற் கொள்ளு மாகமம் விதித்த வாறு, சுவையெலாங் கைக்கு மின் பச் சோதியைப் பூசித் திட்டார். . (க௬)

இன்னதோர் வகையே நாளு மிந்திரன் முதலா வுள்ள, பொன்னக ருடையா ரெல்லாம் பொருவிலவ் விலிங்கந் தன்னின், மன்னொளி வடிவா நின்ற வர தனை வழிபா டாற்றி, யுன்னுறு மச்ச மின்றி யுறைந் தனர் சிறிது காலம்., (கஎ)

உறைந்திடுங்காலந்தன்னிலுன்னியேயுயர்கோமான்
மறைந்திடுநுண்மைநூல்கள்வல்லவிச்சுவகன்மாவை
நிறைந்திடுமன்பாற்கூவிநிகரிலாநகருமீசற் [ன்றான்.
கறைந்திடு விமானமாதி யனைத்துமீண் டமைத்திடெ

எனறலும் புனைவர் செம்ம லிமையவர் புரத்தைச் சூரன், வென்றிகொண் டடவி னன்னோர் மேவிவாழ் வுறுமா றெங்கோன், மன்றன்மா நகரம் வேறு வகுத் திவ ணல்கி யென்னத், துன்றுபல் செல்வ மேய தொ ன்னகர் கோயில் காண்பான். (உக)

வேறு.

ஈசனதருள்விரிந்திருக்குமாறென
யோசனையிரண்டெனுமகலமுற்றதாய்க்
காசினிதனக்கணிகலனென்றோதிடுந்
தேசுடைத்திருநகர்சிறக்கக்கோலியே. (உஉ)

நம்பிரானருள்கொடுநண்ணுமாலய
மெம்பெருமாட்டிவீற்றிருக்குமாலயந்
தும்பிமாமுகன்குகன்றுலங்குமாலய
மும்பர்கண்மற்றையோருறையுமாலயம். (உங)

அணிபெறவண்மையாமருத்தமண்டபம்
பிணிபெறனீக்கிடும்பெரியமண்டப
மணிபெறவயங்கியநிருத்தமண்டபம்
பணிபெறப்பல்கியபன்மைமண்டபம். (உச)

யாகநற்சாலைவாலுவர்களேய்ந்திடும்
பாகநற்சாலைமேற்பயிலும்விண்ணுலாஞ்
சேகரம்பற்பலதிகழுங்கோபுர
மோகைகொணுஞ்சிவிகேணுங்குமாமதில். (உரு)

மீளருமாணைவீதிநல்விழாக்
கோளிருளொளுள்ளல்கள்குலவுந்தெற்றிகள்
சூளிகையரமியஞ்சுடரும்பல்வகை
மாளிகைவரிசைகள்வயங்குமன்றுகள். (உசா)

நிறைபயிலருந்தவர்நிலவுஞ்சாலைக
ளுறைபயின்முத்தழல்யூபசாலைகண்
மறைபயிலாகமம்வழங்குசாலைக்
ளறைபயில்பொறைதிகழன்னசாலைகள். (உஎ)

அந்தணரிருப்பிடமரசர்தொல்லிட
மந்தமில்செல்வநல்வணிகர்வாழிடந்
தந்தொழினின்றிடுஞ்சதுர்த்தர்சாரிடஞ்
சிந்தியமரபினர்செறிந்துசேரிடம். (உஅ)

வாவிகளோடைகண்மடுக்கள்கீழ்நிலைக்
கூவல்கள்குலவியகுளங்கள்பொய்கைகள்
காவுகடடைவைகள்கவினப்பூத்திடு
மாவலர்நந்தனவனங்கள்பொற்பின. (உக)

இன்னவுமேனவுமிணையில்கம்மியன்
முன்னியேயெழில்பெறமுழுதுமாக்கலு
மன் [illegible] ககியேயமரர்தம்பெரு
மன்னவன்றன்னுளமகிழ்வுமன்னினான். (ந0)

ஆரணநகரமோவகிலங்காத்திடு
நாரணநகரமோஞானமீந்திடுங்
காரணநகரமோகழறுமிந்நகர்
சீரணிநகர்கொலென்றையஞ்செய்யுமே. (நக)

வேறு.

புரந்தரன்றனையுள்ளிட்டபுங்கவர்குழாங்கடம்மை
நிரந்தரமயரச்செய்யாநின்றிடுமிளையையெல்லா
முரந்தரவின்றியாற்றுமுண்மையாலந்நகர்க்கு
வரந்தரவிந்நீர்வைப்பினிளையாற்றங்குடிப்பேர்வந்த.

இந்தவா றமர ரெல்லா மிளைசைமா நகரந் தன்னி
ற், சிந்தையுண் மகிழ்ச்சி கொண்டு சிறப்பொடு மிருந்
க்கு நாளின், முந்துசூர் முதல்வன் றன்னுன் முன்ன

ரோ விடுக்கப் பட்ட, வெந்திற லவுணர் யாரும் விண் ணவர் தம்மைத் தேடி. (௩௩)

பதிகளென் றுரைக்கப் பட்ட பல்லிடங் களினும் பொன்னி, நதியினற் கரையிற் றூனு நாடிநற் றவத்தி ன் மேலோர், துதிகொளாச் சிரமந் தேய்த்துந் தொ ன்மறை யோரைக் கொன்றுங், கதிகெழு புள்ளை மா வைக் காதியுந் திரிந்தா ரன்றே. (௩௪)

இன்னணந்திரிந்துதேடியிமையவராயினோரைத் [று
துன்னுறக்காணுவாற்றூற்றுயர்ந்துளஞ்சோர்ந்துநின்
றந்நிலைகலாம்விளைத்தேயவுணரையழிக்கவுள்ள
மூன்னிவந்தவனைநோக்கிநாரதன்மொழிதலுற்றான்.

தானவவீரர்நீவிர்தளருவதென்னையீண்டு
வானவர்யாருமில்லைமாசிலாவுயிர்களெல்லா
மூனமதுறவேயழிக்கவுறுகணேனியற்றுகின்றீர்
மானமார்ண்டரின்னேவந்தோர்தானங்கேண்மின்.

புராதன வனத்தி னுப்பட் புதுவதா நகர மொன் றைத், தராதலத் துள்ளோ ரொல்லாந் தளர்வையாற் றெயில தென்னப், பராவுறும் பெயர்த்தா மன்னப் பண்ணவர் வினைஞன் செய்தான், விராவுமந் நகரில் விண்ணோர் மேவினர் போமி னென்றான். (௩௭)

நாரத னின்ன வாறு நவின்றுமேற் போத லோடு ஞ், சூரர்கோன் விடுத்த வாண்மைத் தொல்பெரு வீர ருள்ளஞ், சேருற மகிழ்ச்சி கொண்டு சிறந்திடு மிளைசை யென்னும், பேருறு நகர நோக்கிப் பெயர் ந்தனர் படர்த லுற்றார். (௩௮)

பொருதிறல் கொண்ட சீயப் போத்தெனத் திகழு ம் வீரர், நிரைதரு சேனை யோடு நெருரோலெனப் பட ர்ந்து மேலைப், புரியினுக் கண்மை யாகப் பொருந்தி டும் புறத்தி லெய்திக், கருமுகிற் கான மென்னக் கா ணுறு கானம் வந்தார். (௩௯)

வேறு.

பற்பலதருக்களும்படரும்வல்லியும்
பொற்புறுபுதல்களும்பொலிந்துபல்கியே
யற்பகலறிந்திடலருமைத்தாகிமுன்
னிற்குமானகர்ப்புறநெடியகானகம். (௪0)

தருவரையானையுந்தம்பமாயுறக்
கருரயகல்கவைகண்மேற்கழிகளாயுற
விரிதழைமூடுறமேவுமவ்வனம்
புரியினைச்சுற்றுகாவணத்தைப்போலுமால். (௪௧)

கானகவரைப்பினிற்களுலும்பாதப
நீணிறமுகிற்றலைநீங்கிச்செல்வன
வானுலகியநெறிந்தமரர்க்கேறிட
மேனெறிசெல்பவர்விரிவையொக்குமே. (௪௨)

காலுறவசைவனகவைகொடாவர
மாலுறழவுணர்தம்வகையைநோக்கிநீ
ரோலுறவிங்கணுமேகினீர்கொலென்
றூலுறத்தந்தலையசைக்குநீரபோல். (௪௩)

மரம்படர்கொடிவகைபெயர்ந்துமல்குத
லுரம்படருங்களுக்கொழிவுநேர்ந்ததிப்
புரம்படர்வீரொனப்பொருவில்வீரரைக்
கரம்படர்ந்தழைத்திடல்காட்டுமென்பவே. (௪௪)

த்தைவுறுகின்றநன்மரங்கடங்களுட்
புதலினமிடையிடைபொருந்துகின்றன
துதிகொளும்வெறுக்கையர்சூழ்ந்தசூழலுள்
வதிதருவறிஞர்தம்வகைமைபோலவே. (சரு)

இருளொருபொருளலவென்றுகூறுவார்க்
கிருளொருபொருளெனவினிதுகாட்டுதற்
கிருளொருவடிவினையெடுத்துற்றவெனு
விருளொருவடிவமாயியலும்வல்லையே. (சசா)

அரிகளினங்களோவதிகமல்லதேற்
கரிகளினங்களோகரடிச்சூழலோ
வரிகளினங்களோமானமர்க்களோ
விரிபுளினங்களோவென்னமேவுமே. (சஎ)

வன்றிறலரிமுதல்வகையமாக்களுங்
குன்றலில்பேதமாம்பறவைக்கூட்டமுந்
துன்றியமகிழ்ச்சியிற்றுயினிகொள்வன
வொன்றினுக்கொன்றினுலுறுகணின்மையால். (சஅ)

பேசியவன்னமாப்பிறங்குமிவ்வன
மாசிலரணமாவயங்களிடை
யேசகன்றிலங்கிடுமிளைசைமாபுரத்
தாகுறவிருந்திடுமமரராயினோர். (சகூ)

நஞ்சணிமிடறுடைநாதன்பூசனை
பஞ்சநல்லக்கரம்பன்னுருத்திர
வெஞ்சலிலேனவையீசைத்தலேத்திட
லஞ்சலித்திடலிவையாற்றிவைகினார். (ருo)

இப்படியிமையவரியற்றிவைகலுந்
துப்புமிக்கடைதருசூரமன்னவன்
மெய்ப்படவிடுத்திடும்விறல்கொள்வீரர்க
ளப்படிநிலையினையறிதலுற்றனர். (௫௧)

அறிந்திடலுற்றிடுமமையத்தேயவட்
செறிந்திடலுற்றிடுந்திறலரேவரு
மறிந்திடலுற்றிடமறங்கொண்டார்த்தன
ரெறிந்திடலுற்றனரிசைத்தகானகம். (௫௨)

கானகமெறியொலிகறங்குதேரொலி
யானைகள்பிளிறொலியிவுளிமாவொலி
சேனை[illegible]லிதிறலர்பேரொலி
வானகமுடையுமாறியைந்துமல்லிய. (௫௩)

இத்திறமாங்ஙனமெழுந்தபேரொலி
புத்தமுதருந்திடும்புலவர்கேட்டலுந்
தத்தமதுளங்குலைகுலைந்துதஞ்சமா
நித்தியமங்கலைநேசற்சேர்ந்தனர். (௫௪)

ஆயிரங்கண்ணவனாதிப்பண்ணவ
ரேயதோர்பரசிவலிங்கந்தன்னெதிர்
போயுறநின்றிவைபோற்றன்மேயினார்
தாயினுமேம்படுதகவினான்றனை. (௫௫)

வேறு.

விண்டுமுதலாம்வியனுருக்களன்பருககாக்
கொண்டுதுயரகற்றுங்கோமானேகாத்தருளாய்
மண்டுதொழின்மூன்றியற்றும்வுள்ளவேலவாள்சூலந்
தண்டமுதல்வாய்ந்த*ச்யமுடையாய்காத்தருளாய் ()

* சயம்—கை.

மங்கையொரு பங்குடையாய் வன்கணனைச் செற்றுடையாய், துங்க மழவிடையாய் தோலுடையாய் காத்தருளாய், சங்க வடியர் தமக்குச் சரணுடையா, யெங்க டமையுடையா யின்புடையாய் காத்தருளாய்.

நாலுவலத்தவுணர்தீமையினனெண்ணியுறும
வானோர்துயர்மலைக்குவச்சிரமேகாத்தருளாய்
பூநாகவாரம்புனைந்துளாய்முச்சுடரா
மானதசீர்விழிகொளண்ணலேகாத்தருளாய். (௫௮)

சொன்னவகையாற்சுரரெல்லாந்துதித்திடலு
மன்னபொழுதேயவர்துதிக்குமகிழ்ந்தருளிச்
சென்னிமதிபுனைந்தசிவபெருமானன்னவருக்
கின்னலகற்றத்திருவுள்ளமிரங்கினனே. (௫௯)

இன்பமருள்செய்யுமெம்பெருமானின்னேயாம்
வன்புமிகவாய்ந்தவயிரவநல்லுருவத்தாற்
கொன்புரியுஞ்செய்கைக்கொடுந்தகுவர்சேனையழித்
தன்புடையதேவரரந்தையினைத்தீர்த்தருள்வாம். ()

என்றுதிருவுள்ளத்தெண்ணியேயருள்செய்து
கன்றுமனமுடையகாரவுணக்கடலுண்ணும்
வென்றியழலாம்வித்தகப்பேர்மேதகையோ
னொன்றுமுருவதனையுற்றருள்வானும்பர்பிரான். (௬௧)

வேறு.

ஆரழற்சிகையணைந்தொளியவிர்ந்ததெனவே
சீரணிந்தமுடிசெஞ்சடைபுனைந்துதிகழ
யாருமஞ்சவருமெஞ்சலின்முகத்திடையே
கோரமிக்குடையகோலவிழிமூன்றுகுலவ. (௬௨)

திங்களம்பிறையின்வாளெயிறிரண்டுசினவித்
துங்கமுற்றவிதழின்புடைதுலங்கியுறவே
பொங்குமின்னலதுபோன்றதொருநாவுகடைவா
யங்குமிங்குமுறநக்கியளைவுற்றுநிலவ. (௬௩)

திருச்செவித்துணைகள்குண்டலமணிந்துதிகழப்
பொருப்புநேர்ந்தபுயமங்கதமமைந்துபொலிய
வுருச்செயுங்கழுமுளொள்வசிகபாலமுடனே
விரித்தயோகவுயர்தண்டமிவைகைகண்மிளிர. (௬௪)

வச்சிரப்படையின்வல்லவுகிர்மாட்சிபெறவே
நச்சுவாளரவினண்ணியிடுமுப்புரியினூ
லெச்சமின்மணிகொளாரமொடுமார்பிலதவே
விச்சைஞானியெனுமூர்த்திவிறன்மேவியுறவே. (௬௫)

கையுளார்கள்புனையாதமைகலன்கள்பலவுந்
துய்யமெய்யிலணிபெற்றுமிகவுஞ்சுடர்தர
வையமெங்குமுடிவெய்துபகல்வன்னிபொருவும்
வெய்யமேனியொளிவிண்ணொளிவிழுங்கிமிகவே. ()

கழுதுபூதமுதலாயினகடுங்கிரகமுந்
தொழுதுநோக்குமளவேயறவகன்றுதொலையப்
பழுதிலூதையினுமோங்குவிசையான்றுபயிலக்
குழுவுகொண்டிடையசெல்லினுமதிர்ச்சிகுலவ. (௬௭)

பொம்மல்சேர்பகைவர்யாரையுமொருங்குபொடியா
வெம்மைசெய்யுமொருவென்றியியன்மேவிவினையச்
செம்மையாரடியர்சேரலுறுசேமநிலையாய்
மம்மர்நீக்கியருள்பேரருள்வயங்கிமருவ. (௬௮)

முன்னமோர்பகலின்முண்டகன்முகுந்தன்முரணிப்
பன்னருங்கடவுள்யாமெனவுடன்றுபடரு
மன்னபோழ்தவணமைந்தவடிவின்றுமமையாப்
பொன்னகர்க்கிறைவனுதியரைநோக்குபுசொலும். ()

தஞ்சமெனநமைநண்ணியதவத்தினிமையீ
ரெஞ்சலில்பகைவரால்வருமிடுக்கண்வெருவைப்
பஞ்சதென்னவெரிதன்னிடையிற்பாற்றியருள்வா
மஞ்சலின்றியொருசில்பகலினீண்டையமர்திர். (எ0)

கந்தவேணமதுமைந்தனருள்கண்ணியுலகின்
வந்துதோன்றியுறுகின்றனன்மதிக்குமனையான்
முந்துசூரனெனுமுன்னவனைமேவலர்தமைச்
சிந்துகின்றவொருசிங்கமுகனென்னும்வலனை. (எக)

யானையின்முகமியைந்துடையதாரகனெனுந்
தீனமில்லிளவறன்னையும்விரைந்துசெருவின்
மானமோடுவதைசெய்துமைமகிழ்ச்சிபுரிவா
னூனதோர்திறனவந்தரர்தமக்கருளினான். (எஉ)

செம்மையாவினைபான்மையருள்செய்துமுறையே
யெம்மையாளுடையவைரவனெனுஞ்சிவபிரான்
பொய்ம்மையாரவுணர்பொன்றியுறவென்றியமரர்
தம்னுமயாரமுயல்கின்றனனுயர்ந்ததகையான். (எங)

ஞாளியூர்தியுடைநாயகன்விநாயகனொடுங்
கோளுறும்புரமகன்றுகுலவானவரொலா
மீளருந்தகையின்மேவியயல்சாரவிரையா
வாளுறும்படிவவன்னிதிசைநோக்கிநடவா. (எச)

பாதமூன்றலினதிர்ந்துதிகழ்பாரசையவே
தீதினோசைதனினாசைகள்செவிட்டிடினிசையக்
கோதிலாவிருகுரோசமெழுமெல்லைகுறுகி
மோதகங்கொளருண்மன்னவனைநோக்கிமொழிவான்.

தீயவல்லவுணர்சேனையையழித்திடுதியாற்
றாயநம்புதல்வவென்னவருடோன்முகமுளா
னாயிரங்கணுடையானொடுமழன்றுசெலவே
மேயசேனையொடுமெஞ்சமரமுற்றதையரே. (எசு)

கண்டுளார்மயிர்பொடித்துடலயர்ந்துகவலா
விண்டுபோகவரும்வெய்யதொருபோரினிடையே
தொண்டர்தந்துயர்தொலைத்தருளுமானைமுகவன்
மண்டுசேனையைவதைத்தருள்புரிந்தனனரோ. (எஎ)

நன்பெரும்பகவர்நாடலுறுமுண்மையறிவா
ரின்பமாமுருவவீசன்வடுகப்படிவனாய
வன்புறுந்தகுவர்வாகினியைநோக்கியழியா
வன்பினார்கடமையன்பினினளித்தருளினான். (எ௮)

இந்தநற்கதையியம்புபவர்கேட்பவரடர்
வெந்துயர்ப்பிணிகள்வெந்துமிகுசெந்திருவுடன்
சிந்தைசெய்தவைகள்சேர்ந்தெகினனூர்தியருளா
லந்தமார்பொழுதருங்கதியையெய்வர்சரதம். (எகூ)

அசுரர் புராதனவனம்புகுபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௲கூசஉ.

அசுரசங்காரப்படலம்.

என்று கும்பமுனி யோத லோடுமகிழ் வெய்து மா
தவர் கணத்தினோ, ரன்ற வன்றன்முக நோக்கி யேயி
வைக ளன்பி னோடுமுறை செய்குவார், மன்ற யாவுமு
ணர் மாண்பு ளோய்நினது வாக்கெ னும்பொருவி ல
முதினை, நன்று நச்செவிகண் மாந்தி யும்பெருக நாந்
தெ விட்டுத லடைந்திலேம். (க)

மாணு நல்லடியர் பத்தி யின்கணுறும் வைரவக்
கடவு ளாகவத், தேணு றுந்தகுவர் தம்மை யெங்ஙன
மிறுத்தல் செய்தன னெயிற்றணி, பூணு றுங்களப
முகவ னெவ்வகைமை போற்ற லாங்குழுவை மாற்றி
னான், பேணி யிங்கிவைகள் யாவை யுஞ்செறியும் பே
ர ருண்முறைமை பேசுவாய். (உ)

என்ன வேவிரத மாதவத்தினை யிற்றை யோது
தலு மாகடன், முன்ன முண்டருளு முனிவ னோதுறு
வன் முனிவர் நல்வதன நோக்கியே, தன்னி கர்த்த
பெருளீவ தாய்ச்சுசிகொள் சாலும் வைரவ சரி
தையைப், பன்னு வாமதனை நன்னர் சேர்முனிவிர்
பற்று முள்ளமொடு கேண்மினோ. (௩)

ஆய காதையுட னங்கு சம்புனையு மங்கை கொண்ட
ருளு மண்ணல்விண், மேய வாசவனை யாதி யாவுடை
ய விண்ணு ளோர்கள்புடை நண்ணுறத், தீய வல்ல
வுணர் சேரு றும்பெரிய சேனை யாகிய திரைக்கடற்,

போய ஞர்வலியை நீக்கி யட்டதொரு பொருவி லா வக,க"ு மறைகுவாம். (ச)

தும்பி மாமுகவ னும்பர் தம்மொடு தொடர்ந்து சென்றவுணர் சேனைமேல், வெம்பி யேகுதலு மன்ன நோக்கியிகு வெம்மை கொண்டுலவு தானவர், தம் படைத்திறம தனி படுத்திலகு தாரை வாண்முதல தாங்கியே, யம்பு ராசியென வார்த்து வந்தெதி ரடைந்து ளார்பொர மிடைந்துளார். (ரு)

வேலை வீசினர்கள் சூலம் வீசினர்கண் மேலை மங்குலென வில்லுமிழ், கோலை வீசினர்க ளாகி யேபொரலும் கோட்டு மாமுக விநாயக, ஞலை வீசியடு கன்ன லங்குவையி ஞயி ரங்கொள்பதி ஞயிரஞ், சாலை வீசியதொர் தருவர் தந்தொகுதி தாக்கி ஞனுயிரை நீக்கிஞன். (சா)

விண்டி னுற்றமுடி யன்ன தண்டமொடு விண்டிடாமுசல முற்கரங், கொண்டு நின்றவுணர் கூட்டழிக்குமொரு கோட்டு மாமுகன் குலாவுரு, வண்டரண்டமொடு பூதம் யாவையு மழிக்கு மொள்ளழுலுருத்திரன், மண்டு கத்திறுதி வாய்க்கும் வெவ்வுருவு மானு மென்னவுளை பன்னலாம். (எ)

வீர மிக்குடைய வேழ மாமுகவன் மேவி யிங்ஙனமு லாவலும், போரி யல்புணர் புரந்த ரன்பொருவில் புங்க வப்புயல் பொழிந்தவட், கோர வல்லவு ணர் தம்மை நாற்புறமுங் கோலி நின்றெதிர் தடுத்த

னன், பேரு டற்றகுவ ராயி ரத்தர்பலர் பேரு ருறு பொரு திட்டனர். (அ)

இந்த வாறிவர்கள் வெய்ய போர்புரிய விந்தி ரத் தலைவன் பன்முறை, நந்தை வாயினிடை வைத்தி சைத்துமிகு ஞாட்பி யற்றியவர் யாரையுஞ், சிந்தி யேயடலின் மிக்க வெம்மையுட றீர்ந்த றிந்தொழிய வாற்றியே, யந்த மார்பொழுதி னங்கி யென்னவவ ணடைக ளந்தனி னிலங்கினான். (கூ)

ஆய போர்முனையி லத்தி மாமுகவ னம்பு மாமழை சொரிந்துநின், றேயு மாறுபொரு கின்ற வேலையினி லெண்ப தாயிரமி பங்களும், பாயு மாப்புரவி பண் ணு தேர்த்தொகுதி பத்தெ னப்பகரு மயுதமு, மேய வன்னதொகை கொண்ட வாசிகண் மிருங்கு மூக்க ளும் விளிந்தவே. (க0)

பாடு றுந்தகுவ ரர்ப்பு தத்தொகை படைத்து ளா ர்படி படைத்துளார், வாட லுற்றயரு மெஞ்ச லுற் றபடை மாழ்கி யோடுதலை யுற்றன, வாடு றுந்தொழி லின்வன்மை யாயினு வகன்றி ரிந்திடு பதாகினி, நா டி யங்குறுக்கும் பாண்ட னும்பொருந னவிலு வா னனி தடுத்தரோ. (கக)

தான வர்குல முதித்து ளீர்மிகுதி சாலு நல்வலி படைத்துளீ, ரான நீவிரிது போழ்தி னிச்சமரி னஞ்சி யேகவச மெறும்வசி, யீன மில்பரிசை தோம ரம்பரசு வென்னு மாப்படைகள் விட்டுவிட், டேன

மோடுமெவ ஞேடு கின்றனி ருலேந்து பையுளினை
யெய்தியே. (கஉ)

தன்ள ருந்தகைய மான முள்ளவர் துணைப் ரோவு
யிர் தணப்பினுங், கொள்ளு மின்களக மீது யான்வ
ருவல் கூறு மின்சமரி னென்றிடா, வள்ளு றும்படை
கொள் வாகி னித்தலேவன் மற்ற வாகினி தடுத்துமி
ன், றுள்ள மாருநனி யூக்க மோடவ ணுருத்து மொ
ய்யம ரியற்றுவான். (கங)

கார் முகம்பொருவு கார் முகத்தைமிரு காலி ஞே
டுபல கால்வளைத், தோர் முகம்புணர நாணி பூட் டி
நனி யொளிர்வ நற்குறி யியலுவ, கூர் முகம்பொலிவ
வெண்ணி லாக்கணைகள் கொளுவி யேயழன மாடுற
ம், போர் முகம்பொலிவி நாய கன்மிசை பொழிந்து
ளான்மிக விழிந்துளான். (கச)

இழிந்த வன்பொழித லுற்ற திக்கணைக ளேக நோ
க்கிய வுயர்ந்தவன், கழிந்தி டாமுறுவல் காய்க நெஞ்
செயிர் கலந்து கூர்சர மளப்பில, பொழிந் து வல்லே
யவன் மெய்த்தெ றும்படி புரிந்து பின்னவன் பொருந்
துதே, ரொழிந்த பாகுகொடி யூழி யாம்படி யுஞற்றி
ஞன்சுர ருவப்பவே. (கரு)

தேர ழிந்திடலு மாயை வன்மைமிகு தீய வன்சி
ன்ம தெய்தியே, கூர ழிந்திடலில் வண்மை சேர்பர
சு கோதி லாவசி கதைப்படை, சூர ழிந்திடலே யாநீ
று வோ ன்றனது துணைவ னேறியரு டேர்மிசைக், கா

ர ழிந்திடைய வார்த்து வீசினன் கவன்று விண்ணவர் கலங்கவே. (கசு)

விட்ட வெம்படைகள் வேக மோடுவர வேத மூலவுரு வெய்தினேன், மட்டி லாதகணை மாரி சிந்தியவை மாய்ந்து போம்வகை யியற்றியே, சிட்டர் தங்குழுவை வாட்டு றுங்கொடியன் சிதைய வேதிரு வுளங்கொளா, வொட்டு போரினிடை யங்கு சப்படையுழற்றி விட்டன னழற்றியே. (கஎ)

அங்கு சப்படைய தொல்லெ னக்கடிதி னின்று போயவனை யட்டபின், றங்க மோடுமவன் மீண்டு வந்தெவ்ரும் தொல்வி யப்புறவி நாயகன், செங்கை தன்மிசையி னுற்ற தன்னதெரி சித்தர் கந்தருவ ரிருடிகள், புங்க வர்களிவ ருள்ள மாமகிழ்வு பூத்த வன்றனை வழுத்தினர். (கஅ)

தீமை மேவியகும் பாண்ட னின்னவகை தீர்ந்துலத்தலு மருங்குசூழ், தோமு றுந்தகுவ ரோவ ருங்கடிது துன்னி யோடுபவ ராயினு, ராம வேலைதனில் வக்கிரத்தசன னென்ற தந்தனெனு மிருவருந், தாம வற்றையுற நோக்கியே யிரியுந் தான வப்படை திருப்பியே. (கசு)

மிக்க சீற்றமொடு கண்டு ளோர்வெருவ வெய்ய தேரின்மிசை யேறியே, பக்க நின்றறுபத் தாறு கோடியெனும் பாடி யோர்வுணர் பரவுறத், தக்க வன்மையொடு தந்தி மாமுகவன் சார்ந்து நிற்புறு மடுங்க

ளம், புக்கு நோக்கியெரி கால வேவிழிகள் புகலு வா ர்மலையை யிகலுவார். (உ0)

ஏவு முள்ளறிவி லாயு ணாத்திடுதி யானை யீவிழிவிலாமையின், றேவல் செய்துநமை யெண்ணு றுதுமிகை யுற்று நின்றனையென் றோதிடா, மேவி மீயுயரும் வெஞ்சி னத்தினொடு வில்லி னாளொவி விளக்கியே, பாவி கட்கனுக வில்ல வன்றன்மிசை பகழி மாரிகள் பொழிந்தனர். (உக)

அன்ன காலகரி மாமுகத் தவனை யண்மி நாற்புறமுஞ் சூழ்வுறா, மன்னி நின்றடல்கொ ளவுணர் சூலமுதன் மாப்பெ ரும்படைகள் விட்டனர், கன்னெருங்கிவிழ வோச்சி னார்தருவின் கானி னெற்றினர்க் ள் கைகளால், வின்னெ டுங்கணைகள் வண்ண லத்தவைகள் வீசி னார்முறைமை வீசினார். (உஉ)

வேலை யென்னவருள் வேழ மாமுகனை வெய்யர் சுற்றியம ராற்றலுஞ், சூல மேந்தியரு டோன்றல் பார்த்திதழ் துடிக்க வேசினவி யொல்லைபி, னூல காலனொடு சோம கன்பொருவி லங்கி மாமுகவ ணடுதிறற், கால வேகன்முத லாய பூதரையுங் காவ லோர்தமையு முதவினான். (உங)

உதவ லோடுமவர் யாவ ருந்தொழுத லுற்று நாற்றிசையுஞ் சுற்றுறக், கதியை நல்லுயிர்க டங்களுக் கருளுங் கால வைரவனெனும்பிரான், றுதிகொ ண்டிபுதல்வ தான வப்படைஞர் தொல்லு யிர்த்தொகைக்

யை வல்லையின், வதைசெ யாமலிவ ணிற்ப தென்
னென வகுத்து நின்றமரி யற்றுவான். (உச)

ஞாளி யூர்தியொரு முத்த லைப்படையின் ஞாட்பி
ல் வந்துட னெதிர்த்திகன், மூளு மாற்றலர்த மெய்க
ள் போழ்ந்துபுவி முற்றும் வீட்டியுறு போழ்தினிற்,
றூளும் வக்கிரத மிட்டி ரன்கவுரி தனய னோடுசமர்
செய்தன, னீளு டற்பெரிய பல்லி னோன்வடுக நிமல
னோடுமம ராற்றினான். (உரு)

தொண்ட லங்கொடயு தத்தின் மிக்கவர்தஞ் சூழ
லைக்கடிது பற்றியே, கொண்ட கோடுகொடு குத்தி
வீழ்த்தலுறு கோட்டு மாமுகனை யண்மியே, மண்டு
வக்கிரதி மிட்டி ரன்சினவி வல்லை யோர்கிரி பிடுங்கி
யே, விண்டு போயினையென் றோதி யேயதனை விட்
டு ளான்பெருமை விட்டுளான். (உசு)

விட்ட பேரசல மிக்க வேகமொடு மேவ லோடும
து நோக்கியே, யிட்ட வக்கிரியை நூறு மாக்குலிச
மென்னு மற்புகழ் படைத்துளான், மட்டி லாவலி
கொளங்கு சப்படையை வல்லை யிற்செல விடுத்தன
ன், இட்டு மாமலையை யட்ட தாலனைய கேடிலாப் ப
டை யுடைத்தரோ. (உஎ)

அங்கு சப்படையு டைத்த கோணமுடை யப்பெ
ருஞ்சயில மனைவரும், பொங்கு மற்புதம தெய்த வே
ழமுல்செய் பொருவின் மண்டப வடிவமா, யெங்க
ளையன்மிசை மெல்ல நண்ணியுள தேய தன்புரிவு

வறிதுறப், பங்க முற்றபொரு நன்சி னங்கொடு ப
ருத்த வெங்கதையொ டண்மினான். (உகு)

அண்மி யேவினை வினவ்வெ றும்ப்படையை யாற்ற
லோடுமிசை வீசலும், திண்மை மிக்ககுண நாயகத்
தகைமை சேரு நம்பிறைவ னேக்கியே, வண்மை
மிக்கவிளை யாடலாலதனை வண்பு ழைக்கைகொடு
பற்றிநின், றுண்மை யில்லவனை யன்ன தேபடை
கொ டோச்சி வல்லுயிரை நீக்கினான். (உகூ)

வே று.

செய்ய வார்சடை சேர்ந்து லாவிய சென்னி கொ
ண்டுள சித்தனும், வெய்ய செய்கையை யென்றுமே
செயும் வெய்ய னும்பெருந் தந்தனை, மையன்மார்பின்
றாடழுந்த வடிக் கழுக்கொடு கொந்தியே, கையி
னேந்தி யிருந்த வாரப்பது காட்டி யங்ஙன நின்றனன்.

இன்ன வாறிவர் மூவர் தாமு மிறந்து மன்னுயி ரோ
கலு, மந்நிலைப்படு தானை யானவையு மால காலனை
யாகியாத், துன்னு பாரிடர் தாக்க வோய்ந்து தொட
ர்ந்து விண்ணவ ரெய்கனு, மன்னி யோட்டிட வோ
டி யேபெரு மன்னன் மன்னுழி மன்னிய. (௩௧)

பின்பு வானவர் யாரு நின்று பெருங் களிப்பொடு
போற்றிடத், துன்பு நீக்கிடும் வைர வத்தனித் தோ
ன்ற லும்மவன் றோன்றலும், வன்பு றுஞ்சமர் நாம்ப
றிரிய மாண்பு சேருறு தீர்த்தநல், லின்பு றும்படித்
ம்பெ யர்கொடி யற்றி னாருள் பற்றினர். (௩௨)

தீர்த்த மாயின செய்த வற்றுறு தீரமேனிகழ் பல்வகை, கூர்த்த மானவர் கூட்ட மேபயில் கோல மாநிரு மாநகர், கீர்த்தி மிக்குற வாக்கி யேவலி கிளர்கணத்தொடு மூலமா, மூர்த்தி யாகிய தாமு முன்னைமை முந்து நீர்நிலை மூழ்கியே. (கூஙு)

கணங்கள் வானவர் வேண்ட வின்ன கயங்க ணீரிடை மூழ்குவோ, ரணங்கு செய்பெரும் பாவ நீக்கமடங்க லார்வகை போக்குற, விணங்கு நன்மகப்பேறு முற்பல வெய்து வாரொன் றருள்செயாத், தணங்கொ டம்பெயர் பெற்ற மாநகர் தம்மி லேற்றமொடுற்றனர். (கூச)

எய்ம்பி னுக்கொரு வைபப தாகிய வீசன் மெய்யருளாணையான், மைப்ப டிந்தெனு மூர்க்க னுய்த்தமலைப்பெ ருங்குகை மந்திரத், தொப்பி றீர்த்தம தற்கு நண்ணிடை யுற்று மேலவி நாயகன், றப்பி லன்பருக் கென்று நல்வரஞ் சாரு வித்தருள் கின்றனன்.

அன்ப ரானவர் தங்க ளுக்கிட ராற்று மாற்றல ராற்றலை, வன்பு செய்துடும் வைர வத்தனி வள்ள லுந்தன தீர்த்தமுன், றென்பெ ருந்திசை நோக்கி யேதிருக்கோயில் கொண்டருள் கொண்டினுந், துன்பில் வானவர் மான வர்தொழுத் தொல் வரம்புரி கின்றனன். (கூரு)

அசுரசங்காரப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சுஎஅ.

௪ மயூரகிரிப்படலம்.

சேனை காவல ரேனை யோர்கள் சிறந்த கைலையி ஞயகன், மேன நல்லரு ளா லழிந்திட விண்ணுளோ ர்க ளியாவரு, மூனை மார்மெலி வாற்று மீசனை யுற்று வந்து வணங்கியே, யான தோத்திர மெண்ணி லா தன வங்கு நின்று நிகழ்த்தினர். (க)

இன்ன நீர்ந்தவ ரான வானவ ரீறி னற்றுதி செய்த லும், தன்னி ருஞ்செவி சாத்தி யேயுயர் தானு வாகி ய தற்பர, னுன்ன ருந்திரு வுள்ள மீதி னுவந்து மற் றவர் காணுற, மன்னு நித்திய மங்கலைப் பெயர் மா தொ டும்வெளி வந்திடும். (உ)

வே று.

வெள்ளியங்கிரிபோன் மிக்க வெள்ளிய முரிப்பும் வேங்கைப், புள்ளிமென் றோல்சேர் வெந்நும் பொ ன்மணி வற்க வாயு, மள்ளுகிங் கிணிப்பே ரோசை யார்த்திடுங் கழுத்துஞ் * சூலங், கொள்ளுறும் வல முற் காலுங் கொண்டமால் விடையின் மீதே. ()

வீற்றிருந் தருளிக் கற்றை வேணியிற் கங்கை யா றுங், கீற்றுவெண் பிறையாஞ் சென்னிக் கிளரணி தானு மேவ, நாற்றிருக் கரங்க டம்மி னவ்வியு மழு வு மச்ச, மாற்றலும் வரமுஞ் சேர மணியொளி மிட று மன்ன. (ச)

---

* சூலம்—சூலக்குறி.

தெய்வவான் கங்கை யாற்றைச் சேர்ந்தகா ளிந்தி யென்னச், செவ்விய கூதிர்க் காலந் திகழ்மதி கோடி போலுஞ், மெய்வரு மிடிப்பான் மேவி வியன்கிளி போலும் பச்சை, மைவரு மேனி வாய்ந்த வள்ளை யாந் தேவி யோங்க. (ரு)

வளக்குள மகன்ற மேனி மாணுலங் காண்போர் தங்க, ணோக்கினைக் கவர நான்கு நுவன்மறை யுருவ ந் தாங்கி, நீக்கற நின்று மேன்மை நிகழ்த்திட வடி யார் தம்மைக், காக்குறுங் கயிலை நாதன் காட்சியின் னவருக் கீந்தான். (சு)

ஈதலு மன்னோர் நோக்கி யீறிலா விழைவால் வைய, மீதினு யிரங்காற் ருழ்ந்தார் மேலுற வெழுந்தார் துள்ளிப், பாதமோ டாடா நின்றார் பாடினர் பரவிச் செங்கை, கோதறு முடிமேற் கூப்பிக் கொண்டிவை யன்பிற் சொல்வார். (எ)

அறுகுணச் செல்வ நின்பே ரருளினு லவுணர் தம் மைக், கறுவுகொள் வடுகப் புத்தேள் கயமுகக் கட வுள் போரிற், றெறுகணத் தோடு நின்று சிதைத்த னர் சிதைத்த லால்யாம், பெறுமிகு மச்சந் தீர்ந்தேப் பேறிலா மின்னே பெற்றேம். (அ)

இந்தநற்கேத்திரத்தினிலையிலாப்பிரபாவத்தா
னந்தமதகங்களெல்லாநசித்தனபெருகவாதி
யந்தமில்பெருமவல்லையமருலிகெங்கட்கிவாய் [லை
வெந்திறற்பகையின்றேனும்விசும்புறைவிருப்பேயி

தேருநல்லழகுவாய்ந்துசிறந்திடும்வளங்கண்மேவி
யாருமீக்கூறுநிற்குமிப்பதிமீதியாங்கள்
பேருறுதிருந்தியார்க்கும்பேரிறையானநின்னை
யேருறவழிபட்டெல்லையில்லதோராண்டுவாழ்தும்.

ஆயினற் சேனை மாண்ட தாற்றலின் றாகி யோடிப், போயதா னவராற் கேட்டுப் பொருவினல் வரக்கொண் டிற்ற, தீயனுஞ் சூர பன்மன் சினவியே தானே யின்று, மேயதோர் பகைமேற் கொண்டு விரைந்து வந் திடுவான் றிண்ணம். (கக)

அன்னவ னரிய வாற்ற லடக்குத லெவர்க ளாலும், முன்னரி ததனால் யாங்கண் முடிவிலாப் பணிப்புக் கொண்டே, மன்னிய கருணைக் கொப்பில் வைப்பெனும் பகவ வன்னான், றன்னுயி ரொழியச் சூழ்ச்சி சமைத் தெனைக் காத்தி யென்றார். (கஉ)

என்றுவின் ணப்பஞ் செய்தே யிமையவர் குழாங்க ளெல்லா, நின்றிட வடியார் மீது நீடருள் புரியும் பெம்மா, னொன்றிய வமுதந் தன்னை யுறுசெவி வாக்கு மாபோ, னன்றவர் தம்மை நோக்கி நயந்திவை யருளிச் செய்யும். (கங)

அஞ்சலிர் வான நாட்ட ரடைந்திடு முமக்கு நன்மை, தஞ்சமா நம்மைச் சார்ந்தார் சார்வரோ சிறிது மச்ச, நஞ்செய றன்னை யெண்ணா னம்மிடைச் சரண முற்ற, நுஞ்செயி ரில்லா வாழ்வு நூறிட முயன்றான் றீயோன். (கச)

அன்னவன் றன்னைக் கோறற் கமைந்ததோ ருபாயஞ் செய்தா, மென்னையோ வென்று நீர்கேட் டிடினுரை செய்துங் கேண்மின், றன்னிகரில்லா வாற்றற் சண்முகத் தனய னாலம், மன்னவன் றுணைவ ரோடு மற்றையோ ரோடும் வீவான். (கரு)

அனையவனன்றிச்சூரமவுணனையடவல்லார்யா
ரினையனுநங்கணுற்றவினையிலாத்தேசினின்றும்
பனிவரையென்னுஞ்சீர்சால்பருப்பதச்சாரல்சார்ந்த
நனிதிகழ்சரவணத்தினள்ளுறத்தோன்றியுற்றான். ()

சரணுறுமடியார்கட்குச்சார்பகைநீக்கவல்ல [மி
முருகவேடன்னைச்சேனைமுதல்வனாவரித்துக்கொண்
டருமைசாலனையனம்பேராணையாற்றானேவந்தா
மருவுவனவனால்வல்லைமருவலார்தம்மைவென்மின். ()

என்னவேயருளிவேளையெரித்தவன்வேளையுள்ளத்
துன்னினனுன்னலோடுமுயர்சரவணத்திற்றோன்றி
மன்னுநல்வேளுமன்னவண்கயிலையறிந்துதாதை
யன்னையாரிருவர்க்காணவாசைமீதூரக்கொண்டு. ()

பயிலுறுநீல்வெற்பிற்பரிதியொன்றுதித்தாலென்ன
மயிலுயரூர்திமீதுவனப்பொடுமிவர்ந்துதன்னாற்
குயிறருகணங்கள்சூழக்கோலநல்லுமையாள்வந்த
புயறவழ்பொருப்பினின்றும்பொருக்கெனவந்தானம்மா

மருவுறு மாரன் மாதர் வளர்த்தலாற் கார்த்தி கேயப், பொருவிலாத் திருப்பேர் கொண்ட பொருவிலி

க் குமரப் புத்தே, ளளையெனும் * புகைக்கு மேலே யடைந்திடுந் தகைமை யன்பின், களையிலன் கயிலை நாதன் கண்டனன் கவுரி யோடும். (உ0)

கண்டிடுங் கயிலை நாதன் கணிப்பிலா மகிழ்ச்சி யுள் ளங், கொண்டனனன் பிளற்பால் கொங்கைகள் சொ ரிந்து விம்மும், வண்டலர் குழலி யோடு மால்விடை மேல்கொண் டேகி, யண்டர்க ளெவருஞ் சூழ வண் மிளுன் குமர வேளை. (உக)

தாதையு மன்னை தானுந் தன்னுழை யேகல் கா ணூஉ, மேதகு கந்த வேளும் வியன்பெரு மகிழ்ச்சி யெய்திக், கோதிலா மஞ்ஞை நின்று கொம்மென விழிந்தே யன்னூர், பேதுற வகற்றி யின்பம் பெருக் கும்பே ரடிக டாழ்ந்தான். (உஉ)

திண்ணிலந் தாழுஞ் சேயைத் திருக்கையா லெடு த்துப் புல்லி, யண்ணலு மம்மை தானு மார்வமோ டுச்சி மோந்து, தண்ணிய மடிமேல் வைத்துத் தனி த்தனி மகிழ்ந்தி யாரு, மெண்ணுறத் தமக்கு நாப்ப ணிருத்தினர் கருணை மெய்யார். (உங)

பகலிரவினுக்குநாளும் † பகலுறுமாலையென்ன
விகபரமீவார்தங்கட்கிடையின்வீற்றிருக்கும்வேளை
மகபதியாதியாயவானவரானோர்யாரு
முகவையிற்பணிந்துபோற்றியுயர்திருமுன்னர்நின்றூர்.

* புகை - யோசனைதூரம். † பகல் - நடு.

அவ்வழிச் சிவனு மெங்கோ னருமைசால் சேயை நோக்கிச், செவ்விதா மன்பி னோடுஞ் செப்பியே யருள்வான் மைந்த, வெவ்வமி லிந்தி ராதி யிவ்விமை யவர்கள் சூரால், வெவ்விய வெருவு கொண்டு மெய்ப் புகல் சார்ந்தார் நம்மை. (உரு)

ஆதலி னவர்கட் கன்பா லடுபடைத் தலைமை பெற்றுத், தீதுறுஞ் சூரை மற்றைத் தகுவரை விரைவிற் செற்று, மாதுய ரொழிப்பா யீண்டே வன்படைத் தலைமைக் காவிப், போதிவர் நீரா லாட்டப் பொருந் துதி யைய வென்றான். (உசு)

என்றுகை லாயநாத னியம்பியே யருளக் கேட்டுத், துன்றிய வலிமை மிக்க சுப்பிர மணியப் பெம்மா, னன்றது செய்வ னென்று நவின்றன் னதனை யோர்ந்து, மன்றவே மகிழ்ந்து வானோர் மாண்டனை னினிச்சூ ரொன்றார். (உஎ)

பின்புநல்லின்பநல்கும்பிரானருளாணைதாங்கி
மின்பயின்மயூரமீதுமேவியகார்த்திகேய
னென்பெருவீரன்றன்னையிந்திரன்முதலாந்தேவர்
வன்படைத்தலைவனாகமதித்துநீராட்டினார்கள். (உஅ)

ஆட்டிநல் விசாகற் போற்றி யறுமுகம் படைத்த மேலோ, யீட்டுபல் பாவஞ் செய்யு மிழிந்தசூ ரொம்மைச் சால, வாட்டுறு கின்றா னெந்தாய் மைந்தர்நற் றுணைவர் சூழ்வோர், கூட்டமோ டவனைவீட்டிக் கோதற வருந்தி யென்றார். (உகூ)

என்றுநின் றிரந்து வேண்டு மிமையவர் தமக்குச் செவ்வேண், மன்றநல் லருளைச் செய்ய மாயனு மய னுந் தேட, வன்றுநின் றருளு மூர்த்தி யயிற்படை யொன்று நல்கி, வன்றிறற் சூரைக்காதி வருகென வருளைச் செய்தான். (கூ0)

செய்தலும்வீரவீரன் றிருவடிவேலைவாங்கி
யுய்தரவுயிரையோம்புமொருதனித்தந்தைதாயர்
மெய்தருசரணந்தாழ்ந்துவிடைகொடுவீரவாருக்
கைதருபடையோனுதிக்கணத்தவர்சூழநீங்கி. (கூக)

பண்ணவர்பரவியார்ப்பப்பல்லியாந்துவன்றியார்ப்பத்
திண்ணியவீரரார்ப்பச்சேனைகள்பிறவுமார்ப்ப
விண்ணியலாருயார்க்குமேவரும்வேலோன்சென்று
கண்ணியதரங்கமார்க்குங்கருங்கடல்கடந்துபோந்து.

போரியல் பகைசூழ் மாயா புரந்தனிற் புகுந்து நே ரும், தாரகன் றன்னை யேனைத் தகுவரைத் திறல்கொ ள் சீயக், கோரவத் திரனைக் கொன்று கொளற்கரு வரமேற் கொண்ட, சூரபன் மாவை யட்டுத் தொ லைவிலா வாகை சூடி. (கூகூ)

இயந்தலை தோறும் விம்ம விமையவர் குழாங்க ளெல்லாம், வியந்துபோற் றெடுப்ப வுள்போய் மே வலன் சிறையி னீக்கிச், சயந்தனைக் கொண்டு மீண்டு தண்புன லருத மேன்மைக், கயந்தலை சூழும் பூமேற் கயிலையை யடைந்தான் மன்னோ. (கூச)

தன்னைமுன் விடுத்துத் தாமுந் தணந்தவண் வந்து மேலா, மின்னிய நிலையோ டுற்ற விருமுது சூரவர் பாதஞ்; சென்னியிற் கொண்டே யுள்ளந் திகழ்தரு மகிழ்ச்சி யோடு, முன்னுற நின்றான் றேவர் மொய்த்தனை வோருஞ் சூழ. (௧௫)

தந்தையுந்தாயுமில்லாச்சங்கரன்றேவியோடு
முந்துறநிற்குஞ்சேயைமுதத்தொடுமெடுத்துப்புல்லி
மைந்தநீசூரன்றன்னைமாய்த்துவந்தனையோவென்னக்
கந்தனின்னருளாலட்டேனென்றலுங்கருணைபூத்தான்.

அப்பொழு தமர ரானே ரண்ணலை வேண்ட லுற்று, ரிப்புவி மீதே யெங்ஙனிகற்படைத் தலைமை பூண்டான், மெய்ப்படு மங்ஙனேயில் வியனறு முகங்கொ டேவன், வைப்பின்வீற் றிருக்க வுள்ளம் வைத்தரு ளென்று தாழ்ந்தார். (௧௭)

மன்னுறு கைலை யண்ணன் மற்றது செவியிற்கொண்டே,புண்ணிறை கருணை யோடு முறைத்தவத் தலைத்துச் செவ்வே, ணண்ணிவீற் றிருக்க வானை நல்கிவான், செல்வ மெல்லாம், விண்ணவர் வேந்தற் காக்கி வியனருள் செய்தான் மேலோன். (௧௮)

மாவுயர் செல்வம் பெற்ற வலாரிவா னவர்க ளோடுந், தேவர்தந் தேவைத் தாழ்ந்து சீர்தகப் போற்றச் செவ்வே, ளாவயி னப்பனம்மை யடிதொழுஉ விடைபெற் றுண்பூத், தூவுபண் ணவர்கள் சூழத் தூவி மா மயின்மேற் கொண்டான். (௧௯)

தெய்வதயானையம்மைசீர்கெழுவள்ளியம்மை
மைவருகண்ணார்தம்மைவனப்பினிற்கொண்டியாங்க
ளுய்வரமுகங்களாறுமுற்றருள்வள்ளறென்கீழ்க்
கைவருதிசையின்மூன்றுகுரோசமேற்கலந்துவந்து()

சரவணிப் பொய்கை யென்னுந் தன்னிகர் தடமொ
ன் றாக்கிச், சுரரொடு மன்ன தீர்த்த தோயத்தின்
மூழ்கி யாங்கண், மருவியே படிவோ ரெண்ணில் வர
ம்பெற வருளி மேலாங், கிரிமிசைக் கோயில் கொண்
டு கிளர்ந்துவீற் றிருந்தான் மாதோ. (சக)

திருமலர்மலர்ந்ததன்னதிருமுகமாறுந்தெய்வக்
குருமணிமகுடமாறுங்கோதினல்லடியார்தங்கட்
கருளாறுவிழிமூவாறுமணிக்குழைக்குழையீராறு
மருவொளிச்சத்தியாதிவான்படைக்கரமீராறும். ()

கனகவுத் தரியத் தோளுங் கண்டிகை முந்நூன்
மார்பும், புனைதுகி லரையும் பொன்போற் பொலிதி
ரு வடியும் பொற்ப, வனைதரு மயின்மேற் கொண்டு
வனிதைய ரிருபான் மன்ன, நனிதரி சிப்போர்க்
கென்று நல்வர நல்கி வைகும். (சங)

கிளத்துறுதலமயூரகிரியெனவென்றுமுள்ள
துளத்திடரொழிவுற்றுய்ந்தவுயர்நிலத்தரசனேனை
வளத்தகுவாணரோடுமகிழ்சிறந்தறிஞருள்ளங்
கொளத்தகுங்குகனைத்தாழ்ந்துகோதறவழுத்தலுற்றான்.

வீரருள்வீரபோற்றிவிழுத்தகும்பெரியோய்போற்றி
காருறுகண்டத்தெந்தைகளித்திடும்வடிவாய்போற்றி

நேரினற்கடரோபோற்றிநிகழ்த்தருவலியாய்போற்றி
யேருறுமறுமுகங்கொளிறைவனேபோற்றிபோற்றி.

தேறுநல் லடியார் துன்பந் தீர்த்தருள் செய்வாய் போற்றி, யேறுடைப் பகவன் பெற்ற வெந்தையே போற்றி கங்கை, யாறுற வந்தாய் போற்றி யெழின் மயின் மலையாய் போற்றி, யாறுமா முகங்கொண் டுற்ற வண்ணலே போற்றி போற்றி. (சசு)

செம்மைநல் லருள்வாய்ந் துள்ள திருவுரு வுடையாய் போற்றி, நம்மிரு கண்களுடு நண்ணுமா மணியே போற்றி, யம்மைய ரிருவர் நீங்கா வருட்பெருங் கடலே போற்றி, யிம்மயின் மலையிற் றோன்று மெம்பிரான் போற்றி போற்றி. (சஎ)

என்னநின் றன்பி னேத்தி யிந்திரன் விடைபெற் றேகித், துன்னுமச் சுரர்கள் சூழத் தொன்மைசேர் துறக்கம் புக்கு, மின்னிடை வல்லார் கொங்கை மெல்லிதழ் முருந்து மூர, லன்னமென் னடையா ளின்பத் தமர்ந்துவந் திருந்தா னன்றே. (சஅ)

பொன்னடிப்பூசைசெய்தபுலவர்க்குப்பேறுநல்கி
மன்னியகயிலைநாதன்மகிமையுமனையவள்ள
னன்னிலைகொண்டுமேவுநகரினுக்கிளைசையாம்பேர்
துன்னியவழியுமெல்லைத்தொடர்புநற்குறியுமெய்யீர்.

வயிரவபுரியுமற்றைவிநாயகபுரியுமாட்சி
யுயருநன்மயூரவெற்புமுதித்ததுமுனைத்தாமிந்த
வியனுறுசரிதம்யார்க்குமிக்கதோர்தூய்மைநல்கும்
பயிலுறுபாவமெல்லாம்பாறவேசெய்யுமன்றே. ()

சித்தநற் றீர்த்த மாடித் திருக்கயி லாய நாதன்,
மெய்த்திரு வடிக டாழ்ந்து வியன்பரு வத்து மென்
று, மித்தகுஞ் சரிதங் கேட்டோர்க் கெய்திடுஞ் செல்
வ மென்ன, முத்திற வுலகு மேத்து முத்தமிழ் முனி
வன் சொற்றான். (ருக)

மயூரகிரிப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - எஉகூ.

கண்ணுவமுனிப்படலம்.

மொழிதரல் கேட்டு லோபா முத்திரை கொழுந
கும்பத், தழிதரு முனிவ நின்சீ ரொருமுக மதியி
னின்றும், பொழிதரு சரிதை யென்னும் புரிசுதைப்
பெயலே யாங்கள், கழிதரப் பருகி யின்னுங் கருத்
துறத் தெவிட்டி லேமால். (க)

பருகிய வேண்டுங் காதல் பற்றியுள் ளேவு மாற்ற,
லொரு பெருங் கயிலைநாத னுயர்தரு மகிமை யின்னு,
மருளுதி யென்று தாயோ ரஞ்சலித் தறைத லோடு,
மிருடிகண் முதல்வன் கேட்டே யின்னண மருளிச்
செய்வான். (உ)

வேதநன்குணர்ந்தமெய்யீர் வியன்கயிலாயநாத
ேனுதருமகிமைகேட்கவுளத்திடைமுயலலுற்றீ
ராதலினீரோபேற்றுறைப்டைந்துள்ளீரிளைசைப்பேருக்
கேதுமற்றொன்றுமுண்டா லியம்புதுமதுவுங்கேண்மின்

வேறு.

மங்கை யுடைய பெருமானை மனத்து ணிறுவி மங்குனிகர், செங்கை யுடைய பகீரதமன் செய்த லரிய தவஞ்செய்யக், கொங்கை யுடைய கொன்றை மலர்க் குழகன் புவியிற் செலவுய்த்த, கங்கை யுடைய கரை யின்றொரு காலமுறைந்தா னன்ன வன்றன். (ச)

பெருமை திகழுங் கண்ணுவப்பேர் பெற்றே னோதிப் புருகுற்சற், கருமை திகழு மொருமைந்த னமையுந் திரிடு தச்சியுவுக், கொருமை திகழும் பின்றுனோன் யோக வலிமை யுடல்கொண்டோ, னிருமை திகழ்ங் கருமமலை யாவு மொழுகும் வன்மையுளான்.()

விதியி னெவரும் போற்றவரு மேலாந் தரும நிலையுடையோன், முதலும் வழியுஞ் சார்புமெனு மூந் நூன் முழுது முணர்ந்துடையோன், றுதிகொள் வேத சிரங்களிடைத் தொடரும் பொருள்க டேர்ந்துடையோன்; றதையுஞ் சடைமண் டலமாதித் தவஞ்செய் கோலச் சால்புடையோன். (சு)

சொல்லா வியலு மியைந்தாட னியலு மறனுக் கேற்றநிலை, நில்லா வியலு நியதியினு ணிகரி னிறைகொள் பரானந்தை, வெல்லா வியலிற் றுணைவியொடு மேவியனைய மாதவர்கோன், பொல்லா வியலிற் புரை போக்கும் பொருவில் கொடிய தவம்புரிவான். (எ)

உணவை யொருவி யைம்பெறிவா யுதிக்கும் புலனை யடக்கிவர, மணவு மோன முத்திரையோ டான்

ற சின்முத் திரையையுங்கொண், டிணையு மூக்கு நு தியின்னிடை யிரண்டு விழியு முறக்கிடத்தித், தணிவி ன் மேலைக் கிளைழவளி தடுத்து மனமாம் வாரிசமேல்.

சோதி யாகி யற்புதமாய்த் தூய பரம வெளியாகி, யோதி யாகி யானந்த வுருவா யுயிருக் குயிராகிப், பேதி யாத பரம்பொருளாய்ப் பிறங்கும் பரம சிவந் தன்னைப், பாதி யாது பதித்துநெடும் பருவ மொழி யாத் தவத்திருந்தான். (கூ)

இந்த வாறு கந்தினைசை வின்றி யிருப்பக் கடமை முத, லந்த மில்லா விலர்குகள்வந் தணுகி மெய்யை யுரைத்திடுமாற், பந்த வேணிக் கற்றைமிசைப் பல வாம் பறவை வெருவின்றி, முந்த வமைத்துக் கூண் டீனு முட்டை யோடு முவந்துறைந்த. (க௦)

யோக நாடுங் கண்ணுவனு ரோங்கும் வளியை யிரு வழியிற், போக நாடி நடத்தாது புகரி லடுவா நாடி யினு, ளேக நாடித் தடுத்தூக்க வெழிலிற் றலையி னழு ரேன்றி, நாக நாடு விரைந்தணுகி நாகர் குழுவை வ ருத்தியதே. (கக)

வருந்த லோடும் வானூரு மன்ன னுய மகவேந்த, னுருத்த தவத்தி னழற்கிளர்ச்சி யூற்ற நோக்கி யுள மாழ்கிப், பெருத்த மகிமைக் கண்ணுவனர் பேணுந் தவத்திற் கிடையூறு, பொருத்த மதித்துப் பலவாறு பொள்ளென் றினைய துணிகின்றான். (க௨)

முனிவன் படிவத் தமரிருக்கை முன்னம் வாளொன் றுறச்செய்து, பனவன் வடிவ மொன்றுமவற் படுக்க விரைந்து படர்கின்று, சினவும் வேங்கை வடிவொன்றுந் திறத்தி னிரண்டுங் கடிதெய்தி, யுனவு மரிய மாயையினு லுற்றே யாங்க ணியன்றிடுவன். ()

பார்ப்பா னவனைப் படுக்கவரல் பார்த்தும் வேங்கை தனைக்கொல்லக், கூர்ப்பா னலனு யம்முனிவன் கொன்னே யிருப்ப னதுபோழ்தின், வேர்ப்பா னவனை வெம்புலியால் விளிவித் துறினவ் வருபழியா, ஞுர்ப்பா னவனு நலிந்துதவ மகல்வா னமது நசை முற்றும். (கச)

அன்றே னமது பதநதனனை யரிய தவஞ்செய் மாதவர்கோ, னன்றே பெறுவ னமதுயர்வு நலியு மீது திண்ணமதா, மென்றே யுளத்திற் றுணிந்தவன்முனிலங்கு மொருவா ளுறச்செய்தே, யொன்றேய் பனவன் புலியுமென வுயரு மாயை கொடுவருமால். (கரு)

பம்பு மொளிகொள் பூதியணுய்ப் பரவு மக்க மாலையணுய்ச், சம்பு சிவழா தேவவெனச் சாற்று மொலியு முடையவஞய்க், கம்ப மடைந்து நரைமிக்கே கனையி றிஞையாற் றேல்சுருங்கி, வெம்பொ னனைய பற்கழன்று விழிகண் மயங்கு முருவினனாய். (கசு)

தளர்ந்து தளர்ந்து தள்ளாடித் தகையுந் தாள்களுடையவனாய்க், கிளர்ந்து புலியின் றொடர்வதையோ கிடைத்தே னின்னைப் புகலாக, வளர்ந்த கருணை மா

தவத்தோய் வலிந்து காத்தி காத்தியென, வுளர்ந்த மனமோ டுரைத்தணுகி யுற்றான் மாய மறையோனே.

காயு மழல்போற் றறுகண்ணார் கண்க ளிரண்டும் பொறிகாலப், பேயு மருளு முருமிடியிற் பேழ்வாய் நின்றுங் குமுறலெழச், சேயு ளடிசேர் வள்ளுகிர்கள் செறியும் படையிற் கூர்ந்தொளிரப், பாயு மாய வுழு வைகிழுப் பார்ப்பான் றன்னைத் தொடர்ந்தன்றே. ()

மறையோன் சரணம் புகுந்ததுவும் வயமாக் கொல்ல வந்ததுவு, முறையோ வுற்ற வொருவாண்முன் னுற்ற வாறும் பார்த்தறவோர்க் கிறையோன் வேங்கை தொடருமிவ னெம்மை வந்து புகலடைந்தான், குறையோ தாத புலிக்கொலையுங் கொடிதென் றுன்னி நின்றனனே. (கசு)

நின்ற காலை பொய்ம்மறையோ னோர்ந்து நின்று கைவிதிர்த்தே, யொன்று முயிர்ப்பு மிக்கவனு யுணர்த்து கின்றா னருணிதியே, யின்று நின்னைச் சரண்புக்கே னென்னை யுயிர்தந் தளிப்பதற்கு, மன்ற வலிய புலிதனையிவ் வாளி னாலே வதைத்தருடி. (உ0)

இந்த வகையி னுயிர்தந்தே யென்னை யளிக்கி னற னுண்டா, மந்த வகையின் வறிதுறுத லாகா தின்னே யக்கோடி, யெந்த வகையு முயிர்க்கோற லேன மெனினு மெனைப்புரக்கு, முந்த வகையிற் பாவமிலை யுண்மை யீதென் றுரைத்தனனால். (உக)

விருத்த னிசைக்கு மொழியெல்லா மேலோன் கேட்டு வறிதுற்ரு, னுருத்து வந்த குயவரியு மோடி வந்த தவற்காதத், திருந்த முனிவன் புலைநோக்கிச் சிறந்த விந்த வந்தணனைப், பெருத்த பாவங் கோற லினிப் பெட்கா திவனை விடுகென்ருன். • (௨௨)

என்ற மொழியைக் கேட்டவரி யேறு நகையா லி வையுரைக்கும், தின்றி யாகவிவன் கிடைத்தான் றெ ய்வத் தாறே யந்தணனே, யன்றி யெவனே யாயினு மென் னவனைக் கொல்லிற் பெரும்பாவ, மொன்று மென்ருய் முனிவவஃ துன்மை நூலின் கருத்தன் ருல். (௨௩)

பெரியா யுயிரின் கொலையேதும் பெருக்கும் பாவ நினக்கென்று, மரியா மறஞ்செ யெனக்கென்று மது வே யறமா மறிகவெனப், பரியா மனமோ டிவையு ரைத்துப் பாணி யாது தொடர்ந்துபுயல், சொரியா நிற்கு மடங்கலெனுந் துழனி யோடும் பற்றியதே. ()

அறவேனா யறவோய் காத்தருளென் றாற்றுங் கரவி ன் மறையோனைத், • துறவோர் தலைவன் கொல்லலெ னத் தொடர்ந்து பலகாற் கூறியுளம், பிறவோர் செ யலு மறியாது பேதுற் றிருப்ப வீர்த்தோடிப், புற வோ ரிடையின் விரைந்துகொடு போந்த தந்த வரிப் புலியே. (௨.௫)

கண்டா னதனைக் • கண்ணுவப்பேர்க் காட்சிமுனி வன் கருத்தி னிடைக், கொண்டா னவலம் பெரிது

முறக் கோதி லமிழ்த நெடுங்கால, முண்டான் கடு வை 'யுண்டெனவே யுயங்கி மயங்கி யீதென்னே, ம ண்டா ளிகழ வந்ததென ருகுத்து மேலு மிலைமதி ப்பான். (உசா)

புகலா மயபா புகுந்தோனைப் புலிதான கொல்ல விட்டமையாற், றெருகலா நெடும்போ தழுந்த் தவத் தொன்மை தன்னுன் மருவுற்றே, யகலா திருந்த பய னெல்லா மகன்று போயிற் றென்செய்கே, னிகலா லுயிரைச் செருக்கைபழூ தென்று நூலைக் கடைப்பி டித்தேன். (உஎ)

சரணம் புகுந்தோன் றனைவிடற்க சார்ந்த வவனை த் தாங்கும்வழி, மரணம் புகினு மருலென்ன வகுக் கு நூலின் வாக்கினுக்கோர், முரணும் புகவே முடிந் தமையாண் முந்து மிந்தத் தீவினையான், விரணம் பு கவே விளைந்துளது விளம்பி னினியிங் கென்றுகும்.

எங்கே யெங்கே யெதுவெதுவந் தெய்த வேண்டு மது வதுவந், தங்கே யங்கே நேர்ந்தெய்து மையமில் லை யென் மாட்டுத், தங்கே னத்த பெருந்தீங்கைத் தவிர்க்கத் தூரஞ் செல்வனெனு, வெங்கே தத்து ம னத்துன்னி வெறுத்தே யுயிரைத் துணிந்தெழுந்து.

தந்தை தன்னை முன்னவனைத் தாழ்ந்து தன்னோர் பன்னியொடுஞ், சிந்தை சேர்ந்த துயரினெடுஞ் செ ல்ல முயன்று கங்கைமுத, லெந்தை மகிழுந் தீர்த்தங்க

வீறில் காசி முதற்பதிக, ணிந்தை யகலு மையாண்டு
நிறையும் வரையுஞ் சஞ்சரித்து. (௩௦)

நிகழுந் தவள நாவலின்கீழ் நீர்மேன் முளைத்த
பெருமானார், • புகழும் படியே யடியவர்க்குப் புகலா
கிருந்து நல்லருளிற், றிகழு மானைக் காவதனிற் றெ
ய்வ வியத்தால் வந்தடைந்தா, ளிகழும் படிசே ரின்
னவினை யெய்தி மாழ்கு மிருந்தவனே. (௩௧)

வேறு.

அன்னபதி முன்னுளதா யன்னமொடு காரண்டந்,
துன்னுவதாய்ப் புண்ணியமாய்த் தூய்மைமிகு நீரு
டைத்தாய், மன்னுமிரு கரைமாலுஞ் சங்கரனும் வய
ங்குவதாய்க், கன்னிமதி கழிமதியிற் கங்கைமுத னதி
க்குயர்வாய். (௩௨)

நடுத்திகழு மரங்கத்து நாயகனை மாலிகைபோற்,
றொடுத்துலவுந் தொடர்பினதாய்த் தொன்மையதாய்
ச் சையகிரி, யிடத்துதித்துப் பெருகுவதா யீறில்கட
ல் சேருவதாய்த், திடத்தமரர் கணமெல்லாஞ் சே
வைசெயுங் காவிரியை. (௩௩)

கண்டுபெரு மகிழ்வோடுங் கலந்தாடித் தனவயமா
ய், பண்டுதொடர் பாவமெலாம் பாவித்து நாவலடி,
கொண்டருளு மகிலாண்ட நாயகிதன் கோமானைத்
தொண்டமையத் தொழுதேத்தித் தொன்னிகழ்வு
சொலினின்றான். (௩௪)

அங்கதற்குத் தென்றிசைவா யடைந்துதிரு முடிமீ
து, செங்கதிரை யணிந்தருளித் திகழ்சுகந்த குந்த
ளையா, மங்கையொடும் வீற்றிருந்து மனைத்தாயு மாகி
யருள், சங்கரனைப் பணிந்தேத்தித் தனதுளத்தி லி
வையுன்னும். (௩௫)

இப்பதிக்குத்தென்றிசைபுக்கிராமேசருமசனருபெரு
விப்பிரகத்தியைநீக்கும்வியன்புனிதவிற்கோடித்
துப்புலவும் * புட்கரத்துஞ்சுரர்முனிவர்பிறரோத்து
மொப்பரியசேதுவினுமுழுவலொடும்படிந்தாடி. ()

பத்துநிரைச் சென்னியனைப் படுத்தபழி பாற்றிட்
முன், மெய்த்திருமால் பதிட்டைசெயு மேன்மைதி
கழ் பரம்பொருளா, முத்தமனைத் தரிசித்தே யுயர்
தேவர் கந்தருவர், சித்தரொடு கின்னரர்கள் சிறப்பு
டைய திருமுனிவர். (௩௭)

அனைவோரும்போற்றுவதாயளவிலருந்தீர்த்தங்கள்
வனைகந்தமாதனமாம்வரையினைக்கண்டிருந்தீர்த்த
மெனையவுமேபார்த்தாடியிருமைநலம்பெறுவனெனு
மனமுறமற்றிவையுன்னிவழிக்கொண்டுவந்திடுவான்.

தென்றிசைசார் வழிச்செல்லுந் திருமுனிவன் கோ
கன்ன, மென்றுபுகழ் திருப்பதிசென் றேற்றுபெரு
நாயகியைத், தன்றலைமை யறியாத தன்மையனைக்
கண்டிறைஞ்சி, மென்றழைய பொழில்சூழுமெய்ய
மெனும் வெற்படைந்தான். (௩௯)

* புட்கரம்—தீர்த்தம்.

சத்தியபுட கரிணியெனுந் தடத்தாடிச் சத்திய
வெற், புத்தமனைத் தரிசனஞ்செய் துறவணங்கிப்
போற்றெடுத்தே, யத்திசைக்குத் தென்றிசையி ன
டைந்துபுரா தனகான, மெய்த்தலத்து வந்தனன்
மேலாய புண்ணியத்தால். (௪0)

கண்ணுவமுனிப்படல முற்றிற்று.

ஆட திருவிருத்தம் - எகூகூ

௰ கண்ணுவமுனிபேறுபெற்றபடலம்.

சொல்லரியவியப்பின்தாய்த்தொன்மைமிகுமேன்மை
புல்லரியவக்கானம்புகுந்தமுனியுறநோக்கி [யதாய்ப்
பொல்லரியவுளத்தெளிவுற்றொப்பிலிறும்பூதடைந்து
வெல்லரியகற்பினைவிழித்தின்னவிளம்புறுவான். ()

நங்காயிவ்வனத்தினிடைநண்ணியதோர்மாத்திரத்தே
யெங்காயத்தெழுந்தமிகுமிளையெல்லாமிகந்துற்ற
வங்காயுந்தகைசேர்ந்தவகந்தெளிவுபெற்றுளதா
லுங்காயகாரணமென்னுணர்கிலனெலனக்கூறி. (உ)

சிந்தித்துநின்றிடலுஞ்சிவபெருமான்றீஞ்சுவைமிக்
கந்தித்தபேரொலிகொளாகாயவாணியினாற்
சந்தித்தகண்ணுவப்பேர்த்தவத்தனுளமகிழ்பூபயப
பந்தித்தமலமகற்றும்பரமனிவையருள்செய்வான். ()

வேறு.

கண்ணுவச்செல்வநீகருத்துட்கோடியிப்
''ண்ணியவனத்திடைப்புகுந்தமாத்திரத்

துண்ணிகம்பவமெலாமொழிந்தபின்னிணிப்
பண்ணுவதினைத்தெனப்பணித்துங்கேட்டியால். (ச)

இவ்வனத்தணித்துறவிலிங்கமொன்றுநற்
றிவ்வியசுயம்புவாய்த்தேசினோங்கிடு
மவ்வொருகுறிக்குமுன்னனகசித்தநீர்
வெவ்வியபவநலம்விளிவித்தீந்துறும். (ரு)

அத்தகுதடத்துநீராடிநங்குறி
மெய்த்திருப்பூசனைவிதியினாற்றியே
பத்தியிற்றரிசனம்பண்ணும்பான்மையாற்
சுத்தனையாகுதிதுகளில்சிந்தையோய். (சா)

என்னவேவிண்ணிடையெழுந்தவாக்கினைத்
தன்னிருசெவிகளுந்தளிர்ப்பகேட்டவன்
றுன்னிடவிழியினீர்பொடிப்புத்தோன்றிட
வுன்னருமகிழ்வெனுமுததியாழ்ந்துளான். (எ)

ஆழ்ந்திடுமருந்தவனவ்விமீதுற
வீழ்ந்தனனிறையருள்விண்ணின்வாக்கினைத்
தாழ்ந்தனன்பன்முறைசென்றுசான்றவர்
வாழ்ந்திடுமிளைசைமாநகரம்வந்தனன். (அ)

வந்திடுமருந்தவயோகமாதவ
னந்தமிலற்புதமாயவப்பதி
தந்திடுஞ்சீரினைச்சார்ந்துநோக்கிந
ளிந்திரனியற்றியவேமக்கோயின்முன். (கூ)

சுத்தமதாகியேதுலங்கிவைகிய
சித்தமாதடத்தினைச்சேர்ந்துசித்தமேன்

மெய்த்தெளிவெய்தியேவிளங்குநூன்முறை
யொத்திடும்பன்னியோடொருங்குதோய்ந்தனன். ()

மதாயந்தபின்கனைபுகுந்திரண்டுதூசுடுத்
தாய்ந்தனன் *மறைமுடிவங்கியாதியா
வேய்ந்திடுபொருளெலாம்பற்பமேயென
வாய்ந்திடும்பூதியையவயங்கப்பூசியே. (கக)

பெருத்திடும்புங்கவர்பீழைகண்டிறை
திருத்திகழ்முக்கணுமலர்த்திச்சேர்வுற
விருத்தியொண்ணீர்வரவிளைந்தமேன்மைகொ
ளுருத்திரமணிவடமுடலிற்றுங்கியே. (கஉ)

காலையிற்புரிகடன்கழித்துநண்பகல்
வேலையிற்செயன்முடித்துறுவர்விண்ணவர்
கோலநற்பிதிர்கணங்கொள்ளவெட்குசை
சாலவக்கதமொடுதெருப்பித்தானரோ. (கங)

பின்பவனெழுந்துபோய்ப்பெயர்ந்துகானிடை
மின்பயில்கோமளவில்லுவங்களைப்
பொன்பயில்பல்வகைப்பூக்கடங்களைக்
கொன்பயில்பழங்களைக்கொணர்ந்துசார்ந்தனன். ()

ஐந்தமுதானுறுமைந்துசெம்மதுச்
சந்தனநறும்புகைதழல்கொடீபிகை
முந்துறுமமுதமேமுதலவான்பொரு
ளந்தமில்பூசனைக்கழைத்துக்கொண்டபின். (கரு)

---

* மறைமுடிவு — சாபாலோபநிடதம்.

வந்தனைபுரிந்திடவந்துமெய்மொழி
சிந்தனைகடந்திடுஞ்சிவன்மெய்யைந்தினுட்
டந்தனைவேருமுப்தக்கச்செய்மெய்யதாய்ப்
பந்தனையகற்றுநல்லிலிங்கப்பாற்செலா. (கசு)

பாதலமுளைத்துமேற்படர்ந்துபாயநீர்ப்
பூதலமீதுறப்பொலிந்துதோன்றிநற்
சீதலவடிவினிற்றிகழுஞ்சோதியைக்
காதலங்கிறைகொளக்கண்டுவந்துபின். (கஎ)

நற்றிருமஞ்சனநலங்கொடாட்டியே
பொற்றுகில்கோட்டிமென்போதுசூட்டியே
கற்றைகொணறும்புகைதீபங்காட்டியே
யற்றமிறிருவமுதன்பினூட்டியே. (கஅ)

பின்னுறவியற்றிடும்பெற்றிமுற்றியே
முன்னவனருளியமுதன்மையாகம
நன்னெறியெண்ணிருநலங்கொள்பூசனை
யின்னணமியற்றினனியாவுந்தேர்ந்துளான். (கசு)

பேசியவண்ணமேபிரமனேமுதன்
மாசறுகீடமேவனையுயிர்க்கெலா-
மாசறுமம்மையாயருளுந்தேவியைப்
பூசனைபுரிந்தனன்பொருவிலன்பினேன். (உo)

சந்நிதியிருந்துபின்னகிலநாயகன்
மன்னுருமனுவினையயுதம்வாழ்வரு
ளன்னைதன்மனுவினையயுதஞ்சால்புறப்
பன்னியேசெபித்தனன்பசுத்துவங்கெட. (உக)

நமகமாம்பெயரினைநாட்டுருத்திர
மெமகமுள்பொருள்பெறவேத்துத்தக்கதோர்
சமகமொண்புருடநற்சூத்தஞ்சம்புபாற்
கமகமாமேனையகவின்கொண்மந்திரம். (உஉ)

செபித்திடுநியமமுட்கொண்டுதீவிய
கபித்தமதுகந்திடுங்கடவுள்வானுளோர்
தபித்தலின்றாகவேதந்ததற்பரன்
* கெபித்திறநீத்தருள்பதிகள்கிட்டியே. (உங)

அனையவர்திருப்பெயர்த்தீர்த்தமாடியப்
புனையருளாளனைப்பூசையாற்றியெத்
தினமுமிவ்வகைபுரிசெயலனுய்ப்பழந்
தனையுணுவருடமொன்றினைசைதங்கினன். (உச)

இன்னணமின்னியவிளைசைமாதலந்
துன்னியங்கிருந்தவன்றேகைதன்னொடும்
பன்னிருமதியமும்பரவியேற்றினீன்
மன்னுறவருவதோர்வைகறன்னிடை. (உரு)

வேலையெல்லெழுமுனமெழுந்துவீசியின்
மாலைகொள்சித்தநீர்படிந்துமாணுறும்
காலைமுற்கடன்களைக்கழித்துக்கண்களாற்
சேலைநேர்சிவைக்கிறைகோயில்சேர்ந்திடா. (உசு)

மூவரின்முதன்மைசேர்முக்கண்மூர்த்தியைத்
தேவியாஞ்செல்வியைச்சிறப்பவென்றும்போ
லோவறப்பூசைசெய்துயர்ந்தசந்நிதி
மேவியைந்தெழுத்தினைச்செபித்துமேயினன். (உஎ)

---

* கெபி—மலம்.

வேறு.

அந்தவேலையினருளினுக்குறையுளாமம்மை
முந்துசேர்முனிக்கருளவேதிருவுளமுன்னிச்
சந்தமார்நகிலிரதிகளெண்ணிலார்சார்ந்து
வந்துதோன்றியதோற்றமார்வடிவுகண்கவர. (உ௯)

செம்பொன்மாமணிப்பணிகண்மெய்ப்திகழ்ந்தொளி
வம்புராசிநேர்கருணைகூர்திருமுகமலர [கால
விம்பநின்றுமேவெளிவராவியந்திடுமுனிகை
பைம்பொன்வண்டணிகாந்தளந்திருக்கரம்பற்றி. ()

சிவபரஞ்சுடர்திருமுனரருட்பெருஞ்செல்வி
யுவமையில்பெருநாயகியுயிர்க்குயிராகிப்
பவமகற்றுவாள்வேண்டுவாளுல்கருள்பகவ
வவமிலின்னவற்சோதனைபுரிந்திடலழகோ. (௩0)

கல்லியாணநன்கருணாககாரணசிவபோ
கல்லியாணநன்கருணாககண்ணுவன்றனக்குக்
கல்லியாணநன்கருணாககண்ணுவனினது
கல்லியாணநன்கருளடிக்கன்புளான்காத்தி. (௩௧)

என்றுநம்பெருமாட்டியங்கியம்பியவாய்மை [தே
சென்றுதன்றிருச்செவியிடைச்சேர்ந்ததோர்பொழு
வன்றுயர்க்கொடும்பிறவிநின்றெடுத்தெமைவாழ்விற்
றுன்றுவித்தருளருட்கடற்றோன்றியேயருளும். (௩௨)

கங்கைவான்பிறைகலந்திடுந்திருச்சடைக்கவினு
மெங்கும்பூசியபுண்ணியநீற்றினெழிலு
மங்கண்மாமணியணிகளாலணிந்திடுமழகும்
பொங்குநன்மணிப்புயங்கமாம்பூணநூற்பொலிவும். ()

புலியின்றோலுடைவயக்கமுங்கோடியெண்பொருந்து
மலரிநேர்தருகாந்தியுமளவிலாவனங்கர்
மலியுங்காமருமுடையதோர்வடிவொடுந்தோன்றித்
திலகவாணுதறிருக்கரம்பற்றிமுன்றிகழ்ந்தான். (ஙசா)

திகழ்ந்தகாலையிற்கண்டனன்கண்ணுவன்றெளிகண்
ணிகழ்ந்திடும்பயனடைந்தனனீடுயர்க்கிடனா
யிகழ்ந்தபாசமதிகந்தனனிகப்பறமகிழ்ந்தான் [டோ.
புகழ்ந்துசொல்வதென்னினியொருபுனையவற்குண்

கணையிலாப்பெருமகிழ்வெனுங்கடலினின்றெழுந்து
டணையினற்றிருக்கரம்படுபாணிமேற்கூப்பி
யுணைகடள்ளுறவென்பெலாநெக்குநெக்குருகப்
புணையிலாததோரன்பொடும்போற்றுதலுற்றான். ()

வேறு.

பரவரிய நித்தியமாய்ப் பராபரமாய் நான்மறை கொள் பயன தாகிப், பிரிவரிய சுசிப்பொருளாய்ப் பரம்பொருளாய்ப் பிரமமாகித், தரவரிய வுலகினுக்குக் கருத்தாவாய்ப் பரிப்பவனாய்த் தந்தை யாய, பொருவரிய சித்தவன நாயகனின் றிருவடிகள் போற்றி போற்றி. (ஙஎ)

உயிரொலைக்குங் கரியாகி யுண்மைபெறு முயர்வினுக்கு முயர்வா யின்பச், சயமருவுந் தனிமுத்தி தருபவனா யளவாத சத்தி மானா, யயிரகலு மாகமங்கள் புகழ்கின்ற பாதுகைய னாகி நின்ற, புயறவழுஞ் சித்தவன நாயகனின் றிருவடிகள் போற்றி போற்றி. (ஙஅ)

ஞேயமுமாய் ஞானமுமாய் ஞாதிருவாய் நிரஞ்சன மாய் நீர சத்தே, மேயவிதி நாடரிய வொளியாகி வி ளையாடல் விளைக்குங் கோனாய்த், தூயசனந் தனரா தித் துறவுடையோர் தொழுமின்பச் சோதி யாகிப், போயநிகர்ச் சித்தவன நாயகனின் றிருவடிகள் போற் றி போற்றி. (நகூ)

காலமெலாங் கடந்தபொரு ளாய்ப்புரங்க ளூற்ற வர்க்குக் கால னாகிச், சாலமுனி யந்தகனுக் கந்தகனு ய்க் கலைமிலையுந் தலைவ னாகிச், சீலமுறு மங்கலநல் லியல்பினனாய்க் கதியருளுஞ் செல்வ னாகிப், போலு தலில் சித்தவன நாயகனின் றிருவடிகள் போற்றி போற்றி. (சo)

உரைகடந்த சுயம்பாகி யுணர்பெரியர் வழிபடுத லுற்ற தேவாய், வரமெல்லாம் வேண்டுவார் வேண்டு முறை யீந்தருளும் வள்ள லாகித், தெரிசத்தி மயமா கி யாமயத்தைத் தீர்த்தருளுந் தீர்த்த னாகிப், புரைய கற்றுஞ் சித்தவன நாயகனின் றிருவடிகள் போற்றி போற்றி. (சக)

எவளையுய ரொருத்தியெனப் பகுதியெனப் புரா ணியென்ன வீறில் வித்தை, விவிதமென விசுத்தையெ ன விபுதர்தொழும் பதத்தியென வீறு மூன்று, நவை மலங்கள் கடந்தசிவ பரஞ்சுடருக் குருவமென நவில் வார் நல்லோ, ரவளாய பரமபத நிலையுடைய பராப ரையின் னடிகள் போற்றி. (சஉ)

உண்மையறி வானந்த வுருவினளாய்ப் பரவித்தை யுணருந் தானுய்த், தண்மையரு ணிருமலையாய்ப் பரமான்ம வடிவினளாய்ச் சரா சரங்கொ, ளெண்மையகல் சகமனைத்து மிடையீடின் ருகியெவ ணிலங்கி நின்று, ளண்மையரு மவளாய வளவில்சுக மெய்யாய் நின்னடிகள் போற்றி. (சங)

எண்ணரிய கற்பமெலா மெவணிருளின் பாசமுறு மெல்லா வைப்பும், பண்ணிடுதல் பரித்திடுதல் படுத்திடுத லிவைமூன்றும் பயின்று வேருய், வண்ணமிகும் பரமசிவ னருள்வடிவே தனக்குரிய வடிவ மாகி, யண்ணலொளி யாய்நின்று ளவளாய பரசிவைநின் னடிகள் போற்றி. (சச)

எவளுடைய விதியாகி யிருமைபெறு முலகமெலா மீண்ட லுற்ற, வெவளுடைய வெல்லையக லருளதனு லவையாவு மிலங்க லுற்ற, வெவ்வளுடைய வாதாரந் தலைக்கொண்டே யவைமுழுது மிருக்க லுற்ற, வவளாகி யருள்பரம சிவையாய தேவிநின தடிகள் போற்றி. (சரு)

பெருமையளும் பேரிறைமை பெற்றவளு மனைத்துந் தம்வலி பெற்றி யாளு, மிருமையுறு முயிர்வகையைப் புரப்பவளு மன்னையுமா யியைந்து நின்ற, வொருமையுறு மெவடனக்கு முனிவரர்கள் வந்தனைக ளுறுநின்று வாரோ, வருமையுறு மவளாகும் பரசிவையாந் தேவிநின தடிகள் போற்றி. (சசா)

என்றுமுறு மின்பநிலை யுடையவளே யடியவருக்
கின்ப நல்கு, மொன்றருளை யுடையவளே கயிலாய
நாதனெனு முயிர்க ணாதன்! றன்றுணைவி யானவளே
யிறந்தபொருட் பேறளிக்குந் தயாவி னாளே, வன்
றகைய மனத்தடியேற் கமைந்தவரு ளோநின்னை வண
ங்கா நின்றேன். (௪௭)

இந்தவகை கண்ணுவனு மிருந் தகையோன் பன்னி
யொடு மிறைவி யோடு, முந்துறுநல் லிறையவனை
முன்னின்று போற்றெடுத்து முதிர்ந்த வன்பு, சிந்தை
நிறைந் திருகண்ணின் வழிவதென வானந்தத் தெண்
ணீர் வார, வந்தமிலா மகிழ்வினொடு மாடுற்று நின்ற
னனா லந்த வேலை. (௪௮)

வேறு.

வேதநாயகன்வேதியர்நாயகன்
மாதினாயகன்மாதவர்நாயக
னாதிநாயகனாருயிர்நாயக
னேதுவானவனுள்ளமுவந்திட. (௪௯)

கண்ணுவப்பெயர்க்காதலநின்னுளத்
துண்ணிறைந்திடுமன்பினதுண்மையை
யெண்ணிமாமகிழ்வெய்தினமாலினித்
திண்ணமஞ்சலைசெப்புதுங்கேட்டிநீ. (௫௦)

நற்றவச்செயனண்ணிநடாத்திநீ
யுற்றகாலையிலும்பர்தங்கோமகன்
பெற்றநாகம்பிழைத்திடுமென்றுளம்
பற்றியேநடுக்குற்றுப்பரிந்துபின். (௫௧)

பாயும்வேங்கையின்கோலமும்பார்ப்பனத்
தூயகோலமுங்கொண்டுதுறும்புலி
யாயவந்தணற்பற்றுதலாதியா
மாயையாவையும்வல்லையியற்றினான். (௫௨)

அறனெனப்படுகின்றவனைத்தினு
மறனிலாமையொன்றேசெறிமன்னுயிர்க்
குறுதியாயதுமற்றதற்கொத்தது
பெறுவதில்லைபிறிதொருநன்னெறி. (௫௩)

அந்தவண்ணமறிந்தனையாதலின்
முந்துவாளினுயிர்க்கொலைமுற்றிடா
திந்தநல்லறம்பேணினையின்னதால்
வந்ததொன்றிலைமாதவகுற்றமே. (௫௪)

ஏனவன்றன்னுயிர்பாற்றிடல்பொய்மையே
யெனினுங்கண்களிற்கண்டனையின்னல்கூர்
துணிவினுக்கதுதோற்றுவாயாதலின்
முனையும்பாவமதாகிமுடிந்ததால். (௫௫)

அத்திறப்பழிவன்மையழிந்ததா
லித்தலந்தனையெய்துதலானுமிச்
சித்ததீர்த்தந்திளைத்திடலானுநம்
மெய்த்திருக்குறிமெச்சிடலானுமே. (௫௬)

மங்கலந்தனைவாய்ப்பவடைதிநின்
பங்கமில்லுளம்பற்றியநல்வர
மிங்குவேண்டுதியென்னக்கலைதிகழ்
திங்களஞ்சடைத்தேவருள்செய்யவே. (௫௭)

கேட்டமாதவன்கேழிலில்லாளொடுஞ்
சேட்டிளந்திமிற்செங்கண்விடைப்பெரு
நாட்டமூன்றுடைநாயகன்முன்றலை
கோட்டியேதொழுதின்னனகூறுவான். (௫௮)

தேவதேவநினைத்தெரிசித்தலான்
மேவினேனிவண்மேவருமாண்பயன்
கூவிவேண்டுவதில்லையொர்கூறது
மோவினல்லருட்கோர்கடலொத்துளாய். (௫௯)

ஆயினும்முலகுக்குயரப்பனாய்த்
தாயினோடுந்தையுரிதற்பர
வேயுமாறுசில்லின்வரம்வேண்டினேன்
றேயுமாறுசுரந்தருள்செய்கவே. (௬௦)

மன்னுமங்கலமெற்குவழங்கிட
வன்னையாஞ்சிவைவேண்டலினன்னவ
ருன்னுநித்தகல்யாணியென்றோர்பெயர்
தன்னையெய்துகசங்கரநாயக. (௬௧)

இத்தலந்தனையெய்துறுமென்னிளை
யத்தநீங்கியகன்றதையாதலான்
மெய்த்திருப்பெயர்வீறுமிளைசைமா
பத்தனம்மெனப்பாடுகவெங்கணும். (௬௨)

முந்தைநாளின்முறைப்படிநித்தலும்
வெந்துயர்ப்பவம்போக்கிவினைப்பகை
சிந்திடப்புரிதிவ்வியகங்கையி
னந்தமில்லதொர்நானஞ்செய்துற்றனன். (௬௩)

அன்னகங்கையகன்கரைசார்ந்திட
முன்னுகாதலெழுகிலமுன்னவ
வின்னதோர்பொழுதேர்மிகுசேதுவி
னன்னர்யாத்திரைக்காகவேநண்ணினேன். (௬௪)

அங்குமெய்திட்டவார்வமெழுந்தில
தெங்கணுயதீர்த்தங்களேத்திடுங்
கங்கைதன்னைக்கரைபொருசேதுவைத்
தங்கவிவ்வழித்தந்தருள்செய்தியால். (௬௫)

இந்தமெய்வரமீந்திடினிங்கினிச்
சிந்தைவேறிலையென்றவன்செப்பலு
மந்திவரன்பிறையண்ணலவையெலாந்
தந்தன[illegible]ச்சாற்றியருளினான். (௬௬)

தேவதேவதனைபின்னுயர்சித்தமா
வாவிமேற்றிசைவந்துபொருந்துறக்
கூவிச்சேதுவைக்கூறருங்கங்கையை
யாவியாவுறவங்கணிருத்தினான். (௬௭)

ஓதுமன்னவையொண்கயமாகியே
மாதுயாகனருட்பெருவண்மையாற்
சேதுகங்கையெனப்படுதீர்த்தமாய்
மீதுசேர்வவெஞ்ஞான்றினுமேதையீர். (௬௮)

அன்னதீர்த்தமதனிடைநாளமே
தன்னைநேர்செபந்தானமிவையெலா
முன்னியாற்றிடினொன்றேயனந்தமா
நன்னர்தந்திடுநற்றவவேதியீர் (௬௯)

சேதுகங்கைவந்துற்றதிறத்தினைப்
போர்த்நோக்கிப்புகழ்ந்துமகிழ்ந்துபின்
வேதவேதியன்வேதவிதிப்படி
யோதசங்கற்பமுன்னுறமூழ்கினான். (எ0)

எண்ணருந்தட்மூழ்கியெழுந்திடுங்
கண்ணுவன்றனைக்கண்ணுதல்கண்ணுநீ இப்
பண்ணிறைந்தபயின்மறைவாயினு
லுண்ணிறைந்தவருளொடுமோதுறும். (எக)

அன்பகண்ணுவகேட்டியறைகுது
மின்பிறங்கிடைமெல்லியலாளொடும்
பொன்பயின்றவிப்புண்ணியவைப்புறு
மின்பமாதலத்தென்றுமமர்தியால். (எஉ)

பத்திமார்க்கம்பதிந்துணருள்ளொளி
மெத்துமெய்ம்மியலன்புருமேவியே
வைத்தவுண்மைதெரிந்துமகிழ்ந்துநன்
முத்தனுகிமுதத்தொடுவாழுதி. (எஙட)

ஒன்றையுற்றிடலுற்றிடவினைமைதா
னென்றிசைக்குமிரண்டினுமோர்படி
சென்றுசாருந்துவந்துவச்செல்லலை
யன்றியேயகத்தவ்வியமின்றியே. (எச)

ஆகம்பாவுமுயிர்க்குயிராம்பொரு
ளேகம்பாவுறுநாமெனவெண்ணியே
சோகம்பாவனைத்தொன்மையொடுந்தொடர்
மோகம்பாவுதலின்றிமுயலுதி. (எரு)

புண்ணியப்பதிபோற்றிநின்றோரறம்
பண்ணினன்னதுகோடியயன்றரும்
கண்ணில்பாவமுங்காட்டியவாறுபோ
லெண்ணுங்கோடிமடங்குறுமென்பவே. (எசு)

ஆதலின்வ[illegible]
மீது[illegible]பெறும்வெம்பவங்கோடியாப்
போதரும்மதுபொக்கமதாயினு
மோர்தரும்பிறப்புண்ணப்படுவதே. (எஎ)

இத்தவந்தனிலென்றுமிருந்துவான்
சித்ததீர்த்தமுஞ்சேதுநற்கங்கையு
மொத்துமூழ்கியுமையையுநம்மையும்
புத்திபண்ணிப்படுத்தியப்பாவமே. (எஅ)

இம்மையாள்வினையால்வருமின்பமும்
வெம்மைசார்தருதுன்பமுமேவுறீஇக்
கொம்மையைம்புலக்கொற்றமகன்றுயர்
செம்மையாநிறொலைவித்திருசெய்கையும். (எகூ)

பொத்துமும்மலப்பொய்யுடல்பொன்றுநா
ளுய்த்துநின்றிடுமொண்பொறியாதிய
தத்தமார்கரணங்களிற்றுமுற
வைத்துபாதிவயந்தனைநீங்கியே. (அ0)

எங்குமாகியியைந்தமெய்ப்போதமாந்
துங்கமேனிதொடர்ந்தனைத்திற்குநல்
லங்கரித்திறமாயழிவற்றுயர்
நங்கதிப்படுநன்னிலைநண்ணுதி. (அக)

பிரமன்மான்முதற்பேசருந்தேவரு
மருவிவாழ்ந்திடமாதவமற்றிரண்
டரியவின்பவகண்டவிருவினை
யுருகுமுள்ளூறத்தொப்பறவாழுதி (௮௨)

என்னவேயருளீந்துமகேசனு
நன்னிலைப்படுகைலைநன்னாயகன்
மன்னுநித்தியமங்கலைதன்னொடு
தன்னுருக்கரந்துற்றனன்றுனரோ. (௮௩)

நம்மையாளுடைநாயகனுயகி
தம்முருக்கரந்தெய்தலுந்தாபதன்
விம்மிதந்துயரன்புமிகுங்களி
செம்மையாளொடுஞ்சேர்ந்துநின்றுனரோ. (௮௪)

வேறு.

ஓதுமந்தவுயர்முனி
சேதுகங்கைசெறிகரை
மீதுபன்னம்வேய்ந்திடுங்
கோதில்சாலைகோலியே. (௮௫)

அங்குமேவியன்றுதொட்
டெங்கணாதனிணையடி
தங்குமன்பின்சால்பொடு
பொங்குநோன்புபூண்டரோ. (௮௬)

துணைகொள்வைகறேறுமவ்
வணைகொள்கங்கையாடியே
யிணைகொளாதவெழின்மறைப்
பணைகொள்கோயிற்பாலுறு. (௮௭)

மின்னுசோதிமெய்யனை
மன்னுநித்தமங்கலை
தன்னுயர்ந்ததலைவனை. (௮௮)

பூசைசெய்தபுண்ணியன்
மாசில்போற்றல்வலமுறல்
கூடிநின்றுகும்பிட
லாதியின்னவாற்றியே. (௮௯)

சுவைகளாறுதொடர்வுறு
மவிநிவேதமாக்கியே
சிவனதன்பர்சீருள
முவகைபொங்கவூட்டியே. (௯0)

தானுமுண்டுதகவொடு
மேனையாவுமெய்ச்சிவ
மேனியென்னவீறியங்
கூனநீங்கியுற்றனன். (௯௧)

காதலின்னகாதையைக்
கோதிலாதகுறுமுனி
தீதிலோர்கள்செவியுற
வோதிவேறொன்றோதுமே. (௯௨)

கண்ணுவமுனி பேறுபெற்றபடல முற்றிற்று.

ஆ- திருவிருத்தம் - ௮௯௧

\\ பூம்புகார்ப்படலம்.

திருந்தநி சயத்த தேவர் செவிக்குநல் லுணவா யுள்ள, திருந்தனிச் சிவன்பா லன்பை யீந்திடுந் தகைய தேற்றம், பொருந்துநல் வணிகர் நாம்பல் போக்கிய சரிதஞ் சொல்வா, மருந்தவ முனிவீர் நீவி ரக மொருப் படுத்துக் கேண்மின். (க)

பாவிரி திருவெண் காட்டுப் பதியினுக் கணித்தாத் தெய்வக், காவிரி கடலிற் சென்று கலந்திடு முகத்தே கான்கொள், பூவிரி பொழில்சூழ் கின்ற பூம்புகார் பொலிந்த தந்தத், தூவிரி நகரின் சால்பு சொற்றிடுந் தகைய தாமோ. (உ)

அருமக மறையோ ரெங்கு மாசுறி முறையோ ரெங்குந், திரவிய வணிக ரெங்குந் திரிபகல் களம ரெங்கும், பிரமமா ரறந்தா ரெங்கும் பெருகுமில் லறத்தா ரெங்கும், பரவருந் துறவோ ரெங்கும் பரவுமன் பதைக ளெங்கும். (ஙு)

மலைவிலா வுள்ளா ரெங்கு மலைவிலா வுள்ளா ரெங்கு, மிலைபயில் வேலா ரெங்கு மிலைபயில் வேலா ரெங்கு, மலைவரும் பொறியா ரெங்கு மலைவரும் பொறியா ரெங்குங், கலைமதி முகத்தா ரெங்குங் கலைமதி முகத்தா ரெங்கும். (ச)

நல்குவதானமெங்குநலந்தருவிதானமெங்கு
மல்குவமானமெங்குமலிகுவவிமானமெங்கும்

புல்குவஞானமெங்கும்பொலிவவிஞ்ஞானமெங்கும்
பல்குவகானமெங்கும்பலமலர்க்கானமெங்கும். (ரு)

வழங்குமெல் வாத மெங்கு மாணுநூல் வாத மெங்கு, முழங்குவ சங்க மெங்கு முனிவரர் சங்க மெங்கு, மொழுங்குறு விபணி யெங்கு மொருவுறு விபணி யெங்குஞ், செழுங்கவுட் கயங்க ளெங்குந் தெளிந்தநீர்க் கயங்க ளெங்கும். (சா)

கருதுகந் துகங்க ளெங்குங் கடுகுகந் துகங்க ளெங்கும், வருசயந் தனங்க ளெங்கும் வண்சயந் தனங்க ளெங்கும், திருநிகே தனங்க ளெங்குந் தெள்ளுநிகே தனங்க ளெங்கும், பரவுசந் தனங்க ளெங்கும் பழியில்சந் தனங்க ளெங்கும். (எ)

மன்மத னுடலெங்கு மாதர்த மாட லெங்கு, மென்மைசேர் சுகங்க ளெங்கு மேவரு சுகங்க ளெங்கும், பன்மைமங் கலங்க ளெங்கும் படருமங் கலங்க ளெங்கு, நன்மைசால் பூதி யெங்கு நவிலரும் பூதி யெங்கும். (அ)

விருந்துப சரிக்கு மோசை விழவினைப் புரியு மோசை, மருந்துறழ் கீத வோசை மந்திர வேத வோசை, யிருந்துபல் லியங்க ளோசை திரைக்கட லோசை தன்னை, யருந்திமே லெழுந்து கேள்விக் கருவிருந் தாக வோங்கும். (கூ)

சொன்னிகழ் பொய்யே வஞ்சந் துயர்தரு மழுக்கா றுதிக், கொன்னுறு குணங்க ளாய கோதினி லிய

ல்வோர் நாளுந், தன்னிடைப் புகாரோ யாய தன்மை யி னூலே போலு, மந்நகர் தனக்கு வாய்ப்ப வமைந் தது புகாரொன் றேர்பேர். (கo)

மலராய னாதி யாய வானவர் தமையு மெல்லா, வுல கையும் பெற்ற தொன்மை யொப்பிலா மருத வாணர், நிலவுறு மகன்மை யாக நின்றன ரடிமை கொண்ட, குலமிகு திருவெண் காடர் குலவிய பதியு மஃதே. (கக)

ஓதுபல்வளத்ததாகியுற்றவப்பதியின்கண்ணே
யேதமின்றிருந்துவாழ்தலியைந்திடுமரபுதம்முண்
மீதுசேர்மிகுதியாகிமேவியதியாதோவென்னிற்
றீதறுகுணத்தின்மிக்கதேசிகர்மரபாமன்றே. (கஉ)

அத்தகு சிறப்பி னோங்கு மரும்பெறன் மரபு வாய்ந்தோர், மெய்த்தன பதியோ வொன்பான் மேவிய நிதிக ளுள்ளான், வைத்திடு நிதிக ளெண்ணில் வகை யுளோம் யாங்க ளென்னச், சித்தமீ தூர நின்ற செருக்கொடும் வாழு கின்றோர். (கங)

சிவபெரு மானை மேலாத் தெளிந்தநல் லுள்ள முள்ளோர், சிவபெரு மானுக் கென்றுஞ் செய்வழி பாடு பூண்டோர், சிவபெரு மானுக் கன்பர் திருத்தொண்டு புரியு நீரார், சிவபெரு மானுக் கேற்ற சீரறஞ் சிறக்கச் செய்வோர். (கச)

கொடைபொறை யடக்கம் வாய்மை குறைவிலா விரக்க மாதி, வடுவறு குணங்கள் யாவும் வாழ்வதற்

குறையு ளானோர், படவரா வணியுஞ் சோதி பகர்ந்
தரு ளாத்த வாய்மைக், கிடநுரு வண்ணந் தங்கட்
கேற்றநல் லொழுக்க நின்றோர். (கரு)

சீரொடுமினையரன்னதிருநகர்மேவியாண்டு
பேரிசைபரவவாழ்வுற்றிருந்திடுங்காலத்தூழின்
வீரமதகஞற்றங்கண்மெய்யறம்விடுத்தார்தேரிற்
பேருறுத்தொல்லையூழிற்பெருவலியாவையுள்ள(கசா)

பொருளினை யாதி யான பொலிவினுக் கெல்லாந்
தானே, தெருளுறு மேது வாகிச் சிறந்தநல் லறத்
லைத் விட்டு, மருளுடல் வளர்த்த லாலே வறுமை
நோய் துயர முற்ற, வருளுய ரறத்தை முன்னு வறை
ந்தன ரிதனு லன்றே. (கஎ)

தனமெலா மிழந்தார் மல்லற் றுனிய மிழந்தார்
சீதப், புனல்வய லிழந்தார் கற்றுப் பொலிநிறை யிழ
ந்தார் புன்கட், டுனியினை யடைந்தார் கள்வர் தொட
ரவும் பெற்று ரீசன், பனிமலர்ப் பாதம் பற்றார் பழ
ங்கணுக் கிரைதோர் சான்றும். (கஅ)

மல்லன்மா வளங்க ளெல்லா மடிதலும் வருந்தி
மாழ்கி, யொல்லென வனைவோர் தாமு மோரிடத்
தொருங்கு கூடிப், புல்லுற வெங்கட் கிதென் பொரு
ந்திய தென்றே யாய்வா, ரல்லலென் பதனை முன்ன
ரறிந்திடா வணிக மாக்கள். (கசு)

ஐயகோ தனமும் பைங்கூ ழாக்கமுந் தொறுவு
மாண்ட, வுய்யுமா வாணி கப்பே றொழிந்தன யாது

யாது, செய்யினும் பயனென் றில்லை சிறிதுவீட் டுள
துஞ் சோரார், கையகப் படுத்துக் கொண்டார் கடிய
வித் துயர்க்கென் செய்வேம். (௨௰)

பசியினாற் சிறுவர் வாடிப் பரிவொடுந் தாயர்ப் பா
ர்த்து, மிசைமிசை யென்ன விம்மி வேண்டுவ ரினி
மே லிந்த, விசைநகர் கணப்போ தேனு மிருந்திட
லாகா தெந்தத், திசையிலே யெனினுஞ் சென்று தி
ரவியந் தேடி வாழ்வாம். (௨௧)

ஈதியாஞ்செய்தற்பாலதென்றிளங்கோக்கள்யாரு
மோதியேயுறுதிசெய்தியுற்றவப்பதியைநீங்கி
யாதுலர்க்கன்னையாகுமங்கணரருட்கணுக்கர்ற்
றீதகல்பத்திசேரச்சேணுயர்சையஞ்சேர்ந்தார். (௨௨)

சையமால் வரையிற் போந்த தகவினு ரந்த வெற்
பிற், பெய்யுறு நீத்த மான பெருமைசால் பொன்னி
தன்னின், மெய்யுற மூழ்கி யந்த வியனதிக் கரையி
னெங்குஞ், செய்யகேத் திரங்கள் சென்று சிவனருள்
சிரமேற் கொண்டே. (௨௩)

விரைந்துவந் துயர்மா தேவி மெய்த்திருப் பெய
ரா ளோடு, மிருந்தருள் சீகண் டேச னிணையடி தரி
சித் தேகித், திருந்திய கபிலை பூசை தெரிந்தருள் கபி
லை யம்மைக், கருந்துணை கபிலே சான னடிதரி சித்
துப் போற்றி. (௨௪)

சங்கமமுகத்திற்சார்ந்துசத்திதன்றவத்தால்வந்த
பங்கமில்பராசரப்பேர்படைத்திடுமுனிவன்பூசைக்

கங்குவந்தருளியாண்டேயாதிகேசவனேடுற்ற
துங்கவேதாம்பிகைக்குத்துணைவனேவழிபாடாற்றி. ()

கணணனும வசயன் ருனுங் கருதிமுன் னருச்சித் திட்ட, புண்ணிய வசல தீபப் புங்கவன் படிவம் போற்றித், திண்ணிய வாலி முன்னர்ச் செய்ததோர் பூசை கொண்டே, யண்ணிய வருளோ டுற்ற வகத்தியேச் சுரனை யேத்தி. (உகூ)

பேதமிலன்பனுனபிரகலாதனன்பூசித்த
வேதநாராயணப்பேர் விண்ணவன்றன்னை வாழ்த்தித்
தீதுருப்புகலுற்றோர்க்குத்திருவுளமிரங்காநின்ற
வோதுசீர்கேதமேவுமொருவனைப்பணிதல்செய்யா.

தொழுதகை யிராமன் போற்றுஞ் சோதிநா யக னைப் போற்றி வழுவிலாக் கதம்ப கான வள்ளலை வழுத்தி யன்பின், செழுமை கொள் வலையிற் சாருந் திருப்பிர யாணநாதன், பழவடி பணிந்து நீலிப் பழு வமார் பகவற் ருழ்ந்து. (உஅ)

அரங்கமா நகரம் வ ரு ண்ணலை யமுதத் தீம் பாற், றரங்கமா கடலை நேரும் தடவுவெண் மலையி லுள்ள, வரங்குலாம் புருட வேந்தை வான்பொரு ணல்கும் வண்மை, நெருங்குபுண் டரிகக் கண்ணர் நெடியனைப் பரவ லாற்றி. (உகூ)

அட்டரு வானைக் காவி லண்டங்க ளவைக்கு மன்னை, பெட்டுறுஞ் சம்பு கேசப் பெரும்பிரான் றன்னை வாழ்த்தி, மட்டுவார் குழலி யோடு மகிழ்சி

ராப் பள்ளி மேவித், தட்டிலா பத்தைத் தீர்க்குந் தாயுமா னவரைத் தாழ்ந்து. (௩௦)

அப்பதி யகன்று பொன்னி யகன்கரை வழியாக் கீழ்பால், வைப்புறு திசையிற் போந்து மருங்குறு திருமால் கோயி, லொப்பிலா வரனார் கோயி லுற்றுறு தீர்த்த மாடி, மெய்ப்பரி வோடும் போற்றி மெலி வினை யகங்கொண் டேகி. (௩௧)

திருவிடை மருதூ ரெய்திச் சிறப்பெலா மளிக்க வல்ல, முரிவில்கல் யாண தீர்த்த மூழ்கிநே ரியர்கள் பூசைக், குருகுமா லிங்க மாகி யுயர்வர குணப்பே ர் மாறன், பிரமமாப் பழிதீர்த் தாண்ட பெறலரும் பிரானை யேத்தி. (௩௨)

மாயிருஞ் சிவஞா னத்தை வள்ளன்மந் திரமாச் செய்ய, வாயன்மெய் புகுந்தோர்க் கீந்த வாவடு துறையை வாழ்த்தி, மூய்முக் கோடி யான முனிவரர் பத்தி செய்த, தேயமா நின்ற சீர்த்தித் திரிகோடி காவைப் போற்றி. (௩௩)

போன்னியி னடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றுந், துன்னிய துருத்தி யென்னுந் தொல்பதி தொழுது வெற்பின், கன்னியாங் கவுரி மையனா கழ லிணை மயூர மாகி, யுன்னியே வழிபா டாற்று முயர் பதி வணங்கி நீங்கி. (௩௪)

புள்ளிருக் குயர்வே ளூராம் பொற்பதி போற்றி யம்மை, வள்ளமேன் முலைப்பா லேந்தி மைந்தனுக்

கூட்ட வப்ப, னுள்ளூறுங் கருணை பூத்த வுயர்தல மிறைஞ்சல் செய்து, தெள்ளுநகட் டழகு வாய்ந்த திரிபுராம் பிகையைத் தாழ்ந்து. (௬௫)

புளினமும் பொழிலும் பொங்கப் புள்ளொலா மலமும் வாழ்ந்த, தெளிதரு சுழிநீர் மீது சேலினந் துள்ள வார்த்துக், களிகொள்கந் தருவர் தேவர் கலந்துள முவப்பச் செல்லுங், கொளவரு நலத்த தான கொள்ளிட நதியைக் கண்டார். (௬௬)

கண்டுமெய் விதியாற் ரோய்ந்து கண்ணுத லருண்மின் றுய்ப்பப், புண்டரி காக்கன் முன்னோர் போற்றிட வண்டப் புத்தேண், மண்டுளப் புண்ட ரீக மாபுரம் வைகுந் தேவைத், தொண்டுளப் புண்ட ரீகந் தொடர்வுறத் தியானஞ் செய்து. (௬௭)

கொள்ளிட நதியை நீங்கிக் குலப்பெரு வணிக ரொல்லா, மூள்ளூற மிளைப்பி னூலே யுயங்கியே மெல்லச் சென்று, தெள்ளூறு மறைக ளோத்துந் திருப்புலியூர்வந் தெய்தி, வெள்ளமார் சிவகங் கங்கை விரிபுனல் குண்டந்து போந்து. (௬௮)

தெண்ணிலா வெறிக்குஞ் சென்னித் தேவுசிற் றம்பலத்தே, பண்ணுறு பரமா னந்த பராநடந் தரிசித் தேகித், தண்ணறும் பசிநீர்த் தாகந் தாக்கிட வுடைந்து சாம்பி, யுண்ணூற் வன்னந் தேடி யொருங்குற வீதி சென்றார். (௬௯)

வேறு.

பொன்னம் பலமார் பெரும்பற்றப் புலியூ ரென்னு மந்நகர், தன்னி லுண்டியு மகோரசிவ வாசாரியனுந் தனி மறையோன், முன்னை மறைகண் முழுதுணர்ந் தோன் முன்னுமகமும் புறமுமெனத், துன்னு கரண மடக்குற்றோன் றூய்மை நிலையா மொழுக்க முளோன். (சo)

சிவனு ரடிகொள சிந்தையினுன் சிவனூ லெல்லாந் தேர்ந்துணர்ந்து, தவமா நெறியி னின்றிடுவோன் சௌத மார்த்த நிலைவல்லோன், நவமார் பிரம சரிய த்தோ னவையில் சிவனும் பாலனையோ, னெவரே யெனினு மிரங்குறுவோன் பொன்க லோடென் றெ ண்ணுறுவோன். (சக)

இந்த வகையிற் றேசுதிக ழிறைமை யுடைய வா சானை, மைந்தர் மனையார் தம்மோடும் வாட்டும் பசி யா லுடல்சோர்ந்து, சிந்தை மாழ்கும் வணிக ரெல் லாஞ் சேர்ந்து முன்னின் றெம்மானே, வெந்த வழ னேர் கொடும்பசியால் வெதும்பி வந்தோம் யாமென் றார். (சஉ)

என்ற மொழிகேட் டவ்வாசா னிரங்கி யவருக் கருள்கூர்ந்து, தன்றன் சீடர் தமைநோக்கித் தகை சா லரிசி பருப்புமுதற், றுன்றும் பாகப் பொருள் கட்மைத் தொடரக் கொணராப் பாகஞ்செய், தொ ன்றும் பாதிக் கணப்பொழுதி லுதவு மன்ன மிவர்க் கென்றான். (சங)

அந்த வாக்கு மிசைக்கொண்டே யவரு மகிழ்வி
னவைசெய்ய, முந்தும் பசிநோய் தீர்ந்திடவே மூன்
று மரபின் வழிவந்தோர், புத்தி மகிழ வனைவோரும்
பொலிவோ டன்ன மருந்தியபின், சிந்தை தெளிந்து
தேசிகனைத் திருந்தத் தொழுது முன்னின்றே. (௪௪)

பட்டினந்தாம் வைகியதும் பரமன் பத்தி விட்ட
துவுங், கட்ட மதனால் வந்ததுவுங் கருது மிவையே
முதலாகச், செட்டி மாக்க டந்நிகழ்வு சேர வுரைத்
து வேண்டிடலு, மட்டில் கருணைக் குரவனினி மா
ழ்க லொழிமி னெனவருளி. (௪௫)

பழிசெய் வறுமை வெந்துயர்தீர்ப் பதுவாய்ப் பாவ
மறுப்பதுவா, யொழிவில் சிவனார் திருவருளுக் கே
துவாகி யுயர்மனுக்கட், கழிவி லரசா யின்புருவா
யமருந் திருவைந் தெழுத்தீந்து, கழியு மலநீக் கமு
மெண்ணுங் கருத்து முதவு நீறுதவி: (௪௬)

இவைக ணீவிர் கரங்கொள்ளா வேற்ற செய்மி
னெனவோதி, நவையி லனமே முதலசில நல்கி யவ
ருக் கதன்பின்ன, ருவமை யகலுஞ் சுக்குமமா முய
ர்ந்த சைவ தருமமவை, சிவமென் பொருளே பெரு
கவுளந் தெருள வருளி னோடருளி. (௪௭)

முன்பு போல நுங்களது முதுமா நகர மெய்தி
மிகு, மின்ப மோடு வாழ்திரென வியம்ப லோடு மவ
ரொல்லா, மன்பி னோடு மவைகேட்டங் காணா மகிழ்
வுக் கடன்மூழ்கிப், பின்பு தமக்கு வாழ்வாய பெரு
மை தந்த தேசிகனை. (௪௮)

மீட்டு மீட்டும் வலஞ்செய்து மெய்யாரெட்டு விய னுறுப்புங், கூட்டி வணங்கி யெங்கள் பெருங் குறைகள்யாவுந் தவிர்த்தமைய்யா, லாட்டுந் தேவு நீயேயென் றறைந்து விடைபெற் றவணீங்கிப், பாட்டிற் கிசைதம் பதிசார்ந்தார் பரிவி னீங்கு மவ்வணிகர். ()

ஆசானீந்த பொருளாலே யமையும் பலவாம் வாணிகங்கள், கூசா தியற்றி வைகிடலுங் குலவைந் தெழுத்தின் வியனாலுந், தேசார் நீற்றி னுயர்வாலுந் திகழ்முற் பக்கப் பான்மதியின், மாசா ராத செல்வ மெலாம் வைக றோறும் வளர்வுற்ற. (ருo)

பசுவி னிரைக ணிறைவுற்ற பயிரின் வகைகள் பய ன்மிக்க, நசைகொள் பதும ராகமுத லவமா மணியு மாடகமுன், னிசையு நான்கு பொன்வகையும் வெள்ளி முதலா வேனையவு, மசைவில் கோசத் தடங்குற்ற வடிமை யிருமை யளவற்ற. (ருக)

தூங்கு கரமாப் பொலிந்தனவே துரக நெடுமா மலிந்தனவே, யோங்கு சிவிகை தக்கனவே யுயருஞ் சீர்கண் மிக்கனவே, பாங்கி னேழெண் மாடநிலைப் பவனம் பலவு மான்மனோகோ, லாங்க தன்றே னிதிக் கிழவ னகமோ வென்ன மன்னினவே. (ருஉ)

நிரைசெய் குன்று நீண்மறுகு நிலவு குலவு மாமியமும், வரைசெய் சிகரி வான்முதிலு மற்று முளவும் வயங்கினவே, கரைசெ யின்ன சிறப்புலவுங் கடிமா நகர மளகையினும், விரைசெய் தாருப் பதிதனினும் விளங்கி யேர்பெற் றோங்கியதே. (ருங)

பரம சிவனார் திருவடியிற் பத்தி விளைவின் வணிக ரெலாம், பரம சிவனார் திருவடியைப் பழுதி லுளத் திற் றரிப்பாராய்ப், பரமசிவனார் திருவடிக்குப் பணி கள் பண்பிற் புரிவாராய்ப், பரம சிவனார் திருவடி சொல் பலபுராணங் கேட்பவராய். (௫௪)

வேத்தா கமங்கள் விதியொழுகு மெய்யா மறிவி னந் தணருக், கோதா நின்ற வேதனமோ டொலிய லா வே பூமிமுதற், றீதா காத பொருளெல்லாஞ் சிறக்க த் தானஞ் செய்வாராய், கோதா மியலி றிரிகரணங் கொண்டு பூசை முயல்வாராய். (௫௫)

தென்சார் புலத்தார் தெய்வம்விருந் தொக்க ருமா ச் செப்பியிடு, மின்சா ரைந்து புலத்தாறு விழைவி னோம்புந் தலையினராய்ப், பின்சார் துணைவர் பிள்ளை யொடு பிள்ளை மனைமுற் குழுவினராய்ப், பொன்சார் தனதன் புலங்கொள்ளின் வெள்கும் போகப் பொலி வினராய். (௫௬)

உள்ள மோடு முடலமுமே யுவகை பூரிப் புடைய வரரய்த், தள்ளு நோயிற் றளர்விலராய்த் தாபமே துந் தம்கிலராய்த், தெள்ளுஞ் சீர்த்தி தனைவிண் மேற் றெரிவை மார்க ணணிபாடக், கொள்ளும் வா ழ்வின் சீரினராய்க் குலவி னார்கண் மிகமன்னோ. ()

இன்னோர் செல்வ மீதென்னோ வென்னோ வென்ன விரும்போகப், பொன்னோ ருலகப் புங்கவரும் புகழ நாய்கர் நல் லாசான், றன்னோ ரருளிற் றயங்கினராற்

றவத்திர் சிவனு ருருவெய்தி, மன்னோர் குருவி னருள்
சிறிது வாய்க்கின் யாதோ மற்றரிதே. (௫௮)

பூம்புகார்ப்படல முற்றிற்று.

'ஆக திருவிருத்தம் - ௬௧௬.'

அகோரசிவாசாரியப்படலம்.

என்னவியம்பியவேலையின்வேலையினிகல்போக்கி
முன்னுறமாந்தியமுத்தமிழ்மாமுனிமுனிவேந்த
ரன்னதுகேட்டுளமற்புதமுற்றனராகிப்பின்
றன்னிகர்மாதவனுக்கிவைதாமுணர்தருகிற்பார். (௧)

அருடரு மாமுனி வேந்தநின் வாய்மொழி யமுத
த்தைப், பொருடரு நஞ்செவி யாங்கல மீது புகப்
பெய்துந், தெருடரு நெஞ்சு தெவிட்டில முற்பகர்
சிவவாசான், மருடரு நாயகர் துயர்த்தெறு மாட்சி
மதிக்கொண்ணு. (௨)

அத்தகு தேசிகன் யார்சுதன் மேன்மை யீண்டந்
தருதா, னத்தகை யாது பொருட்டினி னீண்ட வி
சைத்,தொன்மை, யுத்தம மெய்க்குரு வாயது சைவ
வொழுக்கத்தின், வைத்திடு மெய்யர் தமக்கு முதன்
மைகொண் மாண்பென்னோ. (௩)

இங்குவினுவியபான்மைகள்யாவையுமெங்கட்குப்
பங்கமினற்றவவன்மையகத்தியபரபோதா

வங்கவனம்புவிதோன்றியவண்ணமடிக்கொண்டே

அவ்வுரைகேட்டறிமெய்யினையங்கணருமெய்யாஞ்
செவ்வுருவாக்கியசெந்தமிழந்தணன்செம்மைத்தா
முவ்வியல்சாலுமுயர்ச்சியிருள்ளமொருங்காகி
யிவ்வுரைகேண்மினெனத்தவருக்குரையீகுற்றான். ()

வேறு.

போகமாருருக்கொடுபோகநல்கியும்
வேகமாருருக்கொடுவினைகள்வீட்டியும்
யோகமாருருக்கொடுயோகமாக்கியும்
பாகமாருருவுயிர்க்கருளும்பண்ணவன். (சு)

இன்னுயிர்த்துணையெனவிருந்துமன்னுயிர்க்
கன்னையாவருளுறுமன்னைதன்னொடு
முன்னமோர்வைகலின்முறைகொள்கைலையிற்
றன்னரியனையினுந்தணந்துபோந்தனன். (எ)

போந்தருள்புண்ணியன்பொருப்பின்மீமிசை
யாய்ந்திடுபல்வகைமாக்களற்புதம்
வாய்ந்திடுங்குவடுகள்வாழநோக்கினை
யீந்தருள்கின்றதோரினையவெல்லைவாய். (அ)

அகவிநின்றென்றுமேயகுமஞ்ஞைகளக
டகைபெறமொழிதருசுகங்கள்சாரிகை
பிகமுதற்புட்குலம்பிறங்கும்பொற்பது
வகைமிகுந்தாதுசேர்ந்தொளிருமாண்பது. (கூ)

நிறந்தருபொன்னியற்கமலநீடியே
வறந்திடலென்றுமில்வாவியேயசும்
புறைந்தநீர்க்கயந்தலைப்புலவுமொள்ளிது
செறிந்திடுதேனுகர்தேன்கொள்சீரது. (௧௦)

கானுறுகற்பகக்கானுங்காமநற்
றேனுவினிளைகளுஞ்சிறந்துசேர்குவ
தாளியமாறினுமலரும்போதளாய்
வாளிமிர்சிறுவளியசையுமாணது. (கக)

பூண்டகுசிந்தைசான்மணிகள்பொற்பது
மாண்டகுமங்கலவடிவமாயது
காண்டொறுங்காண்டொறுங்கண்களோடுள
மீண்டிடாவகைமையின்மேவச்செய்வது. (கஉ)

உரைதருஞ்சிறப்பினையுடையதாயுய
ரரதனமயமதர்யமருமோர்குவ
டிரதநன்மொழியொடுமெம்மையாளுடை-
வரதனங்கெய்தியம்மாதைநோக்குறு. (கங)

மேம்படுவாமமார்மங்கைமேதக
வோம்பியபொம்மலினுயர்வதாய்மனக்
காம்பெருமகிழ்தருமிந்தவுற்புதத்
தேம்யயில்கோட்டினைத்தெரிந்துகாண்டிநீ. (கச)

என்னவேயெம்பெருமாட்டிக்கெம்பிரான்
முன்னுறுமணிமயமுடியைக்காட்டியவ்
வன்னமோடருள்விளைபாடலாற்றுபு
மன்னெடும்பொழுதவட்பயிலலுற்றுழி. (கரு)

பொன்றிகழ்புரிசடைப்புனிதநாயகன்
றென்றிசைசிறந்திடுமகோரச்சீர்முகத்
தொன்றொருருவேர்வையின்றிவிலையுற்றதா
லன்றகுதனைமுழுதருளுநாயகி. (கசு)

திருக்கையினவாங்கியேதிகழுங்கங்கையிற
பொருக்கெனவிடுத்தருள்செய்யப்பொற்புறு
முருக்கிளர்மதலையாயுதித்ததாலஃ
திருக்கினென்பொருளனுமேகனுணையால். (கஎ)

வேறு.

இங்கிதன் முன்ன ராக வெம்பிரான் முடிவோர் கா
திற், றங்கமார் குடிலே பேசும் தொல்பதிக் கணித்தா
வுற்ற, கங்கைமா நதிக்கு மேல்பாற் கரையினிற் கரு
லா நின்ற, வங்கொராச் சிரமத் துற்றோ னங்கண
ரருள்வாய்ந் துள்ளோன். (கஅ)

சிவதரு டங்க ளாய்ந்தோன் றிருந்துநற் பொருள்க
டேர்ந்தொ, னவமில்கோ விந்த சாமி நாமமார் மறை
யோர் வேந்த, னுவமையி லொளியான் மிக்கோ னு
யர்மகவிலாமை யாலே, தவமுழந் தனுற் பன்னு
டன்மனை சுசீலை யோடும். (கசூ)

இவ்வகை தவஞ்செய் துற்றோ னேழ்பரித் தே
ரோன் முந்நீர்ப், பவ்வமே லெழுமு னன்னீர் படிந்
திடப் பன்னி யோடு, மெவ்வம தகல மாற்றி யிகபர
முதவா நின்ற, தெய்வத கங்கை யென்னுந் திருநதி
சேர்ந்தான் மன்னோ. (உ0)

அப்பொழு தகன்கூ லத்தி லணிகெழும் புளின
மொன்றின், மைப்பெரு மிடற்றுப் புத்தேள் வதனம்
வந் துதித்த மைந்தன், மெய்ப்படுஞ் சுதைகொள்
சோம விம்பநேர் முகமு மீன, மொப்புறும் விழியுங்
குந்த முறழ்ந்திடு நகையின் பொற்பும். (உக)

தொண்டையங் கனிச்செவ் வாயுஞ் சுரிமுகக் கள
முங் கஞ்சக், தண்டிளந் தோளுஞ் சாம்பூ நதமெனத்
தயங்கு மெய்யுங், கொண்டுகால் விரல்வாய் வைத்
துக் குரனல்யா ழினிமை வெல்லும், பண்டர வாய்
விட் டாரப் பன்முறை யழுதுற் றுனல். (உஉ)

ஆங்குவந் தடைந்த வந்த வந்தண னுளமுப் கண்
ணும், வாங்கிள மதலை தன்னை மகிழ்ந்துகண் டீதென்
கொல்லென், றேங்கதி சயத்த னாகி யுயிர்த்துணை
யாகித் தன்னோர், பாங்குற நின்ற தொன்மைப் பன்
னிக்குக் காட்டி னனே. (உ௩)

காட்டலுங் கந்த வேள்போற் கட்டழ குடைய
சேயை, வீட்டருந் தவமீ தூர மெய்ப்பதி யோடுஞ்
செய்தா, ளுட்டம தாரக் கண்டா ளனுங்கினு ளெடு
த்தாள் புல்லி, மாட்டுறு மடிமேல் வைத்தாள் வதன
ம்பன் முறையும் பார்த்தாள். (உ௪)

உச்சியை மோந்தாண் மெய்யி னுற்றதோர் பூழி
தன்னைக், கச்சணி கொங்கை யாடன் கலையினாற்
றுடைத்தாள் பின்னர்ப், பச்சிளங் குதலைப் பிள்ளை
பசியினாற் கலுழ்த னோக்கி, யிச்செல லுகலு மாறு
யாதென வவலங் கூர்ந்தாள். (உ௫)

மதலைபாற் றன்னைத் துள்ள மறுவறு மன்பி
னாலே, பதலைபோற் பருத்த கொங்கை பால்சுரந்
திட்ட வாற்றாற், றிதலைசேர் மெய்யா ளுள்ளந் திகழ்
ந்துவிம் மிதத்த ளாகிக், குதலைசேர் மகவு கொள்ளக்
குழக்கட்பா லருத்தி னாளே. (௨௬)

பாலினையருந்தாநின்றபாலனுக்குவந்துநல்குஞ்
சேலினைநேருங்கண்ணாட்டியம்புவான்றேர்ந்தமெய்ய
னூலினைநோக்கட்டாயாராதுசேயோவின்றே
ஞ்லினையுடையசாதிநடுவினுள்யாதோவின்னும். ()

குலத்திற னேதோ வின்னை கூறுபா டுணரா திந்த
ப், புலத்துறு மகவைப் போற்றல் புரையதாம் விடுத்
தி யென்னச், சொலத்தகு மொழியைக் கேட்டுத்
தொல்லழ குடைய சேயை, நிலத்திடை விடுக்க லா
ற்று ணெஞ்சிடைத் துயரங் கொண்டாள். (௨௮)

வேறு.

அனையபொழுதருமறையுமயனரியுங்காணரிய
புனிதனருளாலருளும்பொற்புறுமோரசரீரி
பனவர்சிகாமணியிந்தப்பாலனைமதிடத்துதித்தோன்
றனயனுக்காத்தவஞ்செய்தநினைக்கிவனைத்தந்தனமால்:

இப்பொழுதேபன்னியொடுமிருங்கங்கைநீர்படிந்து
மெய்ப்பதிசார்ந்தையரொடுஞ்சாதமுதல்வினைமுடித்
செப்பிடும்பத்தாநாள்கோரசிவனெனவோது [தி
யப்பெயரையிடுதியிவனுனக்குமேன்மையதாம். ()

என்னவிரு விசும்புகிழித் தெழுந்தொரு திருவாக்கைத், தன்னுடைய விருசெவியுந் தளிர்ப்பெய்தியுறக்கேட்டுப், பன்னரிய வானந்தப் பரவையிடைப் படிந்தாழ்ந்து, சென்னிமிசைத் திருமொழியைச் சேர்த்துமனைக் கிவைபேசும். (௩௧)

துடியிடைகேண் மகவின்றித் துயருமெமக் கருள் கூர்ந்து, விடைமருவும் பெருமானோர் வியன்மகவை யருளினனாற், கடலுலகு தனிற்காணுங் கணிப்பரிய பாக்கியத்துட், படியரிய நாம்பெற்ற பாக்கியமே யாக்கியமாம். (௩௨)

என்னுவம்மறையாளனின்சத்துமகிழ்பன்னியொடும்
பொன்னுரும்வரகங்கைப்புண்ணியநீர்புகுந்தாடி
மின்னுருமெழின்மகவைவிரிகரங்கொண்டெடுத்தே
தன்னுருமனைபுகுந்துசங்கரனார்பணிவழியே. [ந்தித்
சாதவினைமுதனிரப்பித்தகுதியொடுமந்தணர்க்குப்
பீதமுதற்பலவாயபெருந்தானமுவந்தீந்து
கோதகலத்திருந்துவிழாக்கொண்டாடிச்சிவம்பெருக
மோதமிகுநாமவினைமுடித்துமனமகிழ்பூத்தான். ()

இவ்வகையதிருச்சேயையெய்திமலர்மறையோர்க
ளுய்வகையதாதையினுலுற்றதெலாமுணர்ந்துள்ள
மெய்வகையகளிதூங்கிவேளெனவேவியந்தெண்ணிச்
செய்வகையவாசிகளாற்சிறப்பித்துச்சென்றனரால்.

மறைதெளியு மந்தணனு மைந்தனுக்கவ் வப்பொழுதே, யறைகொளுப நிட்டான மன்னவினை கேச

வினை, முறைதிகழ நிகழ்வித்து முப்புரிநூற் பெருஞ்
சடங்கைக், குறைவகலு மெட்டாண்டிற் குணம்பெ
ருகப் புரிந்தனனே. (௩௬)

சொன்ன தொரு காலத்திற் றொன் மறைகள் கற்
பிக்க, வன்னி யெனு மொழுக் குடையோன் மறை
களைநன் கோதுறுவா, னின்னு மறை யங்க மொடுமு
பாங்கமவை யிதிகாசம், பின்ன மிலாப் புராணங்கள்
பிறநூலுங் கற்றனனால். (௩௭)

குருவழியாக் கொள்க வெனுங் கொள்கை யினா
லந்நிலைநின், றொரு வழியா நூல்களெலா முளங்கொ
ண்டான் பத்தாண்டு; வருவழியே வளர்த்தபிதா வது
வைசெய மனை யோடும், பெருவழியிற் பிறந்த வொ
ரு பெண் ணரசைத் தெரிந் துற்றான். (௩௮)

வேறு.

ஆனம்வலையினலரின்மேயினான்
மானதத்தினின்வந்தமாண்பினான்
ஞான்போதகத்தலைமைநண்ணினான்
மானமார்சனற்குமரமாமுனி. (௩௯)

காமிகம்முதறகழறநின்றிடும்
தோமிலாகமத்தொகைகள்யாவையும்
காமனைப்பொடிகண்டநாயனார்
தாமுணர்த்திடத்தானடைந்தரோ. (௪௰)

ஆணையநாயனாராணைமேற்கொடே
துணையவந்துநற்காசித்தொன்னகர்
தனையடைந்துசீர்தங்கிவாழ்ந்திடும்
பனவர்மேலவன்பனைம்புக்கனன். (௪௧)

புக்கதொன்முனிபுங்கவன்பொலிந்
தொக்கவாரமுகொழுகுஞ்சேயினைப்
பக்கமேவியேபார்த்துத்தன்னுள
மிக்கதோர்பெருவியப்புமேவியே. (௪௨)

அந்தமில்லொளியமையவந்திடு
மிந்தமைந்தனையெய்தப்பெற்றது
பந்தநீங்கிடும்பனவர்மேலவன்
சிந்தைநோக்ககல்செல்வமேயென. (௪௩)

எண்ணியேபெரும்புகழையெய்தியோ
னண்ணனல்கியவாகமங்களை
மண்ணின்வந்திடுமைந்தன்றேர்வுறப்
பண்ணியேயிதுபரிவினற்றுவான். (௪௪)

அம்மையோடறமப்பனைத்தனோர்
சைம்மையாகிப்சிந்தையிற்கொளீஇ
மெய்ம்மைமந்திரமிட்டின்பூதியைக்
கொம்மைமெய்யினேன்கொள்ளநல்கியே. (௪௫)

ஆகுமாசிகளருளிநற்சிவ
யோகியாகெனவோதியேநம
தேகநாயகனிணையிலாணைசெய்
யோகைமாமுனியொல்லைபோயினன். (௪௬)

பிரமசாரியாம்பெரியனும்மவ
னுரைசெயுற்றநல்லுண்மைநூலெலாங்
கருதியோர்முறைதன்னிற்கண்டனன்
விரவுஞானமாவேலையாயினன். (௪௭)

இத்துணைப்பெருஞ்சிறப்பையெய்திய
வித்தகன்பினைமேவுமாறெலாஞ்
சித்தமேற்கொடுதேர்ந்துதந்தைதாய்
வைத்தசேவடிவணங்கிப்பன்முறை.

அன்னர்தம்மொடுமனையதொல்பதி
தன்னைநீங்கியேதவங்கள்சித்திக
ளென்னுமின்னவையியலுந்தில்லையா
நன்னர்மாநகர்நண்ணினனரோ. (௪௯)

வேறு.

அத்தலை வந்தடை சிவனுமணி பெருகு மிருக்கை யதொன் றமைத்துக் கொண்டு, நித்தவினை நிமித்த வினை நிகழ்ச்சி யெனும் பூசைசெய நியதி யாதி, பைத்ததழ லோம மொடு தருப்பணமே வைகன்றும் பரிவிற் செய்யு, மெய்த் தகைய பார்ப்பனமா வுண்டி யிவை விதியோடும் விளங்க வாற்றி. (௫0)

மந்திரமோ டடந் தார நாதமில யத்தினொடு வகுக்க நின்ற, பந்தமிலா விராசநிலை யோகமெனு மிவற் றினையும் பயிலத் தக்க, நிந்தை யகல் பிறநிலையு நிகரற்ற முயல்வினொடு நிகழ முற்றி, யந்த மிலாப் பெரும்புகழை யடைவுற்றான் பெருஞ் சித்த னாகி மன்னோ. (௫௧)

சிவனடிக ளுளத் திருத்தித் திருத்தகைய சிவயோகந் திருந்த முற்றி, யுவமை யகல் சிவயோகி யாய மறை வள்ளலுய வீரொழுக்கங் கூறி, னவி ரொளிய முக்குறிகொள் பூதியொடு மக்கமணி யணியு மெய்

யா, னவை யகலுஞ் சிவலிங்க பூசையினை நியதியுற நடத்துந் தூயோன். (௫உ)

பரவரிய சிவோக மெனும் பாவனையின் வழுவா தோன் பரனுர்க் கன்ப, ருருவமதி லன் புடையான் மந்திரமுந் தந்திரமு முயருஞ் வேதீ, வரமுடிவுஞ் சோதிடமு மற்றையவும் வடித்த பெரு வன்மை யுள் ளான், றெரி வரிய தன்மையவாந் திரிகால நிகழ்வெ ல்லாந் தெரிய வல்லோன். (௫௩)

நிக்கிரக மனுக்கிரக நிகழ்விப்போ னிக ரகல்சீர் நிறைய நின்ருே, னெக்கதிய வுயிர்மீது மிரக்கமுளோ னெவர்க்குநல மீயுநீரா, 'னக்குரவன் மனிதர் தமக் கரியதொரு பெருமையினி னன்மதல் கண்டு, மிக்க திருத் தில்லைநகர் மேவியுளா ரனைவோரும் வியந்தே யுற்ருர். (௫௪)

பொறிவாயி லைந்த வித்திர் புகலும்வினுத் தனக்கு விடை போதும் வண்ணம், பிறைவாழுந் திருச்சடை யார் பெரு முகத்திற் பிறந்தகுருப் பெருமை சொன் ஞுஞ், செறிவாய செல்வமிகு தேசிகர்கள் சேர்வுற்ற சிரம நீங்கி, மறைவாழு மிளைசை தனின் மன்னிய தோர் செய்தியினி வகுக்க லுற்ரும். (௫௫)

வே று.

அயன்ருடை வந்தோராகிய வணிகரணி பெறு பூம்புகார் நகரிற், பயன்றரு திருவின் வாழ்ந்திடு நா ளிற் பனிமலர்த் தாதகிப் படலை, முயன்றிசை வண் டர் மொய்த்திட வணிந்த முரிமா நேரிவெற் பரசன்,

வியன்றகு குடை வாழ்விரி புனனாட்டின் விளைந்தது
குறுவிலை வெம்மை. (௫௬)

வான்முகில் பொய்த்து நதியெலாம் வருநீர் வறந்
திட வந்தமை யாலே, தான்மரு வுயர்பேர் தவறவு
மெங்குந் தன்னிடைச் சார்ந்திடுங் குடிக, ளூன்மறை
யுடல்சோர்ந் துடல்பசி யுற்ற வுறுதலாற் சோறு
டைத் தென்னு, மேன்மைகொள் பழைய மொழிவ
ழு விடவு மேயது தண்புன னாடு. (௫௭)

இவ்வகை குடிக ளிரங்குத னோக்கி யிரங்கினான்
பொன்னியந் துறைவ, னவ்வகை யாயு மருங்குரு
வருணு மங்கண ரன்புமஞ் செழுத்தின், செவ்வகை
விளைவு நீற்றொடு கண்டிச் செல்வமுஞ் சிறந்தசீர்
வணிகர்க், குவ்வகை யுறுக ணுறுகில சேய்மை
யுள்ளதீ வுயர்பொரு ணிறைந்த. (௫௮)

இப்பெரு வணிக ரொல்லையில் செல்வ ரொன்பது
செவிப்புலப் படவே, நெய்ப்படு வேல்கொ ணோரிய
னிவரை நெருக்கியே பன்முறை பொருள்கள், கைப்
படுத்திடலும் பெருந்தொகை யீந்தார் காவலன் கடு
ந்துயர் பின்னு, மெய்ப்படப் புரிந்தான் குடிக்கருள்
வேந்த னிடல்செயின் யாரது தவிர்ப்பார். (௫௯)

பகல்வரு படிற ராமெனக் கொள்ளை பயிலுறும்
பார்த்திவன் பண்ணு, மிகல்வரு துயருக் காற்றல ரா
கி யிடரினுண் மூழ்கிய வணிகர், மிகல்வரு கிளையோ
டங்ககர்த் தொடர்பை மெல்லவே நீக்கிமுன் றமக்

குப், புகல்வரு கோமான் புகழொடு மிருக்கும் பொற்புறு தில்லைவந் தடைந்தார். (௬௦)

அடைந்துளார் யாருந் தங்குரு விருந்த வருநிலை புக்குமுன் றாழ்ந்து, மிடைந்ததம் பொருளின் செலவொடு வேந்தன் வெம்மையு முறைப்பட விளம்பிக், கொடுந்தகை யரச னாட்டிடை வாழ்தல் கொடியது கொடியதா மெங்கட், கிடந்தரு வேறு தலத்தினைக் குறிக்கொண் டெம்பிரான் விடுத்தரு ளென்றார். ()

என்றனர் வேண்டுஞ் சீடர்சொற் கேட்ட விறைவனு மனையனை நோக்கித், துன்றருள் செய்து சிவபரஞ் சோதி தொல்லருள் வலத்தினா லேயே, நன்றுறு தான மிவர்தமக் கின்னே நண்ணிட வேண்டுமென் றுன்னிப், பொன்றிகழ் சடையார் புராணநூல் பலவும் புகன்றனன் புலத்திறந் தெளிய. (௬௨)

பெருகிய தலங்கள் பற்பல வற்றின் பெருமைகள் பேசிடக் கேட்டோர், திருவுறை யிளசை மான்மிய மதனைச் செப்பிடும் பொழுதினிற் செறியும், புரிவுநன் மகிழ்வும் புந்தியுட் டோன்றப் பொலிந்தன ராகியே கேள்வி, மருவுறும் பெரியோர் வாழ்வுறு மிளசை மாநகர் வதிந்திட விழைந்தார். (௬௩)

சீடர்க ளின்ன கருத்தின ராத றெரிந்துள முவப்புற லெய்திக், கூடுறு *தோற்ற மாதியாம் வகைகள்

---

* தோற்றமாதியாம்வகைகள்;—தோற்றம் அழிவு பூதங்களின் போக்கு வரவு வித்தை அவித்தை யென்னு மிவை.

குறைவறக் குறிக்கொளுங் குருவு, நாடிமே னிகழ்வு
முழுவதுந் தூக்கி நாயகரோ டேகிட வலித்துப்,
பீடுறு மிளைசை யாண்டுடையீ தென்னப் பேணியே
யாய்வுறும் போதில். (௬௪)

பொதியமா மலையிற் பொருநையத் திழிந்து பொ
ன்னொடு மணியுநன் முத்துந், தகையகில் சந்துந் தி
ரையினால் வாரித் தராதர மாமெனக் குவித்துக், கதி
பெறு புனலாற் பயிரெலாம் வளர்க்குங் கடிகெழு
பாண்டிநன் னாட்டிற், றதிமிகு பதியிற் கயிலையா மி
ளைசைத் தொன்னக ருளதெனத் தெரிந்து. (௬௫)

பாண்டிநாட் டரசன் பார்த்திவர் கோமான் பயிலு
நல் லொழுக்கமிக் குடையான், மாண்டகு கருணை
பொறைகொடை யமைதி வாய்மையே யாதியாங் கு
ணங்கள், பூண்டவன் செங்கோன் மனுமுறை நிகழப்
புரந்திடும் புண்ணிய சீலன், றண்டவம் புரியு மற்பு
த மூர்த்தி தானுறு மன்பினிற் றலையான். (௬௬)

மதுரைமா நகரம் வாழ்வுறு கின்றோன் மற்றவ
னென்பது மனையாற், கிதந்தரு மாசான் றன்னுள நட்
புக் கிசைந்தவ னெல்லையில் லாத, துதிகெழு ஞான
ந் தனக்கொரு நிதியாய்த் தொன்மைசேர் சீடர்க ட
மக்குக், கதிதரு மீசா னாசிரி யப்பேர் கலந்தவ னெ
ன்பதுந் தேறு. (௬௭)

கயிலைநா யகனார் திருமுக மதனிற் கவினுற வந்த
வா சிரிய, னயமுறு சீட ராகிய வணிகர் நாற்புறஞ்
சூழ்வுற நடந்து, சயிலமுங் கடமும் பல்வகை நதியுந்

தன்னிகர் செங்கெனாற் கன்னல், பயிலுறு நிலமுந் த ணந்துசென் றெவ்ரும் பரவிசை யாலவா யடைந் தான். (சுஅ)

சுடர்மதி மருமா னாகிய சோம சுந்தரக் கடவுணற் சோதி, யடர்முடி யிந்த வரசியே யான வங்கயற் கண்ணியா ரோடும், படர்புக ழெண்ணெண் டிருவி ளை யாடல் புரிந்துசெய் தருளியே யெங்க, ளிட்டுக டக் கோயில் கொண்டுவீற் றிருக்குமெழிலின தால வாய் நகரம். (சுகூ)

அப்பெரு நகரத் தாரண வொலியு மாகம வொலி யுமீ ரொன்பான், மெய்ப்படு புராண வொலியுநீங் காது மெய்யுணர் வுடையவர் சாரும், திப்பிய தரமா ய்த் திகழ்ந்திடு தெய்வத் திருவெண்ணீற் றொளிகொ ளு மழகி, னொப்பரும் பொலிவி னோடோர்வதா யமரு மொருபெருந் திருமட முண்டால். (எ0)

அத்திரு மடத்தி னமர்ந்திடு கின்ற வரும்பெறற் பாண்டிநாட் டாசான், வித்தக வீசா னுசிரி யன்று ன் விழுத்தகுங் கேண்மைமீ தூருஞ், சித்தமோ டங் க னுபசரித் திடவே திகழ்ந்துவந் தளவளா யிருந் தான், சுத்தநீர் கெழுமும் வரநதி தன்னிற் றோன்றி ய் வகோரவா சிரியன். (எக)

அகோரசிவாசரியப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூகூ0.

ஈசானசிவாசாரியப்படலம்.

மாசியனீக்கியமாதவனின்ன
பேசியகாலைபெருந்தவரானோ
ரீசனெனுங்குருயாவனவன்றன்
றேசொடுதோன்றியசெய்தியதெங்ஙன். (க)

பெரியவர்காதைகள்பேணுதறூய்மை
தருமதனூலவைசாற்றுதியென்ன
வொருமையினோடுமுளங்கொளுமன்னோன்
வருமுறைசெப்புதுமென்னவகுப்பான். (உ)

தொலைவறுசெய்யதுவாபரமென்னு
ஙலியுகவீற்றினெல்லையின்மாசு
பொலிதரலுற்றுநலத்தியல்பொய்த்த
கலியுகம்வந்துகலந்தனையன்றே. (௩)

கலத்தலுமாந்தர்கலங்கிவிழுந்து
நலத்தகுகண்டிகைநூல்லெழுத்தஞ்சாச்
சொலத்தகுமிப்பொருண்மேனைசேர்ந்து
வலத்தகுபத்திதணந்தனர்மாதோ. (௪)

விடுத்தனர்கோயில்வியன்பணிதன்னை
விடுத்தனர்வாவியொடுங்குளம்வெட்டல்
விடுத்தனரன்னமிசைந்திடநல்கல்
விடுத்தனரேனையமெய்யறமெல்லாம். (௫)

இவ்வகையாகியிருந்திடுமோர்நா
ளுய்வகைசெய்தருளம்மையினோடு

மவ்வரமூர்த்தியருள் விளையாட்டான்
மெய்விடைமீமிசை விண்ணிடைவந்தான். (சா)

வந்தருள் காலமருங்குலெறயம்மை
யிந்தநிலத்தினில்யாருமறத்தின்
சிந்தனைபத்திமைதீர்ந்தமைநோக்கி
முந்தருளோடுமொழிந்தருள்கின்றாள். (எ)

என்னுயிர்நாதவிரும்புவிமீது
மன்னியுறைந்திடுமானவரெல்லாம்
வெந்நிரயம்புகவெவ்வினையிட்டித்
துன்னுறுகின்றனர்தொன்மையினீங்கி. (அ)

இன்பருள்செய்திடுமெந்தையையின்னே
மன்புனைதேசிகமாவடிவாகிக்
கொன்பயில்பத்திகுலாவநிறுத்தி
யன்பினருள்புரிகென்றனளையை. (கூ)

என்றமைகேட்டெமையாளுடையெம்மா
னன்றருள்கூர்ந்துயர்நன்முகமைந்து
ணின்றதொர்மேன்முகநின்றுபுவிக்க
ணொன்றொருநற்கலையுய்த்தனனென்ப. (க0)

அக்கலையாரணமாகமமோங்கத்
தொக்கதொர்கண்டிகைநீறுதுலங்க
மிக்கதொரஞ்செழுத்துண்மைவிளங்கத்
தக்கதொர்வைதிகசைவநிலாவ. (கக)

நினைவருசைவநெறிப்படுமுத்தி
வினைஞர்குலத்திடைமாண்டவியப்பேர்

புனைமிகுகோத்திரத்தோர்மிகுபோதா
யனமுனிசூத்திரத்தின்னருள்செய்து. (௧௨)

சிவனடிசிந்தைதிருந்துறவைத்துத்
தவமுயலந்தணர்வேந்துதனக்கோ
ருவமையிலாதவுயர்மதவாகி
யிவணவதாரமியைந்ததுமன்றே. (௧௩)

வந்தருண்மாமதலைக்குமகிழ்ந்தே
தந்தைசெயத்தகுசார்விதிசெய்ய
வந்தநன்மைந்தனுமாயொடுதந்தை
[illegible]

வளர்வுறுகின்றவன்மாமறைநூல்கண்
மிளிர்வுறுசெவ்விவிளைந்திடுமேல்வைத்
தளிர்வுறுநால்வலதந்தையினன்முற்
குளிர்வுறுமாச்சிரமத்தியல்கொண்டான். (௧௫)

அருமறையேமுதல்வித்தையனைத்துங்
குருமுகமாகவேகொள்கவெனுந்தொல்
வரையறைகாத்திடமற்றவைகொண்டா
னொருகரியாயுறுமோர்குருவின்பால். (௧௬)

வேறு.

ஓதுறு கின்றன யாவையுமே யோது முணர்ந்தெளி யொள்ளறிவா, நீதியி*னவதியில் பிரமநிலை நின்ற தோர் நன்முறை தலைநின்றோன், வேதமொ டாகம

* அவதியில் பிரமநிலை—நிரவதிகப் பிரமசரியம். நிரவதிகப் பிரமசரியமெனினும் நைட்டிகப் பிரமசரியமெனினு மொக்கும்.

மெனுமுன்னூல் விதிவழி யொழுகு மொழுக்கத்தா, ஞூதி பராபர முதல்வன்ற னடியிணை பூசைசெ யமை வுற்ருன். (கஎ)

பற்றிய லற்றதொர் பான்மையினுன் பயிலருண் மிக்க பராசத்திக், கற்றமில் வந்தனை செயலாலே யரு ள வழிக்க வடல்கொண்டோன், முற்றனை யீந்திடு முகமென்று முதன்மையின் மேலுறு முறையாலே, வெற்றிகொ ளூர்த்துவ சிகைகொண்ட மெய்க்குரு வாகி விளங்குற்றுன். (கஅ)

முதுசிவ நூலரு ளீசான முகமதின் வந்திடு முறை யானும், பதிசிவ தத்துவ வுபதேசம் பாங்கொடு செ ய்திடு மியலானும், திதிதரு முண்மைய வீசான சிவ மரு வாசிரியனெனுமம், துதிபெற வெய்தின னுயர் சைவத் துறையுல கோங்கவு தித்துள்ளோன். (கக)

அத்திரு மெய்க்குரு வவனிதனி லமர்வுறு மனு ட ரனைவோரும், பொய்த்தலில் வேந்தனுள் வசமா கிப் பொலிதரு தன்மையி னலர்நிம்பக், கொத்துயர் தாரணி மீனவனைக் குலவுறு சீட னெனக்கொண்டு, பத்திய னப்படி நற்செல்வம் பயில விளைத்தவன் முகமாக. (உ0)

மாந்தர்கள் யாரையுஞ் சிவபத்தி வாய்ந்தவ ராக வியல்வித்துத், தேந்தொறுந் தேந்தொறு முறவேகி ச் செறிதரு மானவர் திருநீறு, கீர்த்திகொள் கண்டி கை சிவவடிவாக் கருதுறு மைம்பொறி சிவநாம, மே

யந்திடு மிவைகளின் மிகுபத்தி யிசைவுறு மாறு நிறு
த்துற்றே. (௨௧)

பின்புயர் தண்டமிழ் வளநாட்டிற் பெட்பொடு வந்து திருக்கூட, லென்பெய ரெய்திய நகரத்தி லிலகுறு திருமட மிசைவுற்றே, மின்பட ரிந்திதரு குல வேந்தன் மெய்யுறு சிந்தையின் வழிபடவே, யன்புறு பாண்டிய நாட்டாசா னெனும் விசையொடு திகழ்வுற்றான். (௨௨)

கேத்திர யாத்திரை யமையத்திற் கிளர்புலி யூருறு மாசாற்கு, மீத்திகழ் கூடலி னாசாற்கு மித்திர பாவ மிசைந் ததுவா, லாத்தனி வன்றமிழ் மதுரைதனி லமருறு கின்றதொர் பொழுதின் கண், வாய்த்திடு புண்ணிய வணிகரொடும் வந்தனன் றென்முகம் வருமாசான். (௨௩)

வேறு.

இன்னவண்ணமிசைந்தனமீசனென்
றுன்னுதேசிகவுற்பவவுண்மையை
மின்னுசெஞ்சடைமெய்யுறுமாதவீர்
பின்னருற்றனபேசுவங்கேண்மினோ. (௨௪)

நன்முகந்தருஞானநன்னாயகன்
றென்முகந்தருதேசிகன்மேலதா
மன்முகந்தரவந்திடுபுங்கவன்
றன்முகந்தனைநோக்கித்தகவொடும். (௨௫)

நட்புமிக்கநயந்தருவாய்மைகூர்
பெட்பினங்கவட்பேசுறுபோழ்தினிற்

றிட்பமெய்வலிக்கிள்ளிசெய்தீத்துய
ரொட்ப்மெய்தியவைசியர்க்குற்றதும். (உசு)

விளைசெயின்பவியனலநல்கிடு
மிளைசையென்னுமெழில்பெறுமாநகர்
கிளைசெயன்னவர்கிட்டிவசித்திடத்
திளைசெய்காதல்கொள்செய்தியுஞ்செப்பியே. (உஎ)

சிதம்பரம்மெனுந்திவ்வியகேத்திரத்
திதம்பரந்திடும்வண்ணமிருந்தியா
னிதம்பரந்தருநேரில்சமாதியின்
முதம்பரம்புறவெய்திடமுன்னினேன். (உஅ)

ஐயவென்னுயர்சீடர்களாகிய
துய்யவிந்தவணிகரைத்தொண்டுகொள்
செய்யநின்னுயர்சீடர்களாகவே
மெய்யுறக்கொளல்வேண்டுமென்னண்பினேய். (உகூ)

பான்மையின்னபகர்வுறக்கேட்டிறை
மேன்முகம்வருமெய்யனுமங்ஙனே
தான்மலர்ந்துதகவுறுசீடரா
வான்மையெய்தும்வணிகரையேற்றனன். (௩0)

அங்கதற்பினரசவைசேர்ந்துதன்
றுங்கமித்திரன்றுயவர்தங்களைத்
திங்கண்மாமரபுற்றிடுதென்னவன்
பங்கமின்றித்தெரிவுறப்பண்ணினான். (௩க)

பண்ணலோடுமப்பார்த்திவபுங்கவ
னண்ணியேவருநற்குரவன்றனைத்

தண்ணுறுந்தகைத்தன்குருவேயென
வெண்ணியேயுயர்பத்தியியற்றினன். (௩௨)

ஈசனேசர்களாகியிருந்திடு
மாசில்வைசியர்மீதுவரங்குலாந்
தேசெனுஞ்சிவஞ்சேர்ந்திடுசிந்தைநேகா
ணேசம்வைத்தனனிம்பவலங்கலான். (௩௩)

பின்னர்தன்குலப்பின்னவராயினோர்
தன்னோர்நாட்டிற்றலைஇயவிளைசையிற்
றுன்னிவாழத்தொடர்ந்தனரென்பது
மன்னர்மன்னனறிந்துமகிழ்ந்தரோ. (௩௪)

நாமுமாங்கடைதும்மெனநாய்கருக்
கேமமாரவியம்பியவரொடுஞ்
சேமநேருறுதேசிகர்தம்மொடும்
பூமிவேந்தன்புறப்படலுற்றனன் (௩௫)

ஊர்தியின்வகையொலியெனவந்தன
வார்திகழ்முரசாதிகள்வந்தன
பார்திகழ்ந்தபரிசனம்வந்தன
வேந்திகழ்ந்திடுமேழனவும்வந்தன. (௩௬)

வந்தகாவலவழுதிகுரவருக்
குந்துமூர்தியுரியனவூருறத்
தந்துவைசியர்தங்களுக்குங்கொடுத்
தந்தமன்னனுமேறினனாண்டரோ. (௩௭)

தூரியங்கடுவைபபத்துதைந்தெழு
சீரியல்கள்சிறக்கம்துரையின்

வாரிநீங்கிவழிக்கொடுவல்லைவந்
தேரினேங்குமிளைசையையெய்தினன். (௩அ)

தொல்வரங்கெழுதோன்றல்பட்டாரகர்
செல்வவைசியர்தம்மொடுசேர்வுழி
நல்விழாவுறுநாள்துவாதலிற்
பல்வளத்தொடுபல்கியதங்நகர். (௩௯)

வேறு.

அந்தணர்சங்கமுமரசர்சூழலும்
வந்தசீர்வணிகர்தம்வகையும்பின்னவர்
தந்தொகுதியுமயற்சார்பினோர்களி
னுந்தியகுழுவுமோவுறுவவவ்வழி (௪0)

இருடிகள்கணங்களுமிலேகரீட்டமுந்
தருமெழில்கெழுமுகந்தருவர்கூட்டமு
மருவுறுகின்னரர்வயங்குசாலமும்
பெருகியேயெங்கணும்பிறங்குமென்பவே. (௪௧)

எழுவகையோசைகொளினியபாடலுங்
குழுமியவியங்களின்கோதிலோதையும்
வழுவறவெழுவனவவற்றைமாணுறும்
ப்பழமறையோசைகள்படுத்துமேலெழும். (௪உ)

கணிகைகளுநாணுறுங்காட்சிகொண்டிடு
மணிகளுமணிகளாலிழைத்தமாழைகொள்
பணிகளுமேனவாம்பகரும்பல்பொரு
ளணிகளும்விளங்குவவாசைகொள்ளவே. (௪௩)

மண்டபநிரைகளும்வயங்குமன்றமும்
விண்டொடுமாடநீள்விமானபந்தியு
மண்டருமழகினுக்கழகதாயெய்தி
கொண்டவர்கண்ணெலாங்கொள்ளைகொள்ளுமே. ( )

வீடுகடொறுங்குலாய்மேவும்வாய்தொறு
மாடுபல்சுடர்மணிவிளக்கமாதியாம்
பீடுறுமங்கலப்பொருள்கள்பெட்புறக்
கூடுறுபூரணகும்பமோங்குமே (சரு)

ஓவியவகைமையினொளிரச்செய்திடும்
பாவைகளாயினபலவும்பஃறெருவின்
மேவியங்குறுவனவிண்ணின்மாதரா
ராவயின்வருபவராகத்துள்வெள்கவே. (சசா)

கொடியினமானவுங்குடைகளானவும்
வடுவகல்கவரியின்வகைகளானவு
நெடியநற்றோரணநிரைகளானவு
மிடைவுறவணிபடுத்தெங்குமேயின. (சஎ)

பரிமுகநேர்குலைபரித்துநீண்டுறு
மரிநிறவார்மையுமரியபூகமு
நிரையுறநிறுத்தவேநின்றுபூந்துணர்
விரைகெழுதொடையொடுமிளிருகின்றன. (சஅ)

சங்கரனார்மகிழ்தசாங்கமோடுயர்
குங்குலுவாலெழுகோதிறீம்புகைத்
துங்கநல்விழைமணந்தொடர்ந்துமேற்கொளாப்
பொங்கியெம்மருங்கினும்பொலிந்துவிம்முவ. (சகூ)

அருந்தினரருந்தியேசெல்லவன்பொடு
மருந்துகின்றூர்களுமருந்தப்பின்முறை
யருந்தவேண்டுபவரையருந்தநோக்கிடு
மருநதுறுசாலைகளளப்பிலாதவே. (௫௦)

வந்தவரிளைப்பினைமாற்றுந்தன்செயன்
முந்துமத்தலம்வெளிமுயலக்காட்டல்போற்
சிந்தைகொண்மந்தமாருதநற்சீதநீர்ப்
பந்தர்களாயினபரந்துமல்குமே. (௫௧)

நிலத்துறுகண்ணடிநிரைகளாமெனச்
சலத்துறுமேன்மைசாறடாகமாதிய
நலத்துறுகின்றனநண்ணுவார்க்கெலாம்
புலத்துறுபயன்கொளப்பொருந்தித்தேங்குமே. ()

பீடுறுவிழவினின்மகிழும்பெற்றியா
லாடுகின்றூர்களுமாசைகொண்டெழீஇப்
பாடுகின்றூர்களும்பரமன்காட்சியை
நாடுகின்றூர்களுமெங்குநண்ணுவார். (௫௩)

ஒப்பனைசெய்திடலுறுகின்றோர்க்கெலா
மொப்பனைமுன்வகையுணர்த்துமிங்நக
ரொப்பனையொப்பனையாகுமுங்கிதை
யொப்பனையாகுமாலொழிந்தவொப்பனை. (௫௪)

எம்பிரானெங்களுக்கியற்றுழின்னருண்
மங்கலப்பொலிவெனமாண்பினேங்குறுந்
துங்கநல்லுத்தமமாகுந்தொன்னக
ரங்குறவடைந்துளானகிலமாள்பவன். (௫௫)

என்னையின்றிதுவெனவெங்குநோக்கியே
மன்னதிசயத்தினன்மகிழ்ந்தசிந்தைய
னன்னவர்யாவருமருகுசார்வுறச்
சென்னிகைகூப்பியேசெழியனின்றனன். (௫௬)

நின்றிடுமெல்லையினுயிருணின்றிடு
நன்றியுமறுகுணநலமுமும்பருள்
வென்றியுமிக்கருள்பயிலைமேலவன்
றன்றிருநீர்விழாக்கொள்ளச்சாருமே. (௫௭)

வேறு.

பயனுறு வீரிங் கொல்லைப் படர்மினி தமய மெ
ன்னு, வயமொடு தெரிப்பார் போல வான்முர சறை
ந்து செல்ல, வுயர்மறைப் பொருளா மீச னெண்புகழ்
வெவ்வேறோதி, யியல்பல புராண, மென்ன வியம்
பல வியம்பிப் பொங்க. (௫௮)

அன்பருக் கெளியான் வந்தா னமரருண் முதல்
வன் வந்தா, னின்பருள் பெருமான் வந்தா னென்று
போற்றி சின்ன மார்ப்ப, மன்பனி யமுதங் காதிற் றரு
வியால் வாக்கு மாபோற், றென்பயி லினிய கானந்
திவவியாழ்க் கையர் செய்ய. (௫௯)

கோங்குக ளரும்பிக் கஞ்சம் பொறிவரி முரலப்
பூத்த, பூங்கொடி யுசைந்தா லென்னப் பூவையர் பா
டியாட், வீங்குவெள் ளிடமின் றென்ன வெள்ளிட

வெங்கு மொய்த்துப், பாங்குறப் பணிவார் யாரும் பரிவொடு பணிந்து போத. (சுo)

மூவகை மறையுந் தத்த மூர்த்திகொண் டிசைத்தா லொப்ப, நாவிரு லவற்றைக் கொண்டோர் நலந்தர முறையி னோத, வாவிகட் காவியான வங்கணன் றனே யார்க்கும், தேவெனக் கொண்ட வன்பர் சிவ சிவ முழக்கஞ் செய்ய. (சுக)

திருமுடி யியல்பு தன்னைத் தெரிகுவன் செவ்வே யென்னுப், பிரமன்பல் லெகின மாகிப் பேணல்போ ற் கொடிகண் மல்கப், பரம்னம் விழாக்கொ ளுளின் றவனையாம் பணிந்து கொண்டு, வருதுமென் றடை ந்த சிந்து வகையென்க் கவரி துள்ள. (சுஉ)

பணிகெழு பணிகொண் மேலோ யெம்மையும் பணியாக் கொள்கென், றணுகினின் றசையும் பாந்த ளாமெனப் பீலி மொய்க்க, நணியதோ ரருளனைத்து நலந்தரு முடிமே னின்று, மணிநிழல் புரிந்தன்மான மதிக்குடை நிழற்றி யோங்க. (சுங)

தெய்வத தருக்கள் விண்ணிற் சிந்துபூ மாரி யேய்ப்ப, மெய்வரு மன்ப ரோச்சு மென்மலர் மீது வீழக், கைவரு படைக்குண் மேலாய்க் கடவுளர் யாரும் வைகும், வைவரு சூலப் புத்தேள் வான்படை முன் புசெல்ல. (சுச)

மூலமார் நிலையு ணின்ற மூர்த்தியொண் மணிப் பொன் னோடைப், பாலமா முகங்கொண் டுள்ள பண்ணவன் வலத்திற் சாரச், சேலுறு விழிகொள் யாணர்த் தெரிவையர் மருங்கு சேர, வேலொரு தடக்கை கொண்ட மேலவ னிடத்திற்சார. (௬௫)

சிவவரசேவைக்கேற்றதிகழ்பயனளிக்கவல்ல
நவமகல்பெருமைச்சண்டநாயகன்பின்புசார
வுவமையில்கயிலையின்னவுருவினோடுற்றாலொத்த
தவலருஞ்சிறப்பின்மிக்கதனிப்பெருவிடையின்மீதே

நித்தகல் யாணி நாம நிகரறத் தனக்கே கொண்ட, வுத்தமி யோடு மெம்மை யுயர்பரா னந்த வாரி, வைத்திடு மறிவா னந்த வடிவுடைக் கயிலை வள்ளன், மெத்துநல் வனப்பிற் றோன்றி வெளியுறக் காட்சி தந்தான். (௬௭)

மற்றதுபொழுதின்மன்னனுமறையவராடுமங்ஙன
னுற்றறிபொறிகளெல்லாமொள்ளியவிழியேயாகப்
பெற்றுநற்கோலக்காட்சிபெட்புமீதூரக்கண்டு
பற்றியசிவானந்தானுபவத்தினிற்படிந்தானம்மா. ()

காட்சிதந் தருளு மூர்த்தி காண்புறு பவருக் கெல்லா, மீட்சியின் மகிழ்ச்சி நல்கி வீதிவாய் வலங்கொண் டேகிச், சூட்சியின் வந்து சித்த தடத்தினிற் றொன்மை யார, மாட்சிநீர் விழாக்கொண் டுற்றான் மன்னுயிர் யாவும் வாழ. (௬௯)

ஒப்பிலாவின்பவாரியுயிர்களையழுத்தவேரூன்ற
விப்பெருநீர்விழாக்கொண்டருளியவெல்லைதன்னி
லப்பரவின்பந்தன்னிலழுந்துதலியையயாருஞ்
செப்பியசித்ததீர்த்தந்திளைத்தனர்மகிழ்வுகூர. (எ0)

வணிகர்கள் யாரு மங்கண் மற்றிது கண்டு நங்கள், பணிவரு பாக்கி யந்தான் பாக்கிய மென்று மும்மை, துணிபொடு கூறித் தம்மைத் தோற்றுமெய்ப் புளகும் போர்ப்ப, வணிமகிழ் வுததியாடி யாடினா ரனையதீர்த் தம். (எக)

இவையெலா நிகழ்ந்த பின்ன ரெம்பெரு மாட்டி யாகுஞ், சிவைவர கங்கை தன்னிற் சேர்த்ததோர் சுவேத நின்று, நவையகல் பான்மை தோன்று நற் குரு நாயகர் தம்மைக், குவையொடு நோக்கி யின்ன குளிர்மொழி கூறலுற்றான். (எஉ)

வேறு.

இன்றுநம்பிறப்பெய்தியதரும்பயனேற்ற
மின்றுநந்தவமெய்தியதரும்பயனேற்ற
மின்றுநம்மறிவெய்தியதரும்பயனேற்ற
மின்றுநம்பெருந்தேவனார்தரிசனவியலால். (எங)

விடையின்றிங்களின்விசாகநாண்மேவியவுவாவி
னடையுமுற்சவத்தீற்றினிலங்கணனருளாற்
படியினற்கயிலாயமார்பண்ணவனருமை
வடிவின்காட்சியைப்பெற்றனம்பாக்கியவசத்தால். ()

அருமையாகியவிளைசையையடைதலுஞ்சித்தப்
பெருமையாந்தடத்தீசனோடூடலும்பெற்று
மிருமையாமியநெறிந்தவரீசனோடாட
லொருமுநூறு*மாமகப்பயன்றருமெனவுரைப்பர் ( )

இவைகள்யாவையுமுங்களாலெய்தியவென்று
வுவகையாலுரைசெய்தனனுலகருளாசா
னவைகள்கேட்டுநல்வைசியரனைவருமகத்திற்
றவமகிழ்ந்தனராயினர்தலைமிசைக்கொண்டே. (எசு)

பின்னரெம்பிரான்பூசனைபெருகவேபுரிதற்
குன்னியேபெருநியதியோடுறுபொருளெல்லாந்
துன்னுமாறவட்டொகுத்திருகுரவருஞ்சொற்ற
மன்னுநான்முறைவிதிவழிவழுவறச்செய்தார். (எஎ)

கயிலைநாயகன்கரையிலாக்கருணையையெய்தச்
செயலரும்பெரும்பூசனைசெய்திடுஞ்செல்வர்
பயிலுநான்மறையந்தணர்மகிழ்ந்திடப்பரிவா
லயிலுவித்துமேலயின்றனர்தாங்களுமன்றே. (எஅ)

பின்னர்நன்னெறிமன்னவர்பின்னவர்சின்னாண்
மன்னியமகவணத்தர்தாம்வகுத்தருணெறியே
யுன்னிநின்றுதொல்லொன்பதுசித்தருமுழுவ
றன்னொடும்வழிபட்டிடுந்தனிக்குறிகளையும். (எசு)

விதிவழாவகைவழிபடலியற்றியேவேண்டும்
புதியநற்றிருப்பணிகளும்புரிமுறைபுரிந்து
நதிகொள்செஞ்சடைநம்பனார்நல்லடிக்கன்பு
பதியுநெஞ்சராய்முறையினிலுணர்நிலைபயின்றார். ( )

---

*, மா—குதிரை.

இத்திறத்தியல்சிரேட்டிகள்யாவருமீண்டிச்
சத்தியத்தெளிவின்பமாந்தனிவடிவுடைய
சுத்தசோதியாயேகமாந்தொல்பரசிவத்தைச்
சித்தபங்கயத்திருத்தியேதியானமேற்கொண்டு. ()

யோகபீடமுற்றிருந்திடுஞ்சிவபரயோகி
பாகுநற்றிருத்தில்லைமாநகர் வருமாசான்
வாகைசேர்ந்துலாந்திருவடிசிரமிசைமருவ
வாகமேதினியொன்றவீழ்ந்தறைகுவாரிதனை. (௮௨)

மூன்றுகாலமுமுணர்ந்துயிர்க்கிதஞ்செயுமுதல்வ
வான்றவைம்புலவேடரையடக்கியவைய
சான்றநின்னதோராணையைத்தரித்துறுமெங்கட்
கேன்றினிச்செயத்தகுவதென்னருளுகவென்றார். ()

என்றவேண்டுரைகேட்டருளிறைசிவஞான
மொன்றிநன்மைசெய்விருப்புறுமுளத்தினிரினிமேற்
றுன்றுகாரியநிகழ்ச்சிகளனைத்தையுஞ்சூழ்ந்து
மன்றவோதுதுங்கேண்மினென்றின்னனவகுப்பான.

நீங்களிவ்வுயர்வைப்பினினிகழநீடூழி
யோங்கிவாழுமின்கயிலைநன்னுதலுமொருபேர்
பாங்கினுற்றிடுபரம்பொருளாகியபகவன்
றூங்குசேவடிதகவொடுபூசிமின்சால. (௮௫)

நவபெரும்பெயர்ச்சித்தர்செய்பருச்சனைநயந்து
சிவனமர்ந்தருடிவ்வியக்குறிகண்மற்றுளவா
மெலையுமாய்குயர்தீர்த்தங்களனையவுமுறையி
னுவகையன்பொடுஞ்சேவையையுஞற்றுமினூரவீர். ()

ஈசநற்சிவகுரவனையீசனுவுன்னிப்
பூசைசெய்மினென்றும்மவனுணையைப்பே ற்ற
லாசில்.-தநுஞ்சிரினுக்கதிக்ரணமாம்
பேசினிங்கிதன்மேலுமேமபெருகுறுஞ்செல்வம்.' ()

யாமிங்குற்றபேசிதியாவுநன்றிருந்தனவதுபோ
லாமிங்கின்னுமுங்களுக்கிலையையமேமமக்குக்
காமங்கன்றியவில்லறவிருப்பிலைகாமுற்
றேமங்கைவருயோகமேலெங்கெனுமுறுவாம். ()

என்னுவியம்பிச்சிவயோகமியற்றுந்தீர்த்தன்
முன்னுவணங்கும்வணிகர்க்கொளிமுந்தும்பூதி
டீ ·.ஞகநல்கிப்பெருகாசிப்லவும்பேசித் [ன்.
தென்னுடுசோலைத்திருத்தில்லையிற்சென்றுசேர்ந்தா

தாவாதநீர்மையரசன்மகிழ்தக்கசெல்வர்
காவாருநல்லவிளைசைத்திருக்கன்னிமூதூர்க்
கோவாதுமிக்கதொருசேய்மையின்றேங்கும்பாங்கர்
ப்ராவாழிருக்கைகுரவற்குவகுத்துவைத்தே. (கூ0)

தேசாருகின்றசிவஞானந்திகழவந்த
ஷசானதேவனிருபாதமிறைஞ்சிநல்ல
நேசாதிகொண்டுதிருவைந்தெழுத்தென்னநீடிப்
பேசாதியானமனுவுண்மைமுதலபெற்றூர். , (கூக)

பாராளுமன்னுமகிழபூதநுவைபாாதது்யாக
வேராளுஞ்சித்தரியல்பூசனையேற்றவொன்பான்
சீராளுமூர்கடமையும்மவர்சேரநல்கி
நீராளுஞ்செல்வமதுராபுரிநேர்ந்துவாழ்ந்தான். ()

மெய்யாதி மூன்றுமளித்தன்று தொட்டாகமேலை
யையானனங்கொளமலன்வடிவானவையன்
செய்யாணையன்பிற்றலைக்கொண்டுசெயல்கணெல்லா
மெய்யாநடத்திவதிந்தார்பயன்மூந்துநாய்கர். (௬௪)
தேவோங்குசிந்தைத்தனிகர்தமசெல்வமெல்லா
நாவோங்குவாய்மைக்குருபுங்கவனன்மையாலே
மாவோங்குகின்றவளரும்மதிமாட்சிபோலப்
பூவோங்கவைகமெுறுமோங்கிப்பொலியவாழ்ந்தார்.

வேறு.

என்னவே கடத்தில் வந்தோ னிசைத்தனன் முனி வர்க் கென்ன, வன்னிசேர் குண்டம் வந்தோன் மற் றவை யாவுங்கூற, வன்னவை கேட்டு நைமி சாரணி யத்து மேலோர், பன்னரும் புராணம் வல்ல பகவ னைப் பூசை செய்தார். (௬௫)

இந்தநற் புராணங் கேட்போ ரிசைப்பவர் யார்க்கு முண்மை, தந்தநான் மறைக ளோத்துந் தனிப்பர சிவன்மேற் பத்தி, செந்திருச் செல்வ முள்ளத் திகழ் வொடு மரோக மென்ன, வந்தநற் பயன்க ளோங்கிப் பதந்தொறும் வளருந் திண்ணம். (௬௬)

மகவினை விழைந்தோர் சேர்வர் வான்பொருள் வேட்டோர் சார்வர், புகழினை நசைந்தோர் கொள் வர் பொற்புறு கன்னி தன்னை, யகமுற விரும்ப லுற் றோ ரடைகுவ ரிளைப்பி னீங்குந், தகவினர் துயர மெல்லாந் தணந்துநன் மகிழ்வின் வாழ்வார். (௬௭)

அந்தணராக்கள்வாழ்கவடைவின்வான்மாரிபெய்க
நந்தலில்வளங்கண்மல்கநாட்டுநல்லரசன்செங்கோ
லுந்துகவுயிர்களெல்லாமோங்குகவறங்கள்யாவு
முந்துகசைவநீதிமுதிருக்கபுவனமுற்றும். (௬௮)

களிதருங்காட்சிமேயகயிலைநாயகனார்செம்பொ
னளவில்சீரடிகள்வாழ்கநித்யகல்யாணியம்மை
யொளிர்திருமுகத்திற்பூத்தவொப்பிலாக்கருணைவாழ்க
விளைசைமாநகரம்வாழ்கவிசைநகரத்தார்வாழ்க. ()

ஈசானசிவாசாரியப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௦௬௦.

இளைசைப்புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.